Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 123 • 17.12.2017



## அழகிகளை வைத்து மொசாட் விரித்த இரகசிய வலை



## காதலியுடன் குண்டை வெடிக்கவைத்த புலிகளின் மூத்த தளபதி!

## முஸ்லிம் காங்கிரஸ் மூக்குடைபடலாம்!

இந்தியாவின் கடைசிகட்ட இரகசிய நிபந்தனை

# பொட்டம்மானை ஒப்படைத்தால் யுத்தத்தை நிறுத்தலாம்!

## அரசியல் மல்லுக்கட்டலில் யாழ்ப்பாணம் தவறவிட்ட 1000 மில்லியன்!




# உள்ளூராட்சி தேர்தலில் யார் வெல்வார்?

வடக்கு, கிழக்கு 'பல்ஸ்' ரிப்போர்ட்

மெல்பேன் அவுஸ்திரேலியாவிலிருந்து ஒலிபரப்பாகும் உலகத் தமிழர்களின் அபிமான வானொலி சங்கநாதம்
பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் கேட்கத் தவறாதீர்கள்.

சங்கநாதம் SANGANATHAM.NET.AU


யாழ் நேயர்களுக்காக நேயர் விருப்பம், பிறந்த நாள் வாழ்த்துக்கள் மற்றும் திருமண வாழத்துக்கள் என்பன இலவசமாக ஒலிபரப்பாகும். மெல்பேன் நேயர்கள் 97.1FM மற்றும் அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபன (24 மணி) ஒலிபரப்பு சேவையூடாகவும் சர்வதேச நேயர்கள் WWW.SNAGANATHAM .NET.AU மற்றும் 3MDR.COM.AU ஊடாகவும் கேட்டு மகிழலாம்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு





coustomer is king







# TOPAZ

நிறுவனத்தின் 3ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிறைவாண்டு நிகழ்வும் மற்றும் சமூக நலன் திட்டமாக யாழ் கைதடியில் அமைந்துள்ள விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெற்றது.








ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு சற்று முன்பு

## ராஜீவ் காந்தி கொலை 13
எப்படி... என்ன நடந்தது?

# இந்தியகரையில் இறங்கிய இரண்டு பெண்புலிகள்!

கே.ராகோத்தமன்

திட்டத்தை நடத்தி முடிக்கும் பணி, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் வசம் ஒப்படைக்கப்பட்டது.

பொட்டு அம்மான், இந்தப் பணியை இந்தியாவில் மேற்கொண்டு செய்து முடிக்கும் பொறுப்பைத் தனது நம்பிக்கைக்குரிய தளபதிகளுள் ஒருவரான சிவராசா மாஸ்டரிடம் அளித்தார்.

ஒற்றைக்கண் சிவராசன் என்று பின்னாளில் அறியப்பட்ட சிவராசா மாஸ்டருக்கு ரகுவரன் என்று இன்னொரு பெயரும் உண்டு. கண்ணாடி அண்ணா என்றும் அவரை அழைப்பார்கள். (அவருக்கு ஒற்றைக் கண் தான். ஆனால் சென்னையில் உள்ள ஒரு டாக்டர் அவருக்கு இரு கண்களிலும் பார்வை நன்றாக உள்ளதாகச் சான்றிதழ் அளித்ததன் பேரில்தான் அவருக்கு மீனம்பாக்கம் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது!

பிறகு நாங்கள் அந்த டாக்டரைப் பிடித்து விசாரிக்கப் போக, அவர் ராஜிவ் காந்தியின் பரம ரசிகர் என்பதும் ராஜிவுக்குக் கடிதங்கள் எல்லாம் எழுதியிருக்கிறார் என்பதும் தெரியவந்தது விநோதமான சோகம்.)

முன்னதாகத் தமிழ்நாட்டில், சென்னை கோடம்பாக்கத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் அலுவலகத்தில் வைத்து நிகழ்த்தப்பட்ட பத்மநாபா கொலையை முன்னின்று நடத்தியவர்கள் டேவிட், ரகு என்கிற இருவர் என்று சொல்லப்பட்டது.

அந்த வழக்கு ஆரம்பிக்கப்பட்டதோடு சரி. யாரையும் கைது செய்யவில்லை. பத்மநாபா இறந்தார். கொன்றது விடுதலைப் புலிகள் என்னும் தகவலுடன் அப்படியே நின்றது. ராஜிவ் காந்தி கொலை வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு எடுத்த முதல் நாளே, தமிழகத்தில் அதற்கு முன் நிகழ்த்தப்பட்ட பத்மநாபா கொலை வழக்கை மீண்டும் எடுத்துத் தூசு தட்ட வேண்டும் என்று எங்கள் அதிகாரிகள் பலர் கருத்துத் தெரிவித்திருந்தார்கள்.

நாங்கள் அதை விசாரிக்கத் தொடங்கிய போதும் 'ரகு' என்கிற பெயர்தான் இருந்ததே தவிர ஒரு புகைப்படமோ, மேல் விவரங்கள் எதுவுமோ கிடையாது.

பத்மநாபாவைக் கொல்வதற்கு உபயோகித்த துப்பாக்கியிலிருந்து பாய்ந்த உலோகக் குண்டுகள் சிலவற்றை எடுத்து வைத்திருந்தார்கள். அந்த அலுவலகத்தில் வெடிக்காமல் இருந்த ஒரு ஆர்.டி.எக்ஸையும் கைப்பற்றி இருந்தார்கள்.

ராஜிவைக் கொல்லப் பயன்படுத்தப்பட்ட ஆர்.டி.எக்ஸ்., அவரது உடலைத் துளைத்திருந்த உலோகக் குண்டுகளும் இதுவும் பொருந்திப் போயின என்பதுதான் இரண்டுக்கும் இடையில் இருந்த ஒற்றுமை.

அந்த வழக்கில் உளவுத்துறை சொன்ன ரகு என்கிற பெயருக்குரிய நபர்தான் இந்த வழக்கில் சம்பந்தப்படும் ரகுவரன் என்கிற சிவராஜா மாஸ்டரா? தெரியாது. விசாரிக்க வேண்டும்.

### பத்மநாபா கொலைக்கு காரணமான சிவராசன்தான் ராஜீவ் கொலை திட்டத்தின் சூத்திரதாரி!!

சிவராசன்தான் திட்டத்தின் சூத்திரதாரி என்பது நாங்கள் கைது செய்து விசாரித்துக்கொண்டிருந்த நளினி, பாக்கியநாதன், பத்மா பேரறிவாளன், சுபா சுந்தரம் போன்றவர்களின் வாக்குமூலங்கள் மூலம் தெரிந்திருந்தது.

ஆனால் அவர்தான் பத்மநாபா கொலைக்கும் காரணம் என்பது பின்னால் கைதான சின்ன சாந்தன் மூலம்தான் தெரியவந்தது.

அதைப் பிறகு பார்க்கலாம். இப்போது சிவராசன். அவரது திட்டம். பத்மநாபா கொலைச் சம்பவத்துக்குச் சற்று முன்னதாக சிவராசன் தமிழகம் வந்தார். திட்டம் தீட்டி, நடத்தி முடித்திருக்கிறார். பிறகு திரும்பவும் இலங்கைக்குச் சென்று மீண்டும் தமிழகம் திரும்பியிருக்கிறார். தமிழகத்தில் இருந்த விடுதலைப் புலிகளிலேயே சிவராசன் மிகவும் சீனியர் என்று கருதப்பட்டவர்.

அமைதிப்படை இலங்கையில் புலிகளுடன் சண்டையிட்டுக்கொண்டிருந்த போது துணிச்சலாக யாழ்ப்பாண நகருக்குள்ளேயே இருந்து தன் வேலைகளை நிறுத்தாமல் பார்த்தவர் சிவராசன் என்று முருகன் தன் வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறார்.

அது ஒருபுறமிருக்க, சிவராசன் தமிழகத்தில் தன்னைத்தயார்ப்படுத்திக்கொண்டிருந்த சமயம் அது. மார்ச் 1991 இந்திய பொதுத்தேர்தல்களுக்கான அறிவிப்பைத் தேர்தல் கமிஷன் வெளியிட்டது.

ராஜிவ் எப்படியும் பிரசாரத்துக்காகத் தமிழகம் வருவார், வேலையை முடித்துவிடலாம் என்று சிவராசன் தீவிரமாக அதற்கான ஆயத்தங்களை அப்போது செய்யத் தொடங்கியிருந்தார்.

அப்போது பொட்டு அம்மானிடமிருந்து அவருக்கு ஒரு ரகசியச் செய்தி வந்தது. (அவர்கள் வயர்லெஸ் தொடர்பு வைத்திருந்தார்கள்.) நாம் இதை டெல்லியில் செய்ய முடியுமா? ஒரு வரி வினா. அதற்கு சிவராசன் அனுப்பிய பதில் ஒருவரி 'எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இங்கேயே முடியும்.'

ஆனால் மேற்கொண்டு அது பற்றி ஏதும் விவாதிக்காமல், பொட்டு அம்மான் ஏப்ரல் இறுதியில் ஆதிரை என்னும் பெண்ணை, கனகசபாபதி என்னும் ஒரு வயதான மனிதருடன் இலங்கையிலிருந்து தமிழகத்தின் கோடியக்கரைக்கு அனுப்பி வைத்தார்.

ராஜிவைக் கொல்வதற்காக இந்திய மண்ணுக்கு வந்த முதல் தற்கொலைப் போராளி ஆதிரை என்கிற சோனியா (இயக்கப் பெயர்) தான். சுபாவும் தணுவும் பின்னால் வருகிறவர்களே.

ஆதிரையும் கனகசபாபதியும் கோடியக்கரையில் கால் வைத்ததும் சென்னையில் இருந்த சிவராசனுக்குப் பொட்டு அம்மான் அவர்கள் வந்திருக்கும் விவரத்தைச் சொல்லி, டெல்லியில் அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யச் சொல்லி உத்தரவிட்டார்.

இந்தியாவில் ராஜிவ் காந்தியைக் கொல்வதற்கான பொறுப்பு சிவராசனுடையது.

தமிழகத்தில் முடிக்கலாம் என்பது



பத்மநாபா

அவரது விருப்பம். ஆனால் பொட்டு அம்மானின் உத்தரவின்படிதான் அவர் நடந்துகொண்டாக வேண்டும்.

எனவே மேற்கொண்டு இது பற்றி விவாதிக்காமல் சிவராசன், ஆதிரையையும் கனகசபாபதியையும் சென்னைக்கு அழைத்து வந்து தாம்பரத்தில் இருந்த டாக்டர் கருணாகரன் என்பவர் வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடு செய்தார்.

கையோடு விருகம்பாக்கத்தில் வசித்து வந்த சரவணன் என்கிற வாணன் என்ற ஒரு கடத்தல்காரர் மூலம் (இவர் ஒரு விடுதலைப் புலி அனுதாபி. சிவராசனுக்கு நன்கு பழக்கமானவர்) கனகசபாபதியை டெல்லிக்கு அனுப்பவும் ஏற்பாடு செய்தார்.

டெல்லியில் அவர்கள் முதலில் ஒரு வீடு எடுத்துத் தங்கவேண்டும். ஆதிரை ஹிந்தி படிக்க வந்த பெண் என்பதுபோல் காட்டிக்கொள்ள வேண்டும். அதற்காக எங்காவது வகுப்பில் சேரவேண்டும்.

இதற்கான உதவிகளை அங்கே வைகோவின் நண்பரான தியாகராஜன் என்பவர் செய்வார் என்று சொல்லி, தியாகராஜனின் முகவரியைக் கனகசபாபதியிடம் அளித்தார் சிவராசன்.

இந்தத் தியாகராஜன் என்பவர் வைகோவுக்கு மிகவும் வேண்டியவர். டெல்லியில் உள்ள தமிழ்நாடு ஹவுஸில் மிகுந்த செல்வாக்கு உள்ளவர். **(தொடரும்)**





# ‘சம்பந்தருக்கும் சங்கரியாருக்குமிடையில் ஒரு மஞ்சாடி அளவுதான் வித்தியாசம்!’

## வாசலில் வைத்தே ரெலோவை வெருட்டிய ஆனந்தசங்கரி


கருடன்

கருடர் வந்ததும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் தினசரி பத்திரிகைகளின் கடந்தவார இதழ்களை எடுத்துவரும்படி உத்தரவிட்டார். அனைத்தையும் கவனமாக பார்த்தவர், ஒரு செய்தியின் கீழ் கோடிட்டார்.

**“சங்கானை பிரதேசசபையில் புளொட்டுடன் ஆட்சிப்பங்கீடு செய்ததில் கட்சிக்குள்ளும், பொதுமக்கள் மத்தியிலும் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது”.** இதுதான் அவர் கோடிட்ட வசனம்.


“ம்... உள்ளூராட்சி தேர்தல் ஆசன பங்கீட்டில் கூட்டமைப்பிற்குள் சரவணபவன் எம்.பி குடைச்சல் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவரது சில செயற்பாடுகள் தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர்களிற்கு பிடிக்கவில்லை. சில பத்திரிகை செய்திகளும் அவர்களை எரிச்சல்படுத்தியுள்ளது. அதனால்தான் கடந்தவார பத்திரிகைகளை பார்த்தேன். இதுதான் அந்த செய்தி“ என்றார்.

“ஓஹோ... ஒரு பத்திரிகை செய்திக்கு பின்னால் இவ்வளவு உள்குத்து இருக்கிறதா? விபரமாக சொல்லுங்கள்”


வட்டுக்கோட்டை தொகுதி கூட்டமொன்றில் சரவணபவன், மாவை

### பிரிவிற்கும் தயாராக தமிழரசுக்கட்சி

“இந்த விசயத்தை பின்னர் சொல்கிறேன். முதலில் 09ம் திகதி கொழும்பில் நடந்த


வித்தியாதரன்

கூட்டமைப்பின் ஆசனப்பங்கீட்டு பேச்சு பற்றிய சில தகவல்களை சொல்ல வேண்டும். இந்த கூட்டத்தில் மூன்று கட்சிகளின் உயர்மட்ட தலைவர்கள்தான் கலந்து கொண்டிருந்தனர். 05ம் திகதி கல்வியங்காட்டிலுள்ள வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் வீட்டில் நடந்த சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் இரண்டாம்மட்ட தலைவர்களும் கும்பலாக வந்ததே சிக்கலிற்கு காரணமென்பதால், இந்த கூட்டத்தின் கட்சிகளின் மிக முக்கிய உறுப்பினர்கள் மட்டும் கலந்துகொள்வதென முன்னரே முடிவெடுக்கப்பட்டது.

ரெலோ பகிரங்கமாக தமிழரசுக்கட்சியை விமர்சித்து கொண்டிருந்தபோதும், இந்த கூட்டம் அமைதியாகவே நடந்து முடிந்தது”

“05ம் திகதி கூட்டத்தின் பின் தமிழரசுக்கட்சியுடன் இனி தேர்தல் உடன்பாடே இல்லையென்றல்லவா ரெலோ சொன்னது”

“ம்... அரசியலில் இதெல்லாம் சகஜம்தான். ஆனால் இதற்குள்ளும் சில உள்மோதல்கள் உள்ளன. தமிழரசுக்கட்சியுடன் இனி தேர்தல் உடன்படிக்கையே இல்லையென ரெலோ அறிவித்தது. இதை அறிவித்தது கட்சியின் செயலாளர் என்.சிறிகாந்தா. ஆனால், இதேநேரத்தில் தமிழரசுக்கட்சியுடன் ஒரு இணக்கமான இரகசிய பேச்சை ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்செய்துகொண்டிருந்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பை விட்டு ரெலோ வெளியேறாதென்பதை அப்பொழுதே தமிழரசுக்கட்சி அறிந்து வைத்திருந்தது.

தமிழரசுக்கட்சியுடன் தேர்தல் உடன்பாடில்லையென்ற அறிவிப்பு செல்வம் அடைக்கலநாதனின் சம்மதத்துடன்தான் சிறிகாந்தாவால் வெளியிடப்பட்டது.

‘தான் இப்படியொரு அறிக்கைவிட, எனக்கு தெரியாமல் கட்சித்தலைவர் தமிழரசுக்கட்சியுடன் பேசி இணக்கத்திற்கு வந்தது சரியல்ல’ என சிறிகாந்தா கொதித்து போயுள்ளார். அதை செல்வம் அடைக்கலநாதனிடம் சொல்லிவிட்டதாகவும் தகவல்”

“கட்சிக்குள்ளேயே சிக்கலா?”

“09ம் திகதி கூட்டத்தில் தொகுதி பங்கீட்டின்போது ஒருகட்டத்தில் இணக்கம் ஏற்படவில்லை. அப்போது சிறிகாந்தா ‘தமிழரசுக்கட்சி விட்டுக்கொடுக்காமல் இப்படி நடந்தால் நாம் தனித்து போட்டியிடவோ, அல்லது தேர்தலில் இருந்து ஒதுங்கவோ வேண்டி வரும்’ என எச்சரித்தார். உடனே சுமந்திரன் ‘அதுவும் நல்ல யோசனைதான். மூன்று கட்சிகளும் தனித்து போட்டியிடுவதுதான் நல்லது. எல்லா ஆசனங்களையும் கைப்பற்றலாம். பின்னர் கூட்டமைப்பாக செயற்படலாம்’ என சொன்னார். மாவை சேனாதிராசாவும் இதை ஆமோதித்தார்.

ஆனால் சிறிகாந்தா இதை ஏற்கவில்லை. தனித்தனியாக போட்டியிட பிரிந்தால், அதற்கு பிறகு சேர முடியாது. தேர்தல் மேடையில் ஒரு கட்சியை மற்ற கட்சி விமர்சிக்கும்.காரசாரமாக விமர்சித்துவிட்டு எப்படி இணைந்து செயற்படலாமென கேட்டார்.

அப்போது சம்பந்தன் குறுக்கிட்டு, இப்படியான யோசனைகளை விட்டுவிட்டு, ஆசனப்பங்கீட்டை பேசி முடியுங்கள் என கண்டிப்பாக சொல்லி, சிக்கலில்லாமல் கூட்டத்தை முடித்து வைத்தார். தமிழரசுக் கட்சியினர் இப்பொழுதும் தனிவழியில் செல்லும் ஆர்வத்துடன்தான் இருக்கிறார்கள்”

### ரெலோவை கலைக்கச் சொன்ன ஆனந்தசங்கரி

“தமிழரசுக்கட்சியுடன் தேர்தல் கூட்டு இல்லையென்ற பின், உதயசூரியன் கூட்டணியையும் சந்திக்க சென்றார்களே ரெலோ. என்ன பேசினார்கள்?”

“மற்ற கட்சிகளின் நாடித்துடிப்பை பார்ப்பதுதான் நோக்கம். தமிழரசுக்கட்சி திருப்தியான ஆசனப்பங்கீடு செய்தால் மீண்டும் கூட்டமைப்பாக இயங்க தயாராக இருக்கிறார்கள் என்பது சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு தெரியும். முதலில் கூட்டமைப்பை விட்டு வெளியில் வாருங்கள், அதற்கு பின்னர் மற்ற விசயங்களை பார்க்கலாமென சுரேஷ் சொல்லிவிட்டார்.

அடுத்ததாக தமிழர் விடுதலை கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரியிடம் சென்றார்கள். ரெலோ பிரமுகர்கள் தனது அலுவலகத்திற்குள் நுழைந்ததும், வாசல்வரை சென்று சங்கரியார் வரவேற்றார். ரெலோ பிரதிநிதிகளை பார்த்து அவர் சொன்ன முதல் வசனம் ‘சரி வாங்கோ வாங்கோ... இனி ஒன்றும் செய்ய முடியாது. உங்கள் கட்சியை கலைத்துவிட்டு எமது கட்சியில் வந்து இணைந்து கொள்ளுங்கள்’ என்றிருக்கிறார். போனவர்கள் மிரண்டு விட்டனர். அதில் போன ஒரு பிரமுகர் சொன்னார் ‘சம்பந்தருக்கும் சங்கரியாருக்குமிடையில் ஒரு மஞ்சாடியளவு வித்தியாசம்தான் உள்ளது. அங்க போனபிறகுதான் நம்மவர்களிற்கு அது புரிந்தது’ என.

09ம் திகதி கூட்டத்தில் பெரும்பாலும் எல்லா இடங்களிலும் சுமுகமான இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. புளொட் தமிழரசுக்கட்சிக்குள்தான் யாழ்ப்பாணத்தில் இழுபறி நிலவியது.

புளொட் வலிகாமம் தெற்கு (உடுவில்), வலிகாமம் மேற்கு (சுழிபுரம்) பிரதேசசபைகளை கோரியது. ஆனால் தமிழரசுக்கட்சி தலைவர் மாவை.சேனாதிராசா சிக்கலில் மாட்டியிருந்தார். உடுவில் சபையில் தவிசாளராக இருந்த பிரகாஸ், மாவை சேனாதிராசாவிற்கு நெருக்கமானவர். இம்முறையும் தவிசாளர் பதவி அவருக்குத்தான் என மாவை வாக்களித்ததாக கூறப்படுகிறது.

### சரவணபவன் ஏற்படுத்திய குழப்பங்கள்

புளொட் அதை உரிமைகோரியதை தமிழரசுக்கட்சி ரசிக்கவில்லை. ஆனாலும் புளொட் தலைவர் சித்தார்த்தனின் தொகுதி அது என்பதால் புளொட்டும்



கருடன் பக்கம்

கடைசிவரை விட்டுக்கொடுக்கவில்லை. அதுகூட பரவாயில்லை, சுழிபுரம் விவகாரத்தில்தான் அதிகமாக மாவை சிரமப்பட்டார். தமிழரசுக்கட்சியின் எம்.பி சரவணபவனின் வட்டுக்கோட்டை தொகுதிக்குள் அந்த பகுதி வருகிறது. தனது தொகுதிக்குள் புளொட் ஒரு பிரதேசசபையை கைப்பற்றினால், பாராளுமன்ற தேர்தலில் தனக்கு சிக்கலை ஏற்படுத்துமென சரவணபவன் நினைத்தார். 2015 தேர்தலிலேயே நூலிழையில்தான் வென்றிருந்தார். இதனால், சுழிபுரத்தை புளொட்டுக்கு கொடுக்ககூடாதென்பதில் மிக கவனமாக இருந்தார்.

தொகுதி பங்கீட்டில், சுழிபுரம் புளொட்டிற்கு சென்றுவிட்டதென்பதும், மாவை சேனாதிராசாவை தொடர்பு கொண்டு கடுமையான தர்க்கப்பட்டுள்ளார். சுழிபுரத்தை புளொட்டிற்கு கொடுத்தால், தனது பத்திரிகை மூலம் எதிர்மறையான பிரசாரத்தில் ஈடுபடுவதாக மிரட்டியதாகவும் கூறப்படுகிறது. தமிழரசுக் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள்தான் இந்த தகவலை புளொட் தலைமைக்கும் கூறியுள்ளனர்.

‘சரவணபவனின் விருப்பத்தை மீறி சுழிபுரத்தை உங்களிற்கு தந்தால், அவரது பத்திரிகை மூலம் தாக்குவார். இக்கட்டான நிலைமையில் இருக்கிறோம்’ என தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர்கள் சித்தார்த்தனிடம் சொன்னார்கள். ஆனாலும் சித்தார்த்தன் சம்மதிக்கவில்லை. ‘வடக்கு, கிழக்கில் தமக்கு முழுமையாக ஒரு சபை மட்டும்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. அதையும் விட்டுதர கோருவது நியாய

தொடர்ச்சி , அடுத்தபக்கம்...

# தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

**தொடர்புகளிற்கு**

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com

மில்லாதது. கூட்டமைப்பை விட்டு வெளியேறுகிறோம் என நாங்களும் அடம்பிடித்தால்தான் அதிக சபை தருவீர்களா?. சரவணபவன் விவகாரம் உங்களின் உட்கட்சி பிரச்சனை. சுழிபுரத்தை விட்டுத்தர முடியாது' என நேராகவே சொல்லியுள்ளார்.

சுழிபுரம் விவகாரம் பேச்சுவார்த்தையில் இருக்கும்போதே, 12ம் திகதி சரவணபவனிற்கு சொந்தமான பத்திரிகையில், சங்கானையை ( வலிகாமம் மேற்கு) தமிழரசுக்கட்சி எடுத்துக்கொண்டது என பொருத்தமில்லாத செய்தி வெளியானது தமிழரசுகட்சி தலைமைக்கு அதிருப்தியை உண்டு பண்ணியது.

பின்னர் 13ம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சி புளொட் சந்திப்பில், சுழிபுரத்தை நாங்கள் எடுக்கிறோம் என கிட்டத்தட்ட பறித்தெடுக்கும் விதத்தில் மாவை சேனாதிராசா சொன்னார். ஏற்கனவே கூட்டமைப்பு கட்சிகளிற்கிடையில் ஏற்பட்ட உடன்படிக்கையை மீறும் செயல் அது. கூட்டமைப்பிற்குள் சிக்கல் வருவதற்கு தமிழரசுக்கட்சியின் சில தலைவர்கள்தான் காரணமென முன்னரும் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா, நோட் திஸ் பொயின்ற்!

தலைமையின் அதிருப்தியை அதிகப்படுத்தியதற்கு இன்னொரு காரணமும் உள்ளது.யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் யார் என்பதில் தமிழரசுக்கட்சி தலைமை எடுத்த தீர்மானத்தையும் சரவணபவன் கிட்டத்தட்ட மாற்றிவிட்டார்"

"கட்சியின் தீர்மானத்தை சரவணபவன் மாற்றினாரா? கட்சி யாரை முதல்வராக்க தீர்மானித்திருந்தது?"


மாவை சேனாதிராசா

"மாநகரசபை முதல்வர் வேட்பாளர் பட்டியலில் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்பதை முன்னரும் கூறியிருந்தேன். அதில் முதன்மையானவராக .இருந்தார் காலைக்கதிர் பத்திரிகை ஆசிரியர் வித்தியாதரன். அடுத்த மாநகரசபை முதல்வர் அவர்தான் என கட்சி தீர்மானித்து, சம்பந்தனிற்கும் அறிவித்தது. அது நல்ல தெரிவென சம்பந்தரும் சம்மதம் தெரிவித்துவிட்டார்.

வித்தியாதரனை முதல்வராக்குவதை சரவணபவன் கடுமையாக எதிர்த்துள்ளார். இருவரும் மச்சான் உறவானவர்கள்தான். என்றாலும், ஏதோ பிணக்கினால் வித்தியாதரன் முதல்வராகுவதை சரவணபவன் எதிர்த்தார். சங்கானை விவகாரத்தை போலவே அங்கும் எதிர்ப்பை தெரிவித்ததாக கட்சி முக்கியஸ்தர்கள் கூறுகிறார்கள். வித்தியாதரன்தான் முதல்வர் என சம்பந்தனே தீர்மானித்ததால்,இரண்டாவது தெரிவை தமிழரசுக்கட்சி வைத்திருக்கவில்லை.

கடந்த வாரத்தில்தான் அடுத்த வேட்பாளர் யார் என்ற குழப்பம் வந்தது. சீ.வீ.கே.சிவஞானத்தை முதல்வராகுமாறு மாவை சேனாதிராசா கேட்டார். என்றாலும், சிவஞானத்திற்கு மீண்டும் முதல்வராகும் விருப்பம் இல்லை என மறுத்துவிட்டார்.

**காத்திருந்து களைத்த தமிழர் சமூக ஜனநாயக கட்சி**

வித்தியாதரனும் இல்லை,சிவஞானமும் இல்லையென்றால், தமிழரசுக்கட்சியின் அடுத்த தெரிவு வடமாகாணசபை உறுப்பினர் ஆனோல்ட்டாகத்தான் இருக்கும். எந்த நேரமும் மாகாணசபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய தயாராக இருக்கும்படி ஆனோல்ட்டிற்கு கட்சித்தலைமை கூறியுள்ளது."

"தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் தமிழர் சமூக ஜனநாயக கட்சியும் (ஈ.பி.ஆர். எல்.எவ் பத்மநாபா அணி) வந்து விட்டது, தமிழரசுக்கட்சியின் ஆசன ஒதுக்கீட்டில் தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்றீரே.... ஆனால், அவர்கள் தனித்து போட்டியிடுகிறார்களோ?"

"ம்... சாவகச்சேரி நகரசபைக்கு 12ம் திகதி தமிழர் சமூக ஜனநாயக கட்சி கட்டுப்பணம் செலுத்தியது. கட்டுப்பணம் செலுத்த போகு முன்னரும், செலுத்திய பின்னரும் தமிழரசுக்கட்சி தலைவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றனர். ஆனால் யாரும் தொடர்பில் வரவில்லை.

தமிழரசுக்கட்சியின் அத்தனை முக்கிய தலைவர்களும்பத்மநாபா அணியுடன்பேசி, இந்த இணைவை உறுதிசெய்திருந்தனர். வடக்கில் மொத்தமாக 50 வேட்பாளர்களை அந்த கட்சி சார்பில் இறக்கலாமென்றும் வாக்களித்திருந்தனர். இதற்கான பட்டியல் ஒன்றை பத்மநாபா அணி கொடுத்துமிருந்தது. அந்த பட்டியல் தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு சென்ற பின்னரே, தொடர்பை துண்டித்து விட்டனர்.

சாவகச்சேரி நகரசபைக்கான கட்டுப் பணம் செலுத்தும் காலக்கெடு 14ம் திகதியுடன் முடியும் நிலையில் 12ம் திகதி பத்மநாபா அணி கட்டுப் பணம் செலுத்தியது. பத்மநாபா அணியின் முக்கியஸ்தராக இருந்தவர் சுபத்திரன். விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப் பட்டவர். அவர் நுணாவிலை சேர்ந்தவர். தென்மராட்சியில் அவருக்கு ஆதரவு தளம் இருப்பதாக அந்த கட்சி நினைக்கிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பிற்காக காத்திருந்து ஓரிரண்டு உறுப்பினர்களை பெறும் வாய்ப்பை இழக்கத் தேவையில்லையென முடிவெடுத்து, கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இந்தவாரம் குறிப்பிடும்படியான செய்திகள் இவைதான். அடுத்த வாரம் புதிய செய்திகளுடன் சந்திக்கிறேன்" என்றபடி கருடர் பறந்து சென்றார்.

## ஆசாரி விட்டாலும், பூசாரிகள் விடமாட்டார்கள்!

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிற்குள் ஆசனப்பங்கீடு பற்றிய உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் பொறுப்பானவர்கள் மூலம் வேட்பாளர் தேர்வு நடந்து கொண்டிருந்தது. சாவகச்சேரி நகரசபை வேட்பாளர் தேர்விற்கு தமிழரசுக்கட்சியின் அருந்தவபாலன் பொறுப்பாக இருந்தார். ரெலோ, புளொட் அமைப்புக்களிற்கும் அங்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இரண்டு அமைப்புக்களும் தமது வேட்பாளர் பட்டியலை அருந்தவபாலனிற்கு அனுப்பியுள்ளன. "ஏற்கனவே வேட்பாளர்களை நாம் தேர்வுசெய்துவிட்டோம். உங்கள் தெரிவுகளை ஏற்க முடியாது" என அருந்தவபாலன் அந்த பட்டியலை ஏற்க மறுத்துவிட்டார். பின்னர் மாவை சேனாதிராசாவின் கவனத்திற்கு இந்த விடயத்தை இரண்டு அமைப்புக்களும் கொண்டு சென்ற பின்னர்தான், அருந்தவபாலன் வழிக்கு வந்தார்!

இதேபோல, அம்பாறை மாவட்ட தேர்தல் விவகாரங்களை கோடீஸ்வரன் எம்.பி கவனித்து வந்தார். 1980களின் நடுப்பகுதியில் இருந்து செயற்பட்டு வரும் போராளியொருவரை புளொட் தனது பட்டியலில் களமிறக்கியது. புளொட் வேட்பாளர் விபரம் கோடீஸ்வரனிடம் போக "கண்டபடி யாரையும் போட முடியாது. அவர் தகுதியானவரா என நாங்கள் ஓகே பண்ணுற ஆட்களைதான் போடலாம்" என்றுள்ளார். நேற்று வந்தவர்கள் எல்லாம் போராளிகளை தகுதிபார்க்குமளவிற்கு வந்துவிட்டார்களா என புளொட் கொதித்துபோயுள்ளது.

## உதயசூரியனிற்குள் முணுமுணுப்பு!

உதயசூரியன் சின்னத்தில் அமைந்த புதிய கூட்டணியில் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் போன்ற கட்சிகள் அங்கம் வகித்தாலும், ஆசனப்பங்கீட்டு விடயங்களை ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியே கவனித்து வருகிறது. "கூட்டணியிலுள்ள மற்றைய இரண்டு கட்சிகளிற்கும் மக்களிடம் அவ்வளவாக வாக்கு வங்கியில்லை, கூட்டிலுள்ளவர்கள் ஒத்துழைத்தால் வெற்றிபெற கூடியவர்களை களமிறக்கி வென்று காட்டுகிறோம்" என்றுதான் ஈ.பி.ஆர்.எல்.எவ் கூறியுள்ளது. ஆனந்தசங்கரி இதற்கு சம்மதித்துள்ளார். என்றாலும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் இரண்டாம் மட்ட தலைவர்களிடம் கடுமையான அதிருப்தி ஏற்பட்டுள்ளது. கூட்டமைப்பிற்கு எதிரான மனநிலையில், ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தாளத்திற்கு ஆனந்தசங்கரி ஆடுகிறார் என அவர்கள் முணுமுணுக்க ஆரம்பித்துள்ளனர்.

## ஹசனலி வீட்டை மொய்க்கும் ஆதரவாளர்கள்

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு என்ற பெயரில் களமிறங்கும் ஹசனலி, ரிசாட் பதியுதீன் கூட்டு, கிழக்கு தேர்தல் களத்தை சூடாக்கியுள்ளது. கிழக்கின் அனைத்து சபைகளிலும் இந்த கூட்டமைப்பு களமிறங்கவுள்ளது. நிந்தவூரில் உள்ள ஹசனலியின் வீட்டில் இரவு பகலாக பெருமளவானவர்கள் மொய்த்துள்ளனர். அந்த கூட்டணி சார்பில் களமிறங்க ஆர்வமுள்ளவர்கள் அவரது வீட்டிற்கு வந்ததால், வேட்புமனு தாக்கல் செய்யும் காலஎல்லைக்குள் ஹசனலி வீடு ஆதரவாளர்கள் நிறைந்திருந்தது. இந்த கூட்டத்தை பார்த்த பின்னர், ஐக்கிய மக்கள் கூட்டமைப்பினர் அதிக உற்சாகமாக இருப்பதாக தெரிகிறது.

## மல்லுக்கட்டியதில் தவறிப்போன 1000 மில்லியன்!

யாழ்ப்பாணத்தில் வணிகவளாகம் கட்டுவதற்கு 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட செய்தி சில மாதங்களின் முன்னர் பரபரப்பாக பேசப்பட்டது. அந்த திட்டம் பெரும்பாலும் கைவிடப்பட்டு விட்டது. அதற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை, அரசு மீளப்பெற்றுக்கொண்டு விட்டது. தென்பகுதியில் ஏற்பட்ட அனர்த்தங்களிற்கான நிவாரணப்பணிகளிற்காக அந்த பணம் மீளப்பெறப்பட்டு விட்டது.

வணிகவளாகத்திற்காக பணம் ஒதுக்கப்பட்டதும், எங்கு அமைப்பதென மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள் பெரும் இழுபறிப்பட்டனர். ஆரம்பத்தில் மாவட்ட செயலக அதிகாரிகள் செம்மணி பகுதியில் அமைக்கலாமென முடிவெடுத்தனர். பின்னர் வடமாகாணசபை உறுப்பினர்களும் அதில் தலையிட்டனர். வடமாகாணசபை உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் நல்லூர் கிட்டு பூங்கா பகுதியில் அமைக்கலாமென, இன்னொரு பகுதியினர் யாழ் நகர மத்தியில் அமைக்க வேண்டுமென அடம்பிடித்தனர். இந்த இழுபறிகள் பல வாரங்கள் நீடித்தன. இறுதியில் முதலமைச்சரும் இதில் தலையிட்டு, நகரமத்தியில் அமைக்கலாமென முடிவெடுக்கப்பட்டது. வணிக வளாகத்தை எங்கே அமைப்பதென்ற இழுபறி பல வாரங்களாக நடந்து கொண்டிருந்த சமயத்தில் தென்பகுதியில் ஏற்பட்ட அனர்த்த நிவாரணப்பணிகளிற்காக இந்த பணம் மீளப்பெறப்பட்டுள்ளது.





உளவுத்துறைகளின் இரகசிய நடவடிக்கைகள் 02

# சிரிய உளவுப்பிரிவு அனுப்பிய உருளைக்கிழங்கு; நன்றாக சீவிய மொசாட்!

## ஆழ்கடலில் நடந்த சிரியா VS இஸ்ரேல் இரகசிய மோதல்

கடல் பாதுகாப்பிற்காக பலவிதமான கப்பல்களுடன் மொசாட்டின் ஆட்கள் கடலில் பயணிக்கிறார்கள் என்பதை கடந்த இதழின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தோம். இந்தவகை கப்பல்கள், படகுகளில் சில இரகசிய ஏற்பாடுகளை மொசாட் செய்து வைத்திருந்தது.

அந்த பகுதி கடற்பரப்பில் உள்ள கலங்களிலிருந்து மேற்கொள்ளப்படும் ரேடியோ உரையாடல்களை கண் காணிக்கும் வசதி மொசாட்டின் இரகசிய படகுகளில் செய்யப்பட்டிருக்கும். சாதாரண பார்வைக்கு அது மீன்பிடி படகைப்போல தெரிந்தாலும், உண்மையில் அது மீன்பிடி படகல்ல.

இப்படியான கடற்கலங்களில் இரண்டு, மூன்று மொசாட் ஆட்கள் இருப்பார்கள். தரைப்பகுதிகளில் உள்ள மொசாட் ஏஜெண்ட்களை விட, கடற்பகுதி ஏஜெண்ட்கள் கொஞ்சம் விஷேச பயிற்சி பெற்றிருப்பார்கள். அதில் முக்கியமானது, சங்கேத பாஷைகளை உடைக்கும் பயிற்சி. சங்கேத பாஷைகளை உடைப்பது சாதாரண விசயம் கிடையாது. அதற்கு தொடர் அப்டேற் தேவை. மற்ற உளவு அமைப்புக்கள் பாவிக்கும் சங்கேதபாஷைகளை தொடர்ந்து அறிந்து, அதை ஏஜெண்டுகளிற்கும் அறிவிக்க வேண்டும்.

பொதுவாக உளவு அமைப்புக்களில் இந்தவகையான சங்கேத பாஷை உடைப்பு கீழ் மட்ட ஏஜெண்ட்களின் வேலை கிடையாது. ஒவ்வொரு பிராந்திய அலுவலகங்களிலும்தான் அதற்கான ஆட்கள் இருப்பார்கள். ஆனால், கடலில் அப்படியல்ல. சங்கேத பாஷையை தெரிந்து கொள்ளும் பயிற்சி பெற்றவர்கள்தான் கடல் நடவடிக்கைக்கு செல்வார்கள். ஏனெனில், கடலில் சில வாய்ப்புக்கள்தான் ஏற்படும். கப்பலொன்றின் ரேடியோ உரையாடலை கண்காணிக்கும் படகு, அந்த உரையாடலை பிராந்திய மையத்திற்கு அனுப்பி, அங்கிருந்து கிடைக்கும் பதிலுக்காக காத்திருப்பது, எதிரி உளவு அமைப்புக்களிற்கு தேவையான நேரத்தை வழங்குவதாக அமைந்து விடும்.

கிரேக்க நாட்டு கொடியுடன் பயணிக்கும் அட்டவாரியஸ் என்ற கப்பல் கண்காணிப்பு பட்டியலில் உள்ளதாக மொசாட் ஏஜெண்ட்களிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அட்டவாரியஸ் கப்பல் ருனிஸ் துறைமுகத்திற்கு அண்மையாக வர, அந்த பகுதியில் நின்ற பனாமா கொடியுடனான வர்த்தக கப்பலில் இருந்து மொசாட் தலைமையகத்துக்கு ஒரு மெசேஜ் அனுப்பப்பட்டது. அந்த மெசேஜ் இதுதான்

"கடலில் வெள்ளைச்சுறா நடமாட்டம் அதிகமாக உள்ளது. மால்ட்டாவை நோக்கி கூட்டமாக போய்க்கொண்டிருக்கின்ற"

இதற்கு பிறகுதான் மால்டாவிற்கு அண்மையில் சிறிய மீன்பிடி படகொன்று அட்டவாரியஸிடம் உதவிகோரியது. அட்டவாரியஸ் ஓரளவு நெருங்கியதும், ரேடியோ தொடர்பு மூலம், மீன்பிடி படகிலிருந்து எரிபொருள் உதவி கோரினார்கள். அட்டவாரியஸ் கப்டன் எரிபொருள் வழங்க முடிவெடுத்தார். இதுதான் சிரிய உளவுத்துறை தாக்குதல் சறுக்கியதற்கு முதல் காரணம்.

மீன்பிடி படகிற்கு அருகில் அட்டவாரியஸ் தரித்து நின்ற சமயத்தில் கப்பலின் ரேடியோ சிக்னல்களை மீன்பிடி படகு உள்வாங்கிக் கொண்டிருந்தது. எட்டு கடல்மைல் சுற்று வட்டத்திலிருந்து வரும் ரேடியோ சிக்னல்களை உள்வாங்கும் வல்லமை அந்த மீன்பிடி படகின் கண்காணிப்பு சிஸ்டத்திற்கு இருந்தாலும், கப்பலிற்கு எந்த தகவலும் வராமலிருந்தது. எந்த தொடர்பும் இல்லாமல் கப்பல் வந்து கொண்டிருந்ததால்தான், அதை சற்று தாமதித்து பார்க்க மொசாட் விரும்பியது. சில சமயங்களில் இந்த தாமதமும் பலனை கொக்கலாமென நினைத்தார்கள்.

இந்த இடத்தில் மொசாட் போட்ட கணக்கு பலித்தது.



அல்ஜீரியாவில் இயங்கிய சிரிய உளவு பிரிவின் இரகசிய இடமொன்றில் இருந்து கப்பலை தொடர்பு கொண்டனர். அந்த உரையாடலை மொசாட் உளவாளிகள் கவனமாக பதிவு செய்தனர்.

இந்த உரையாடல் மிக சுருக்கமாக நடந்தது. கப்பலின் தற்போதைய பொசிசனை கேட்டுவிட்டு, போக வேண்டிய இடத்தின் லொக்கேசனை சொன்னார்கள்.

கப்பல்துறையுடன் கொஞ்சம் தொடர்புள்ளவர்களிற்கு ஒரு விசயம் தெரியும். லொகேசன்களை குறிப்பிடும்போது, அகலாங்கு நெட்டாங்கு மற்றும் பாகை என்பவற்றின் மூலமே குறிப்பிடுவார்கள். ஹம்பாந்தோட்டைக்கு செல்லுங்கள், காங்கேசன்துறைக்கு செல்லுங்கள் என்றெல்லாம் குறிப்பிடப்படுவதில்லை. ஏனெனில், கடலில் காபெற் வீதியில்லையே. அகலாங்கு, நெட்டாங்கு, பாகை என்பவற்றின் மூலமே லொகேசனை குறித்துகொள்ளளலாம்.

அட்டவாரியஸிற்கு வந்த தகவலில், போய் சேர வேண்டிய இடத்தின் லொகேசனை அறிவித்து விட்டு, அங்கு சில மணி நேரங்கள் தரித்து நிற்கும்படியும், அந்த சமயத்தில் கப்பலின் அடுத்த பயண இடத்தின் லொகேசனை தருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதுதான் மொசாட்டை உசாரடைய வைத்தது!

பயண முடிவிட லொகேசனை ஏன் கப்பலில் உள்ளவர்களிற்கு சொல்ல வில்லை? பயண முடிவிடம் கப்டனிற்கும் தெரியாமல் இருக்கிறது, எங்கே செல்ல வேண்டுமென்பது பயணத்தின் இடையில் தான் சொல்லப்படுகிறது, ஏதேனும் இரகசிய நடவடிக்கை நடக்கிறதா?

உடனே மீன்பிடி படகில் இருந்த மொசாட் ஏஜெண்ட்கள், ரேடியா சிக்னலில் பதிவுசெய்யப்பட்ட லொகேசனை கவனித்தார்கள். அது கிரீஸின் கிரிட் (Crete) தீவில் உள்ள ஓல்ட் வெனற்றின் கார்பர் (old venetian harbour). அங்குதான் அட்டவாரியஸ் சில மணிநேரம் தரித்து நிற்கப் போகிறது.

இத்தனை தகவலும் மொசாட் தலைமையகத்திற்கு பறந்தது. உடனே ஓல்ட் வெனற்றின் கார்பரிலும் சில கண்காணிப்பு படகுகளை மொசாட் ஏற்பாடு செய்தது.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

ஓல்ட் வெனற்றின் கார்பரிற்கு வந்து துறைமுக கொன்ட்ரோல் றூமுடன் தொடர்பை ஏற்படுத்தினார்கள். எகிப்தில் அலெக்ஸாண்ரியா துறைமுகத்திற்கு சென்று கொண்டிருப்பதாகவும், தொடர் பயணத்தால் இயந்திரத்தில் சிறு திருத்தம் செய்யவுள்ளதால் சில மணி நேரம் தரித்து செல்லப்போவதாகவும் அட்டவாரியஸ் கப்டன் அறிவித்தார். அவர் இப்படி அறிவித்ததற்கு காரணம், கப்பல் அடுத்து எங்கேசெல்லவேண்டுமென்பது அவருக்கே தெரியாது. சிரிய உளவுத்துறையிடமிருந்து தகவல் வரும்வரை அங்கே தரித்து நிற்பதற்குதான் இந்த காரணம். இதை துறைமுக அதிகாரிகள் நம்பினார்கள். ஆனால் அங்கு நின்ற மீன்பிடி படகின் மூலம் உரையாடலை கண்காணித்த மொசாட் நம்பவில்லை.

இது பிரச்சனைக்குரிய கப்பல் என்பதை மொசாட் உறுதிசெய்தது. அங்கிருந்தே ஸ்கெட்ச் போட தொடங்கினர்.

அட்டவாரியஸை அடுத்ததாக சைப்பிரஸிற்கு நகர்த்தியது சிரிய உளவுத்துறை. மத்தியதரை கடல் வரைபடத்தை கவனித்தால் தெரியும், இந்த பாதையில் நுழைந்து இஸ்ரேலிற்கு அண்மையாக வருவதெனில் சைப்பிரஸில்தான் வாய்ப்பிற்காக காத்திருக்கலாம்.

அட்டவாரியஸ் உண்மையிலேயே பிரச்சனைக்குரிய கப்பல்தான் என்பதை அடையாளப்படுத்தும் வரைதான் மீன்பிடி படகு கண்காணிப்பு. அட்டவாரியஸில் ஏதோ சிக்கலிருக்கிறதென தெரிந்த பின், அதை உறுதிசெய்ய வேறு லெவல் பிளான் ஒன்றை போட்டார்கள்.

ஓல்ட் வெனற்றின் கார்பரில் அட்டவாரியஸ் தரித்து நின்றபோது, கப்பல் பணியாளர்கள் மேல் தளத்தில் பராமரிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கப்பலிற்கு அருகில் water scooter இல் ஒரு அழகிய இளம்பெண் வந்தார். கப்பலிற்கு அருகில் வந்ததும், அவர் நிலைதடுமாறி தள்ளாடினார். ஆழ்கடல் பயணத்தில் பலநாட்கள் பெண்களையே காணாத பணியாளர்கள், நீச்சலுடையில் ஒரு யுவதி பக்கத்தில் வந்து தள்ளாடினால் சும்மா இருப்பார்களா? மொத்த கப்பல் பணியாளர்களும் மேல் தளத்தில் நின்று இதை கவனித்து கொண்டிருந்தனர்.

"ஏதேனும் உதவி தேவையா?" என யுவதியை நோக்கி கத்திக் கொண்டிருந்தார்கள். சிறிய தலைசுற்றல் என்பதை போல சைகையில் காண்பித்தார் யுவதி. உடனே அட்டவாரியஸ் பணியாளர்கள், இருவர் கடலில் இறங்கி, யுவதியை அட்டவாரிஸின் மேல்தளத்திற்கு கொண்டு வந்தார்கள். கடலில் சிலருக்கு தலைசுற்றல், வாந்தி, வயிற்று சிக்கல்கள் ஏற்படும். இதற்கான சில மாத்திரைகளை அட்டவாரியஸ் பணியாளர்கள் கொடுத்தார்கள். மாத்திரையை எடுத்த யுவதி, கரையில் நிற்கும் தமது குழுவினரின் படகிற்கு சிக்னல் கொடுப்பதற்காக தனது இடுப்பில் கட்டியிருந்த சிவப்பு நிற துணியை கழற்றி, தலைக்கு மேல் சுற்றினார்.

தனது குழுவினருக்கு சிக்னல் கொடுத்துவிட்டு, அவசரமாக இயற்கை உபாதை கழிக்க வேண்டியிருப்பதாக சொன்னார். கப்பலின் கீழ் தளத்தில் இருந்த மலசலகூடத்திற்கு அந்த நீச்சலுடை யுவதி அழைத்து செல்லப்பட்டார்.

இதேவேளை, யுவதியின் சிக்கனலை புரிந்து, கரையோரமாக நின்ற படகு வேகமாக வந்தது. அதன் மேல் தளத்தில் ஆறேழு யுவதிகள் நீச்சலுடையில் நின்றனர். படகின் மேல்தளத்தில் lying floats சிலவும் இருந்தன. அவர்களை பார்க்க ஒரு சுற்றுலா குழுவொன்று பொழுதை கழிக்கிறார்கள் என்றுதான் தோன்றியது.

இந்தகளேபரங்களிற்குள்,யாருமறியாமல் இன்னொரு தரப்பும் அவதானித்து கொண்டிருந்தது. அது PLO தாக்குதலணி.

விசயம் என்னவென்றால், கப்பலின் பக்கவாட்டில் உள்ள கண்ணாடி யன்னல் வழியாக PLO காரர்கள் சிலர் வெளியே பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். நீச்சலுடையில் பெண்கள் பக்கத்தில் நிற்கும் விசயம் மற்றவர்களிற்கும் பரவ, எல்லோரும் யன்னலோரம் மொய்த்து விட்டார்கள். கடலில் தத்தளித்த யுவதி, கப்பலின் மேல்தளத்திற்கு கொண்டு வரப்பட்டதையும் அவதானித்து கொண்டிருந்தார்கள்.

அட்டவாரியஸின் கீழ் தளத்திற்கு அந்த யுவதி வந்தபோது, அங்கு PLO போராளிகள் ஒன்றாக யன்னலோரம் நின்றனர். நீச்சலுடையில் இருக்கும் எந்த சங்கோஜமுமின்றி அவர் மலசலகூடத்திற்கு போய் வந்தார். பிறகு, அட்டவாரியஸிற்கு பக்கத்தில் வந்த தனது குழுவினரின் படகில் ஏறினார். சுற்றுலா பயணிகளின் படகின் மேல்தளத்தில் நின்ற நீச்சலுடைய யுவதிகள் சிலர், அட்டவாரியஸ் பணியாளர்களிற்கு பறக்கும் முத்தம் கொடுத்தனர். பணியாளர்களும் உற்சாகமாக பதில் முத்தம் கொடுத்தனர். பின்னர் மெதுமெதுவாக அந்த படகு கரையை நோக்கி சென்றது.

அடுத்த அரைமணி நேரத்தில் மெசாட்டின் தலைமையகத்திற்கு, அட்டவாரியஸில் இருப்பவர்களின் புகைப்படங்கள் சென்று சேர்ந்தன.

அது எப்படி?

அட்டவாரியஸ் அழிந்தது பெண்ணால்!

அட்டவாரியஸிற்கு அண்மையில் water scooter இல் ஒரு அழகி வந்தது, அவருக்கு தலைசுற்றல் ஏற்பட்டது, இன்னொரு படகில் வந்தவர்கள் அவரை ஏற்றிச்சென்றதெல்லாம் நாடகம். அதை இயக்கியது மொசாட்.

அட்டவாரியஸில் ஏறிய பெண் அணிந்திருந்த aero helmets இல் அதிசக்தி வாய்ந்த கமரா பொருத்தப்பட்டிருந்தது. அந்தப்பெண் கப்பலின் மேல்தளம், கீழ் தளம் இரண்டிலும் போதியள நேரத்தை செலவிட்டிருந்தார். அதிலும், கீழ் தளத்திற்கு இறங்கிச் சென்றபோது, PLO போராளிகள் அனைவருமே அந்த பெண்ணையே மொய்த்துப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

இது, அட்டவாரிஸில் இருந்த அனைவரின் முகங்களும் மொசாட் பெற வழிசெய்தது. மொசாட் தலைமையகத்தில் சிரிய உளவுத்துறை, பாலஸ்தீன விவகாரங்களை கையாளும் தனி யுனிட்டே இருந்தது. அவர்களிடம் சில PLO போராளிகளின் படங்கள் இருந்தன. இந்த இடத்தில் PLO ஒரு முட்டாள்தனமாக காரியம் செய்தது. சிரிய உளவுத்துறை இதை ஏன் கவனிக்காமல் விட்டதென்று தெரியவில்லை.

1983 இல் ஜெருசலேமில் ஒரு வெடிகுண்டு தாக்குதல் நடத்த திட்டமிட்டுக் கொண்டிருந்த Karim Yusef Yunis என்பவரை மொசாட் ஏஜெண்ட்கள் இரகசிய சுற்றிவளைப்பில் கைது செய்திருந்தனர். அப்பொழுது இன்னும் இருவரையும் மொசாட் குறிவைத்தது. ஆனால் அவர்கள் மீது அப்பொழுது சந்தேகம் உறுதிப்படுத்தப்படவில்லை. அதில் ஒருவர் யூசுப் சைட் அல் அல்(Yusef Said al-al). அவரை பிடித்து, அடையாளங்களை பதிவுசெய்துவிட்டு, சந்தேகத்திற்கிடமானவர்களின் லிஸ்றில் போட்டு வைத்திருந்தார்கள். அதற்கடுத்த வருடம் பிடிபட்ட PLOவின் உளவுப்பிரிவு முக்கியஸ்தர் Issa Nimer Abed Rabbo விடம் நடத்திய விசாரணையில்தான் யூசுப் சைட் அல் அல் PLOவின் உளவுப்பிரிவில் இருக்கிறார் என்பதை மொசாட் உறுதிசெய்தது. பின்னர் தேடப்படும் குற்றவாளிகள் பட்டியலில் அவர் இணைக்கப்பட்டிருந்தார்.

அந்த யூசுப் சைட் அல் அல்(Yusef Said al-al) அட்டவாரியஸில் இருந்தார். நீச்சலுடை அழகியின் கமரா அவரை நன்றாக படம் பிடித்திருந்தது, அதுதவிர, மொசாட்டில் லிஸ்றில் இருந்த வேறு சில PLO போராளிகளும் அட்டவாரியஸில் இருந்தனர்.

மொசாட் உசாரனாது. அட்டவாரியஸ் மீதான கண்காணிப்பிற்காக Condition Yellow அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்ததாக கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தோம் அல்லவா. அது 'Condition Red' ஆக மாற்றப்பட்டது.இதன் அர்த்தம் "இஸ்ரேலை தாக்கப் போகிறார்கள். அந்த இலக்கில் இருப்பவர்கள் உறுதிப்படுத்தப்பட்ட அபாயமானவர்கள்" என்பதாகும்.

அந்த சமயத்தில் இஸ்ரேலிய பிரதமராக இருந்தவர் ஷிமொன் பெரெஸ். அவருக்கு விசயம் அறிவிக்கப்பட்டு, தாக்குதலிற்கான அப்ரூவல் கோரியது மொசாட். "உடனே தாக்கியழியுங்கள்" என பிரதமர் உத்தரவிட்டார்.

அட்டவாரியஸை அழிக்க இஸ்ரேலிடம் மூன்று ஒப்ஷன்கள் இருந்தன. ஒன்று இஸ்ரேலில் இருந்து ஏவுகணை தாக்குதல் நடத்துவது. இரண்டு, விமானத்தாக்குதல். மூன்று கடற்படை தாக்குதல்.

முதலிரண்டு வழியையும் இஸ்ரேல் பாதுகாப்பு அதிகாரிகள் நிராகரித்தனர். மூன்று காரணங்களால் அவை நிராகரிக்கப்பட்டன. முதலாவது, கப்பல் நகர்ந்து கொண்டிருக்கும் போது துல்லியமாக தாக்க முடியாது. ஒரேயடியில் அடித்து முடிக்க வேண்டிய விசயம் இது. எலி அடிப்படை போல துரத்திதுரத்தி அடிக்க முடியாது. அதுவும் இஸ்ரேலிற்கு வெளியில் உள்ள இடத்தில். அது இராஜதந்திர சிக்கல்களை தரும்.

இரண்டு, நகர்ந்து கொண்டிருக்கும் அட்டவாரியஸ் சைப்பிரசிற்கு அண்மையில் வந்த பின் தாக்குதல் நடத்த முடியாது. அது சைப்பிரசுடனான உறவை பாதிக்கும்.

மூன்று, அட்டவாரியஸ் மீது தாக்குதல் நடத்தும்போது கப்பலில் இருப்பவர்கள் சிலர் தப்பிக்கலாம். விமானம், ஏவுகணை மூலம் தாக்கினால் தப்பிப்பவர்களை பிடிக்க முடியாது.

இதனால், இஸ்ரேல் கடற்படையின் மூலம் தாக்குவதென முடிவானது. இதற்குள் அட்டவாஸ் சைப்பிரசிற்கு அண்மையாக வந்தது. அங்கு வைத்து, இறுதி தரிப்பிடம் பற்றிய உத்தரவையும் பெற்றுக்கொண்டது. டெல் அவியின் கிழக்கு பக்கமாக, கரையிலிருந்து 8 கடல்மைல் தொலைவில் தரிக்குமாறு கட்டளை வந்தது. இதை மொசாட் உளவாளிகளும் பதிவுசெய்தனர். கப்பலின் முடிவிடம் எதுவென்பது கிட்டத்தட்ட தெரிந்து விட்டது.



ஒவ்வொரு படகிலும் தலா ஐந்து இஸ்ரேலியர்கள் வீதம், ஐந்து படகுகளில் முப்பது இஸ்ரேலிய கொமாண்டோக்களும்,மொசாட் உளவுப்பிரிவினரும் அட்டவாரியஸை குறிவைத்து புறப்பட்டனர். இஸ்ரேலியர்கள் இந்த நடவடிக்கைக்கு பயன்படுத்திய உத்தி, இரண்டாம் மூன்றாம் ஈழப்போர்க் காலங்களில் கடற்புலிகள் பயன்படுத்திய அதே உத்திதான்!

அட்டவாரியஸ் சரக்கு கப்பல். அதன் ராடர் துல்லியமானதல்ல. ராடர் எப்படி இயங்குமென்பதை மேலோட்டமாக தெரிந்தவர்களிற்கு இந்த உத்தியை புரிந்துகொள்ள முடியும். சரக்கு கப்பல் ராடர்களின் பலவீனமே, அவற்றால் டிடெக்ட் பண்ண முடியாமல் ஏமாற்றலாம். ஒரே திசையில் சிறிய வேகபடகுகள் பயணித்தால், அவை சில விநாடியளவான நேரம்தான் ராடர் திரையில் விழும். ராடர் திரை எப்பொழுதும் அசைந்தபடியிருக்கும். கப்பல், இலக்கு நகர்விற்கேற்ப அதுவும் அசைந்து கொண்டிருக்கும். இந்த அசைவில் ஒரு சில விநாடியில் மறையும் புள்ளியை ஒப்சவேர்ஷனில் இருப்பவர் அதிகமாக தவறவிட்டு விடுவார். போதாததற்கு, அட்டவாரியஸ் நகர்ந்து கொண்டும் இருக்கிறது.

புலிகளின் படகுகள் மிகச்சிறியவை. 250 கோர்ஸ்பவரில் இரண்டு, நான்கு இன்ஜின்கள் பொருத்தியிருப்பார்கள். கடற்படை படகில் உள்ள சாதாரண ராடர்களால் அவற்றை துல்லியமாக டிடெக்ட் செய்ய முடியாது. நான்காம் ஈழயுத்தத்தில்தான் இந்த குறைபாட்டை கடற்படை தவிர்த்தது.

மறுநாள் அதிகாலை,இருள் அவ்வளவாக விலகாத நிலையில் சைப்பிரஸில் இருந்து கடல்மைலில், அட்டவாரியஸை மூன்று திசைகளில் இஸ்ரேலிய படகுகள் சூழ்ந்தன. ஓரளவு வெளிச்சம் வரும்வரையும் ஒருங்கி வராமல், இடைவெளியை பேணி, ஒரு மெசேஜ் அனுப்பினார்கள்.

"நாங்கள் சைப்பிரஸ் கடற்படையினர். எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கு செல்கிறீர்கள்? கப்பலில் என்ன இருக்கிறது?" என.

இதன்பின்னர்தான் அட்டவாரியஸில் இருந்தவர்கள், ஏதோ சிக்கல் வந்து விட்டதென்ற அளவில் யோசித்தனர். கப்பல் கப்டன் பதிலனுப்பினார். "நாம் பனாமாவில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்தை சேர்ந்தவர்கள். எகிப்தில் போர்ட் சைட்டிற்கு (Port Said) உருளைக்கிழங்கு ஏற்றிக்கொண்டு செல்கிறோம்" என.

"நல்லது. எங்கள் ஆள் ஒருவர் வருகிறார். அவருக்கும் உருளைக்கிழங்கு கொடுத்து விடுங்கள்" என இஸ்ரேலியர்கள் பதில் மெசேஜ் அனுப்பிய கணத்தில், அட்டவாரியஸ் மீது இஸ்ரேலியர்கள் ஏவுகணை தாக்குதலை நடத்தினார்கள்.

கப்பலின் மேல் தளத்தில் பணியாளர்கள் நின்று உயிர் தஞ்சம் கோரினர். ஓரிரண்டு நிமிடத்தில் எல்லாம் முடிந்தது. 17 கப்பல் பணியாளர்களும் கொல்லப்பட்டனர். கப்பலின் கீழ் தளத்தில் 31 PLO போராளிகள் இருந்தனர். அவர்களில் ஆறு பேர் தவிர்ந்த, ஏனையவர்கள் கொல்லப்பட்டனர். ஆறுபேரை உயிருடன் பிடித்தனர் இஸ்ரேலியர்கள். அவர்கள் இஸ்ரேலுக்கு கொண்டு வரப்பட்டு, மொசாட்டின் இரசிய விசாரணை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர். விசாரணையில், சிரிய உளவுத்துறையின் பின்னணியை மொசாட் உறுதிசெய்தது. பின்னர் அவர்கள் கொல்லப்பட்டனர்.

சிரிய உளவுத்துறை இதன் பின்னணியில் இருந்தார்கள் என்பதை உறுதிசெய்த பின்னர், சிரிய உளவுத்துறைக்கு மொசாட் ஒரு நையாண்டி மெசேஜ் அனுப்பினார்கள் "உங்கள் உருளைக்கிழங்குகள் வந்து சேர்ந்தனவா? அனேகமாக இப்பொழுது அவற்றை மீன்கள் சாப்பிட்டிருக்கும். அறு உருளைக்கிழங்களை மட்டும் எடுத்து வந்தோம். நன்றாக தோல் சீவிவிட்டோம். அனுப்பி வைக்கவா?" என, உயிருடன் பிடித்த அறுபேரின் பெயர்களையும் சேர்த்து அனுப்பினார்கள். சிரிய உளவுத்துறை பதிலனுப்பாமல் கப்சிப்பாக இருந்து விட்டார்கள்.

ஒரு மாதம் கழித்து பதில் சொன்னார்கள். அது வார்த்தையில் அல்ல,செயலில். அதற்கு பெயரே "ஒப்ரேஷன் பொட்டாட்டோ" (operation potato). அதென்ன ஒப்ரேஷன் பொட்டாட்டோ?

அடுத்தவாரம் சொல்கிறோம்.

உள்ளூராட்சி தேர்தல்

# யார் வெல்வார்கள்? எங்கே சறுக்குவார்கள்?

## வடக்கு, கிழக்கு மக்களின் 'பல்ஸ்' ரிப்போர்ட்

தீபம் குழு

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கில் எந்த கட்சி, கூட்டணி வெற்றி பெறும்? கட்சிகள், கூட்டணிகளின் பலம், பலவீனம் என்ன? எப்படியான விமர்சனங்களை சந்திப்பார்கள்?

கட்சிகளின் சறுக்கல்களிற்கு காரணம் என்னவாக இருக்கும்? இதுவரை வெற்றிக் கூட்டணியாக இருந்தவர்களின் வெற்றி இம்முறையும் தொடருமா? எந்தெந்த பகுதியில் சறுக்குவார்கள்?

இப்படியாக உள்ளூராட்சி தேர்தல் பற்றிய முழுமையான ரிப்போர்டை தயார் செய்துள்ளது தீபம் குழு. கடந்த சில வாரங்களாக வடக்கு கிழக்கின் பல்வேறு பகுதிகளிற்கும் சென்று, மக்களுடன் பேசி தயாரித்த மக்களின் பல்ஸ் ரிப்போர்ட் இது.

### வடக்கில் யார் வெல்வார்?

இதுதான் மிக சிக்கலான கேள்வி. மக்களின் நாடித்துடிப்பை அவ்வளவு துல்லியமாக யாராலும் கணிக்க முடியாது. காரணம் எந்த அபிப்பிராயமும் மக்களிடம் நிலையாக நிற்பதில்லை. சின்னசின்ன சம்பவங்களும் மக்களின் அப்பிராயத்தை சட்டென மாற்றிவிடும்.

இம்முறை தேர்தலில் கடும் போட்டி நிலவுமென ஒரு அப்பிராயம் நிலவுகிறது. அது சரியா என்பதை இப்போதைக்கு சொல்ல முடியாதென்பதே உண்மை. ஏனெனில் ஒவ்வொரு தேர்தல்



சமயத்திலும் இதே ஆரூடம் கூறப்படுவது வழககம். கடந்த பாராளுமன்ற தேர்தல் சமயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு கடும் நெருக்கடியை தமிழ் தேசிய மக்கள் முன்னணி கொடுக்கும் என்றுதான் அரசியல் விமர்சகர்கள் பக்கம் பக்கமாக எழுதினார்கள். ஆனால், இறுதியில் ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சியே வடக்கு, கிழக்கில் அதிக வாக்குகளை எடுத்தது.

இம்முறையும் அப்படியொரு நிலைமை ஏற்படலாம். அண்மைக்காலத்தில் நடந்த சில சம்பவங்கள் மக்களிடம் ஏற்படுத்திய அபிப்பிராய மாற்றமே காரணம்.

வடமாகாண முதலமைச்சரிற்கு எதிராக தமிழரசுக்கட்சி நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பித்தது. அது மக்களை அதிருப்தியடைய வைத்தது. தமிழரசுக்கட்சி மீது எழுந்த அதிருப்தி தமிழ் தேசிய கூட்டமைப்பு வரை வியாபித்தது. கூட்டமைப்பு என்ற பெயரில் தேர்தலில் நிற்கலாமா என்று கூட மற்றைய கட்சிகள் கொஞ்சம் தடுமாறின. மாற்று அணி முயற்சி ஆரம்பித்தபோது, கூட்டமைப்பு உண்மையிலேயே கொஞ்சம் பயந்தது.

ஆனால், மாற்று அணி முயற்சி பிசுபிசுத்ததும், மக்களின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு விட்டது. மாற்று அணி சொதப்பும் என பரவலாக நினைக்கிறார்கள். தமிழ் தேசிய மக்கள் முன்னணியும், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழர் விடுதலைக்கூட்டணியும் பரஸ்பரம் வார்த்தைப்போரில் ஈடுபட, அதுவும் மக்களை எரிச்சல்படுத்தியது. மொத்தத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது இருந்த விமர்சனத்தை, மாற்று அணியே போக்கிவிட்டது என்பதே உண்மை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதான பலவீனமே, உள்ளூராட்சி மன்ற பிரதிநிதித்துவத்தை வைத்திருக்காததுதான். தேர்தல் அரசியல் செயற்பாட்டின் அத்திவாரமே உள்ளூராட்சி மன்ற பிரதிநிதித்துவம் என்பதை கட்சி ஆரம்பித்து ஏழு வருடங்களின் பின்னர்தான் மிக தாமதமாக அந்த கட்சி புரிந்துள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி சந்திக்கும் முதலாவது உள்ளூராட்சி மன்ற தேர்தல் என்பதால், கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்பதுதான் நல்லது. ஆனால், பின்னாளில் அந்த கட்சி சந்திக்கவுள்ள பெரிய நெருக்கடியொன்றை இப்பொழுதே எதிர்வுகூறுகிறோம்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் உள்ளூர் பிரமுகர்களே வெற்றியடைவார்கள். கட்சி இரண்டாம் பட்சமே. இந்த பிரபலங்கள் பெரும்பாலும் கொள்கை பிடிப்புள்ளவர்களாக இருப்பதில்லை. காற்றடிக்கும் பக்கம் சாய்வார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளில் தேர்தலில் நின்றவர்களே, பின்னர் கட்சி தாவினார்கள். மக்கள் முன்னணி கிராமிய கட்டமைப்பை வளர்க்காததால், கட்சிக்கு வெளியில் இருந்தே வேட்பாளர்களை தேர்வு செய்யவேண்டிய நெருக்கடி. அந்த வேட்பாளர்கள் வெற்றிபெற்றாலும், எத்தனை பேர் கட்சியுடன் நிற்பார்கள் என்பது சந்தேகமே.

உள்ளூர் பிரபலங்கள் வெற்றியடையும் என நினைக்கும் கட்சியை நோக்கி செல்வது வழக்கம். இதனால் தமிழ் தேசிய கூட்டமைப்பிலேயே கணிசமான உள்ளூர் பிரபலங்கள் போட்டியிடுகிறார்கள். அது கூட்டமைப்பிற்கு அதிக வாய்ப்பை கொடுக்கும்.

எல்லா காலங்களிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது சிலபல விமர்சனங்கள் இருக்கத்தான் செய்யும். இந்த விமர்சனங்கள் தமக்கு சாதகமாக மாறுமென மற்ற கட்சிகள் கணக்குப்போடுவார்கள். ஆனால் அந்த விமர்சனங்கள் வாக்காக மாறுவதில்லை. இம்முறையும் அதுதான் நடக்க வாய்ப்புண்டு. அதற்காக வழக்கம்போல தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏகபோக வெற்றியடைய வாய்ப்பில்லை. கூட்டமைப்பின் மீதான விமர்சனம் நிச்சயம் சிறிதளவாவது எதிரொலிக்கும்.

### தமிழர் விடுதலை கூட்டமைப்பிற்கு எப்படி வாய்ப்பு?

தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் இணைந்து தமிழர் விடுதலை கூட்டமைப்பு என்ற புதிய கூட்டணியை அமைத்துள்ளனர். தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எதிரான வலுவாக கூட்டணியை உருவாக்க முயன்று, இப்படியொரு கூட்டணி உருவாகியுள்ளது. தமிழர் விடுதலை கூட்டணி பற்றிய மக்கள் அபிப்பிராயம் வடக்கில் எப்படியானதென்பதை தனியே சொல்ல வேண்டியதில்லை. இந்த கூட்டணியில் விக்னேஸ்வரன் போன்ற கவர்ச்சியான முகமெதுவும் இல்லாததுதான் பெரிய பலவீனம். இந்த கூட்டணியை கரைசேர்க்கும் கவர்ச்சி சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு கிடையாது.

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு மாற்று, தமிழர் விடுதலை கூட்டமைப்பு என்ற அபிப்பிராயம் மக்களிடம் இயல்பாக ஏற்படவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஆனந்தசங்கரி மாற்றாக அமைவார் என்ற அப்பிராயம் வடக்கில் நிச்சயம் இல்லை.

**தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு மாற்று, தமிழர் விடுதலை கூட்டமைப்பு என்ற அபிப்பிராயம் மக்களிடம் இயல்பாக ஏற்படவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஆனந்தசங்கரி மாற்றாக அமைவார் என்ற அப்பிராயம் வடக்கில் நிச்சயம் இல்லை.**

### ஈ.பி.டி.பிக்கு என்ன நடக்கும்?

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு கருத்து ரீதியான மாற்று கட்சியாக ஈ.பி.டி.பி இருக்கிறதே தவிர, தேர்தலில் மாற்றாக உருவெடுக்கும் வாய்ப்பில்லை. ஈ.பி.டி.பியின் வழக்கமான ஆதரவுதளங்களில் ஓரளவு வாக்கு கிடைக்கலாம். ஆனால், ஈ.பி.டி.பிக்கு இம்முறை இருமுனை நெருக்கடி.

முதலாவது, ஈ.பி.டி.பியின் வாக்கு வங்கி பெரும்பாலும் வேலைவாய்ப்பு போன்ற சலுகைகளின் மூலம் ஏற்படுத்தப்பட்டது. ஈ.பி.டி.பியின் கையில் நிர்வாக அதிகாரமெதுவும் இல்லாத நிலையில், இந்த வாக்காளர்களை தேசிய கட்சிகள் இரண்டும் சுவீகரித்துக்கொள்ள வாய்ப்புள்ளது.

இரண்டாவது, பசில் ராஜபக்ச தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி யாழ்ப்பாணத்திலும் தேர்தலில் களமிறங்குகிறது. இந்த கட்சியின் யாழ்ப்பாண பிரிவென்பது, ஈ.பி.டி.பியில் இருந்து வெளியில் வந்தவர்கள்தான். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் யாழ்ப்பாண கிளையை முன்னாள் ஈ.பி.டி.பியினரே ஆரம்பித்தார்கள். அவர்களின் அரசியல் தொடர்பு வட்டம் அதிகமாக ஈ.பி.டி.பியை மையமாக வைத்ததுதான். ஈ.பி.டி.பியுடன் தொடர்புடைய வேட்பாளர்களைத்தான் அவர்கள் நியமித்துள்ளனர். இதற்கு உதாரணம் சாவகச்சேரி நகரசபை. அங்கு வேட்புமனு தாக்கல் செய்ய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் சென்றபோதுதான், தமது வேட்பாளர் ஒருவர் ஈ.பி.டி.பி வேட்பாளர் பட்டியலிலும் உள்ளதை.


இந்த தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தாராளமாக பணத்தை செலவு செய்கிறது. ஈ.பி.டி.பி வாக்குகளை அது நிச்சயம் சேதமாக்கும்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிலைமையும் வடக்கில் சொல்லிக்கொள்ளும் விதமாக இருக்காது. அந்த கட்சியிலுள்ள பெரும்பாலானவர்கள் ஈ.பி.டி.பியிருந்து வந்தவர்கள். ஈ.பி.டி.பி வாக்குகளைதான் உடைப்பார்கள். வழக்குகளுடன் தொடர்புடைய ஈ.பி.டி.பியிலிருந்து நீக்கப்பட்ட முகங்களும் இந்த கட்சியில் தென்படுவது கட்சிக்கு நிச்சயம் பின்னடைவுதான். பசில் ராஜபக்ச தொடர்பாக தமிழ் மக்களிடமுள்ள எதிர்ப்புணர்வு நிச்சயம் கட்சிக்கு பெரிய

தொடர்ச்சி 19-ம் பக்கம்...

# “பொட்டம்மானை மட்டும் ஒப்படையுங்கள்; யுத்தத்தை நிறுத்தலாம்”

## அன்ரன் பாலசிங்கத்துக்கு இந்தியா அனுப்பிய கடைசி செய்தி





**பா.ஜ.க**வுடன் மட்டும் தொடர்பேற்படுத்தி பலனில்லை; காங்கிரசுடனும் தொடர்பேற்படுத்த வேண்டுமென புலிகள் நினைத்தனர். பொது தேர்தலில் பா.ஜ.க சில சமயம் வெற்றியடையாவிட்டால், நிலைமை மோசமாகிவிடலாம். காங்கிரசுடன் தொடர்பிருப்பது அவசியம். அந்த பேச்சு சரி வந்தால், சில சமயங்களில் அவர்களே யுத்தத்தையும் நிறுத்தவும்கூடும்.

காங்கிரஸ் ஆட்சியில் இருந்தால் புலிகளிற்கு எதிராக நடப்பார்கள் என்பது புலிகளிற்குதெரியும். அதனால்தான் 1991இல் ராஜிவ் காந்தியையும் கொன்றார்கள்.

2008 செப்ரெம்பரில் புலிகளின் செய்தியொன்று ப.சிதம்பரத்திற்கு கிடைத்தது. அந்த செய்தியை கொண்டு வந்தவர் மலேசிய வர்த்தக புள்ளி. சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரத்துடன் வர்த்தக தொடர்பில் இருப்பவர். இந்த வர்த்தகத்தில் சில சிக்கல்கள் ஏற்பட்டு பின்னர் நீதிமன்றத்திற்கு சென்றது உபரி தகவல். இதற்கு மேல், மலேசிய வர்த்தக புள்ளியை அடையாளப்படுத்த முடியாது. அது சட்டசிக்கல்களை ஏற்படுத்தும்.

புலிகளின் மெசேஜை அந்த வர்த்தக புள்ளிதான் ப.சிதம்பரத்திற்கு பாஸ் செய்தார். யார் மூலம் தகவலை பாஸ் செய்தால் காரியம் சாதிக்கலாமென்பதை புலிகள் அறிந்து வைத்திருந்தனர். "யுத்தத்தை நிறுத்த வேண்டும். பேச்சுக்காக புலிகள் விட்டுக் கொடுப்பிற்கும் தயாராக இருக்கிறார்கள். மக்கள் கொல்லப்பட்டு கொண்டிருக்கிறார்கள். அதற்காக போதியளவு இறங்கி வரவும் தயாராக இருக்கிறார்கள்" என்பதே அந்த மெசேஜ்.

இந்த இடத்தில் மிகமுக்கிய இன்னொரு சம்பவத்தையும்சொல்லவேண்டும். இதுவும் ஒரு பிளாஷ்பேக்தான். சிதம்பரத்தின்



மூலம்தான் புலிகள் காங்கிரசுடன் தொடர்பை ஏற்படுத்துகிறார்கள் என நினைக்காதீர்கள். சிதம்பரத்துடனான தொடர்பு ஏற்படுத்தப்படுவதற்கு இரண்டு வருடங்களின் முன் "வெட்டு ஒன்று துண்டு இரண்டாக" புலிகள் காங்கிரஸ் பேச்சு நடந்து முடிந்திருந்தது. 2004ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியை பிடித்ததும் அந்த பேச்சு நடந்தது.

புலிகள்தான் இந்த பேச்சையும் ஆரம்பித்தார்கள். இந்தியாவின் நலன்களிற்கு குறுக்காக புலிகள் நிற்கமாட்டார்கள், உத்தியோகபற்றற்ற முறையிலான தொடர்பையாவது இரண்டு தரப்பும் பேணலாம், இதன் மூலம் தேவையற்ற குழப்பங்களை தீர்க்கலாமென புலிகள் இந்தியாவிற்கு தகவல் அனுப்பினார்கள். இது 2005 இல் நடந்தது.

இந்த தகவல் பரிமாற்றத்தில் ஈடுபட்டவர்கள் இருவர். முதலாவது ஆள், நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம். இரண்டாவது ஆள், பிரித்தானியாவிலுள்ள இந்திய தூதரகத்தில் பணியாற்றும் வடஇந்தியர். அவர் றோ அமைப்பை சேர்ந்தவர். புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இலண்டனில் தங்கியிருந்தபோது, இந்தியாவுடன் நடந்த உத்தியோகபற்றற்ற பேச்சுக்கள் எல்லாம் இந்த றோ ஆள் மூலம்தான் பாலசிங்கத்துடன் நடத்தப்பட்டது.

உங்களிற்கு நன்றாக நினைவிலுள்ள ஒரு சம்பவத்தை உதாரணமாக சொல்லலாம். 2000 ஆம் ஆண்டு யாழ்ப்பாண குடாநாட்டை புலிகள் கைப்பற்றலாமென்ற நிலைமையிருந்தது. இப்போது இந்தியா தலையிட்டதாக சொல்கிறார்கள் அல்லவா, எப்படி தலையிட்டது தெரியுமா? இந்த றோ ஆள்தான் பாலசிங்கத்திற்கு இந்தியாவின் நிலைப்பாட்டை அறிவித்தார்.

2005 இல் நோர்வே தூதர் எரிக் சொல்ஹெய்ம் புலிகளின் செய்தியை இந்தியாவிற்கு சொன்னார். சொல்ஹெய்ம் ஒரு இராஜதந்திரி. "ம்... பார்க்கலாம்" என்ற அளவில் அவருடன் இந்தியா அளவாகத்தான் பேசியது. ஆனால் இலண்டனில் உள்ள றோ ஆள்தான் இந்தியாவின் நிலைப்பாட்டை தெளிவாக சொன்னார். அந்த யோசனையை கேட்டு புலிகள் உண்மையிலேயே ஆடிவிட்டார்கள்.

2006 இன் மத்திய பகுதி. அன்ரன் பாலசிங்கம் கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்த சமயம். சமாதான பேச்சுக்கள் முறிந்து, வன்னியில் படைநடவடிக்கைகள் தீவிரம் பெற தொடங்கியிருந்தது. தனது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதை பாலசிங்கம் உணர்ந்திருந்தார். இந்த சமயத்தில் பிரபாகரன் பாலசிங்கம் உறவிலும் முன்னரை போல சுமுகமிருக்கவில்லை. இந்தியாவை சமாளித்தால்தான் விடுதலைப்புலிகளிற்கு எதிர்காலம் பிரகாசமாகுமென்பதை பாலசிங்கம் உணர்ந்திருந்தார். தனது மரணத்திற்கு முன்னர் இந்தியாவை சமாளிக்க விரும்பினார். கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்த சமயத்திலும் இந்திய மத்திய அரசிற்கு சில தகவல்களை கொடுத்தார். புலிகள் ஒருபோதும் இந்தியாவின் நலன்களிற்கு எதிராக செயற்படாது, இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு புலிகளை அங்கீகரிக்க வேண்டுமென கேட்டிருந்தார்.

இந்த தகவல்கள் எல்லாம் இலண்டனில் இருந்த றோ ஆளின் மூலம் காங்கிரசின் உயர்மட்டத்திற்கும், சௌத் புளொக் கொள்கை வகுப்பாளர்களிற்கும் சென்றது. அவர்கள் சில வாரம் இந்த விடயத்தில் தீவிர ஆலோசனை நடத்திவிட்டு புலிகளிற்கு பதில் அனுப்பினார்கள். இலண்டன் ஆள் மூலம்தான் அந்த பதில் வந்தது.

"ராஜிவ் கொலை விசயத்தில் பிரபாகரன், பொட்டம்மான் இருவருமே குற்றவாளிகள். இருவரையும் தண்டிக்க வேண்டுமென்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடு. கடந்தகால சம்பவங்களிற்காக புலிகளும் வருந்துகிறார்கள். சில விசயங்களில் விட்டுக்கொடுப்பாகவும் நடக்க தயாராக இருக்கிறார்கள். இந்தியாவும் இதைபுரிந்துகொண்டு சில விட்டுக்கொடுப்புக்களிற்கு தயாராக இருக்கிறது. பிரபாகரன் உங்கள் தலைவர். அவரை தண்டிக்கப் போகிறோம் என்பது பொருத்தமில்லாதது தான். இதில் இந்தியா விட்டுக்கொடுப்பாக நடக்கிறது. ஆனால் கண்டிப்பாக பொட்டம்மானை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும். அவர் இந்திய சட்டங்களின்படி தண்டிக்கப்படுவார்"

இதுதான் இலண்டனில் இருந்த றோ ஆள், பாலசிங்கத்திற்கு கொடுத்த இந்தியாவின் செய்தி.

இந்த செய்தி பிரபாகரனிற்கு உடனே அறிவிக்கப்பட்டது. இதற்கு மேல் இந்த விடயத்தில் எதையும் பேச பிரபாகரன் தயாராக இருக்கவில்லை. இதனால் 2006 இறுதிக்காலத்துடனேயே இந்த பேச்சு இல்லாமல் போய்விட்டது. இதுதான் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபின்னர் புலிகள் மேற்கொண்ட முதலாவது தொடர்பு முயற்சி.

இதற்கு இரண்டு வருடங்களின் பின்னரே மீண்டும் காங்கிசுடன் புலிகள் தொடர்பை ஏற்படுத்தினார்கள். ப.சிதம்பரம் தமிழராக இருந்ததும், மத்திய அரசில் செல்வாக்கானவராக இருந்ததும் புலிகள் அவரை தொடர்புகொள்ள காரணமாக அமைந்தது.

இந்த சமயத்தில் புலிகள் இன்னொரு வழியிலும் இந்தியாவை நெருங்கினார்கள். திமுக அப்போது காங்கிரஸ் கூட்டணியில் இருந்தது. திமுக தலைவர் கருணாநிதியின் புதல்வி கனிமொழி ஒரு கவிஞர். வழக்கமான அரசியல்வாதிகளுடன் ஒப்பிடுகையில் முற்போக்கான சிந்தனையுடையவர். அமெரிக்காவில் உள்ள தமிழ்நாட்டு பேராசிரியர் ஒருவர் மூலம் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் நடேசனிற்கும், கனிமொழிக்குமிடையில் தொடர்பு ஏற்பட்டது. ஏற்கனவே சிதம்பரத்திற்கு அனுப்பிய அதே செய்தியை கனிமொழிக்கும் புலிகள் அனுப்பினார்கள். சிதம்பரத்திற்கு அனுப்பிய விவரத்தையும் சொல்லி, சிதம்பரத்தை இந்த விடயத்தில் அக்கறையெடுக்க வலியுறுத்துமாறும் நடேசன் கேட்டுக் கொண்டார்.

செப்ரெம்பரில் சிதம்பரத்திற்கு புலிகள் ஒரு மெசேஜ் அனுப்பினாலும், அது சரணடைவிற்கான சமரசமல்ல. இந்தியாவின் நாடி பிடித்து பார்த்து, புலிகளின் தரப்பில் விட்டுக்கொடுப்பிற்கு தயார் என்ற செய்தியை மத்திய அரசிற்கு முன்னரே தெரியப்படுத்தலாம் என்பதே நோக்கம்.

2009 ஜனவரியில் அமெரிக்கா, ஏப்ரலில் இந்தியா தேர்தல்களை புலிகள் எதிர்பார்த்தார்கள் என்பதையும் . ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். அமெரிக்காவை இலங்கை விவகாரத்தில் தலையிட வைக்கும் பொறுப்பை குமரன் பத்மநாதன் ஏற்றிருந்தார். அவரிடம் 2008 இல் மீண்டும் சர்வதேச பொறுப்பாளர் பதவி வழங்கப்பட்டுவிட்டது. மலேசியாவில் இருந்தபடி கே.பி விடயங்களை கையாண்டார். எனினும், அமெரிக்க தலையீட்டு முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. தேர்தலில் வென்றாலும், ஈழ விவகாரத்தில் ஒரு அளவிற்கு மேல் நம்மால் செயற்பட முடியாதென பராக் ஒபாமா தரப்பிலிருந்து கூறப்பட்டிருந்தது.

இராணுவத்தை முன்னக விடாமல் தடுத்து வைப்பதும் புலிகளிற்கு முடியாத காரியமாக இருந்தது. இந்தியாவிற்கு புலிகள் மெசேஜ் அனுப்பிய பின்னர், 2008 ஒக்ரோபரில் மணியங்குளம், வன்னேரிக்குளம், ஜெயபுரம், நாச்சிக்குடா, கிராஞ்சி, ஜெயபுரம், பூநகரி, வலைப்பாடு என வரிசையாக நகரங்கள் இராணுவத்திடம் விழுந்து கொண்டிருந்தது.

பிரபாகரன் போட்ட ஏழு மாத கணக்கை பற்றி கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம். இந்தியாவிற்கு அனுப்பிய தூது, இந்திய, அமெரிக்க தேர்தல்கள் அனைத்தையும் மனதில் வைத்து, இராணுவத்தின் முன்னகர்வை தடுக்க புலிகள் ஜெயபுரத்தில் பெரும் மண் அணையொன்றை அமைத்திருந்தார்கள். அந்த மண் அணை அமைக்கப்பட்ட விதம், அதை இராணுவம் எப்படி தகர்த்தது என்பது பற்றிய விபரங்களை, தீபம் வாரஇதழில் “இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன?” தொடரில் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம்.

புலிகள் ஜெயபுரத்தில் இருந்து நாச்சிக்குடா வரை பன்னிரண்டு அடி உயர மண் அணை அமைத்திருந்தனர். இதன் முன்பக்கத்தில் பாரிய குழி. இராணுவம் கவச வாகனத்தில் வர முடியாது. முன்னேறி வரும் இராணுவமும் அந்த குழியை கடந்துதான் மண் அணையில் ஏற முடியும். இதற்குள் மண்

தொடர்ச்சி 25-ம் பக்கம்...

உலகம் சுற்றி பார்ப்போம் 10

# கல்யாணம், மெலகூனியா, கச்சேரி

சாள்ஸ் ஜே போர்மன்

ரோடோஸில் வந்திறங்கிய நாள் முதல் தவறாமல் கடைகளிலெல்லாம் நான் கண்ட ஒரு சிற்றுண்டிப்பொருள் என் ஆர்வத்தைக் கிளறியது. எங்கள் நாடுகளில் இருப்பது போன்ற எள்ளால் செய்யப்பட்ட தட்டையான இனிப்பு சிற்றுண்டிகள் அவை. பலவகைகளில் பொதிகளில் அடைக்கப்பட்டு விற்கப்படும் அவைகளில் ஒன்றிரண்டை எப்போதும் நாங்கள் வெளியே போகும்போது பைகளில் வைத்திருப்பது வழக்கமானது, சிற்றுண்டிக்காக. நிறைய சக்தியைக் கொண்டுள்ள அவைகளிரண்டை சாப்பிட்டால் காலையுணவே நிறைவடைந்து விடுகிறது.

ஆர்க்கஞ்சலோஸ் நகரிலிருந்து திரும்பி வந்தபின் இரவு உணவகமொன்றுக்குப் போயிருந்தபோது அங்கே வந்திருந்த மூதியவரொருவருடன் கதைத்துப் பழக முடிந்தபோது குறிப்பிட்ட இனிப்புக்கள் பற்றி கேட்டேன்.

எங்கள் ஊர் கல்யாணங்கள் நடக்க ஓரிரு நாட்களுக்கு முன்னரே தம்பதிகளின் உறவினர்கள் கூடி பல சிற்றுண்டிகள் தயாரிப்பது போலவே ரோடோஸிலும் வழக்கமாக இருக்கிறது. அச்சிற்றுண்டிகளில் முக்கியமானதுதான் எள், தேன், பாதாம்பருப்புக்கள், ஜாதிக்காய், கறுவா போன்றவைகளை கலந்து செய்யப்படும் "மெலகூனியா".

ரோடோஸ் மக்கள் பழகுவதில் மிகவும் திறந்த மனதுள்ளவர்கள் என்பதை காணமுடிந்தது. உலகின் பல நாட்டவர்களையும் நாளாந்தம் காண்பவர்களாகவும் சுற்றுலாப் பயணிகளைத் தங்கள் பொருளாதாரத்துக்கு பெரிதும் நம்பியிருப்பவர்களாக இருப்பதும் அதற்கான முக்கிய காரணங்களாக இருக்கலாம் என்று நினைத்துக்கொண்டேன். ஆனாலும், ஆங்கிலம் பேசுவது இளைய தலைமுறையினரிடம் இருப்பதுபோல சரளமாக அவர்களுக்கு மூத்தவர்களிடம் இருக்கவில்லை.

யன்னிஸ் என்ற எங்களுடன் கதைத்துக் கொண்டிருந்தவருக்கு சுமார் அறுபது வயதுக்கு மேலிருக்கும். தான் அரசபணியொன்றில் இருப்பதாகக் கூறிய அவரால் சரளமாக ஆங்கிலம் கதைக்க முடிந்தது.

தங்களது பாரம்பரியத்தை பற்றி விசாரித்த எனக்கு யன்னிஸ், அப்பகுதியில் ஒரு கல்யாணம் எப்படி நடக்கும் என்பதை ஆர்வத்துடன் விபரித்தார்.

கல்யாணம் நடக்கும் ஊரிலிருக்கும் அனைவருக்குமே அழைப்பு வைத்து கல்யாண தினத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்பிருந்தே தம்பதிகளின் உறவினர்களுடன் கூடி, வம்புகள், கிசுகிசுக்கள் பேசிக் கல்யாணம் நடாத்துவதுதான் தங்கள் நாட்டு வழக்கம் என்று சிரித்துக்கொண்டே சொன்னார் யன்னிஸ்.

பெண் பிறந்தவுடன், தாய் மகளுக்காக சீதனத்தை சேகரிக்க ஆரம்பிக்கிறாள். வீட்டுப்பாவிப்புப் பொருட்கள், கிறீஸ்தவ புனிதர்களின் படங்கள், சிற்பங்கள் உட்பட்ட பலவகையான பொருட்களும் சீதனத்தில் அடங்குகின்றன. தகப்பன் கல்யாணத்து செலவுகளுக்காகவும் மகளுக்கான வீடு ஒன்றைத் தயார்செய்யவும் உழைக்க ஆரம்பிக்கிறார்.

சீதனமாக என்னென்ன கொடுக்கப்படுமென்பதை இரண்டு வீட்டு பெரியவர்களும் சந்தித்து ஒப்பந்தமாக எழுதிக் கொள்வதுடன் கல்யாண ஏற்பாடுகள் ஆரம்பிக்கின்றன. அந்த ஒப்பந்தத்தில் நகராத்தலைவரும், ஒரு பாதிரியாரும், இரண்டு சாட்சிகளும் ஒப்பமிடுவார்கள். இந்த கலாச்சாரம் சட்டரீதியாக ஒழிக்கப்பட்டுவிட்டாலும் கிராமங்களில் இன்னும் நடைமுறையில் இருப்பதாகவே சொல்லப்படுகிறது.

உறவினர்கள் "மெலகூனியா" தயாரிக்க மணமகளோ "கிகௌதியெ" என்ற ஒருவித பிஸ்கோத்தை தயாரிக்கிறாள். அவைகள் சிறு துண்டுகளாகவெட்டப்பட்டுபைகளில் போடப்பட்டு கல்யாண நாளன்று விருந்தினர்களாக வருபவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன.

எல்லோரும் கூடி பலவித உணவுப் பொருட்களை சமைப்பதுடன் "கிரெவத்தி" என்ற தம்பதிகளின் முதலிரவுக் கட்டிலைச் சோடிக்கிறார்கள். தம்பதிகள் வாழவிருக்கும் வீட்டில் சகல சீதனப் பொருட்களையும் எல்லோரும் காணும் படியாக சோடிக்கிறார்கள். பாட்டி, தாய், மச்சாள்கள் என்று எல்லோரும் தைத்துக்கொடுக்கும் கைவேலைப்பாடுகள் வீடு முழுவதும் தொங்க விடப்படுகின்றன. நாட்டுப்புற இசைக்குழுக்கள் கல்யாண வீட்டில் நிகழ்ச்சிகள் வழங்குகிறார்கள்.

கல்யாணத்தின் இன்னொரு பகுதி கிரேக்க ஓர்த்தடொக்ஸ் தேவாலயத்தில் நடக்கிறது. கல்யாணம் நடக்கும் வீட்டிலிருந்து கிராமத்தினுடாக கிராமிய உடைகளுடன், பரிசுப்பொருட்களுடன் தேவாலயத்துக்கு நடந்து செல்வது பாரம்பரியம். ஆனால், இப்போதெல்லாம் பெரும்பாலான கல்யாணத் தம்பதிகள் அலங்கரிக்கப்பட்ட விலையுயர்ந்த வாகனங்களில்தான் தேவாலயத்துக்கு அழைத்து வரப்படுகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டினார் யன்னிஸ்.

அங்கே நிச்சயதார்த்தம் ஒரு பகுதியாகவும் புனித பாகம் இன்னொரு பகுதியாகவும் பாதிரியாரால் நிறைவேற்றப் படுகிறது. மணமக்களின் மோதிரங்களை ஆசீர்வதித்து அவற்றை தோழன்,தோழி அல்லது யாராவது வயது முதிர்ந்தவரான "கூம்பாரோ"விடம் பாதிரியார் ஒப்படைக்கிறார். கூம்பாரோ அந்த நிச்சயதார்த்த மோதிரங்களை எடுத்து கல்யாணத் தம்பதிகளின் கைகளில் மூன்று தடவை மாற்றி மாற்றி அணிவிக்கிறார். கிறிஸ்துவ மதத்தின் அடிப்படை நம்பிக்கையாக இருக்கும் பிதா, சுதன், பரிசுத்த ஆவியை அந்த மூன்று தடவைகள் பிரதிபலிக்கின்றன.

திருமணத்தின் புனித பாகமாக தம்பதிகளின் மீது பூக்களால் அல்லது தங்கத்தால் செய்யப்பட்ட கிரீடங்கள் அணிவிக்கிறார் பாதிரியார். அக்கிரீடங்களையும் மூன்று தடவைகள் தம்பதிகளின் தலைகளில் மாற்றியணிவிக்கிறார் "கூம்பாரோ". சுவிசேஷத்திலிருந்து பாதிரியார் கல்யாணத்துக்கான பிரத்தியேக வரிகளான கானா நகர கல்யாணத்தில் கிறீஸ்து செய்த அதிசய விபரங்களை வாசித்த பின் தம்பதிகளிருவருக்கும் ஒரே கோப்பையில் ஆசீர்வதிக்கப்பட்ட திராட்சைரசம் வழங்கப்படுகிறது. ஒரே கோப்பையில் தம்பதிகள் பருகுவது அவர்கள் தமது வாழ்விலும், தாழ்விலும் ஒன்றிணைந்து இருக்க வேண்டும் என்பதை அடையாளப் படுத்துகிறது.



அடுத்தகட்டமாக பாதிரியார் வேதாகமத்திலிருந்து "மனைவி தன் கணவனுக்கு அடங்கி நடப்பாளாக," என்ற வசனங்களடங்கிய பகுதி வாசிக்கப்படுகிறது. அச்சமயத்தில் மணமகளின் பாதங்களை மணமகன் தனது பாதத்தால் மெதுவாக மிதித்து அவ்வரிகளை அடையாளப் படுத்துவது நீண்டகால மரபு.


அவ்விடயத்தில் தற்காலத்தில் பல தம்பதிகள் தமது கற்பனையை பயன்படுத்தி எதிர்மாறாக மணமகள் தனது பாதத்தால் மணமகனின் பாதத்தை மிதித்து "யார் உண்மையில் ஆதிக்கமுள்ளவர்," என்பதைக் காட்டுவதாக சிரித்துக் கொண்டே சொன்னார் யன்னிஸ்.

திருமணம் என்பது என்றென்றைக்குமான பந்தம் என்பதை உணர்த்த, பாதிரியார் அதற்கடுத்ததாக மணமக்களை மூன்று தடவை தேவாலயபீடத்தை சுற்றிக்கூட்டிச் செல்வார். பிறகு அவர்களது கிரீடங்களை கழற்றிவிட்டு அவர்களுடையை கைகளைப் பிரித்து வேதாகமத்தில் வைத்து "இணைக்கப்பட்ட பந்தத்தை கடவுள் மட்டும்தான் பிரிக்க முடியும்," என்று சொல்வார். தம்பதிகள் மீது உற்றார், உறவினர் கோதுமை மற்றும் தானியங்களை தூவுவார்கள், அவர்கள் தங்கள் இனத்தைப் பெருக்க வேண்டும் என்பதை காட்டும் வகையாக.

சமீப காலத்தில் ரோடோஸின் சில இடங்கள் மற்றைய ஐரோப்பியர்களுக்கும் திருமண வைபவங்களுக்கு பிரபலமாகியிருக்கின்றன. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று கிரேக்கர்களின் பொருளாதாரத்தாழ்வு அவர்களுடைய நாட்டின் விலைகளை குறைத்திருக்கிறது. அதனால் மற்றைய ஐரோப்பியர்களுக்கு கிரீஸ்மலிவு வாசஸ்தலமாக மாறியிருக்கிறது.


திருமண வைபவங்களுக்கு பிரபலமானவற்றில் முதலாவது இடத்தைப்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...






**செல்லப்பிராணிகள் வளர்ப்பதற்கு நம்மில் பலருக்கு விருப்பமிருக்கும். அதை பணமீட்டும் செல்லப்பிராணியாக வளர்த்தால் இரட்டை நன்மையல்லவா. அப்படியான இரண்டு பறவையினங்களை வளர்க்கும் முறைகள் பற்றிய குறிப்பு இது.**



# செல்லப்பிராணிகள்

### புறா

100 புறாக்களுக்கு 3 கிலோ தீவனம்!

100 வளர்ப்புப் புறாக்களுக்கு நாள் ஒன்றுக்கு கேழ்வரகு 1 கிலோ, சோளம் அரை கிலோ, கம்பு அரை கிலோ, கோதுமை அரை கிலோ, மக்காச்சோளம் அரை கிலோ ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து தீவனமாகக் கொடுக்க வேண்டும்.

பந்தயப் புறாக்களைப் பொறுத்தவரை... பத்து புறாக்களுக்கு நாள் ஒன்றுக்கு பச்சைப்பட்டாணி 1 கிலோ, கொண்டைக்கடலை அரை கிலோ, பச்சைப்பயறு அரை கிலோ, நிலக்கடலை அரை கிலோ, சஃபோலா விதை அரை கிலோ ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து வைக்க வேண்டும்.

புறாக்களுக்கு தினமும் காலை, மதியம், மாலை நேரங்களில் தண்ணீர் வைக்க வேண்டும். வாரம் ஒரு முறை கூண்டுகளை சுத்தம் செய்ய வேண்டும். அழகுக்காக வளர்க்கும் புறாக்களைக் காலையில் திறந்து விட்டு, மாலையில் அடைத்து வைத்தால் போதும். பந்தயப் புறாக்களை வாரம் ஒரு முறை மட்டும்தான் திறந்து பறக்க விட வேண்டும். புறாக்களுக்கு அம்மை, கழிச்சல் மாதிரியான நோய்கள் தாக்கினால், கடைகளில் கிடைக்கும் மருந்துகளைப் பயன்படுத்தலாம்.

### வளர்ப்புக்கு ஏற்ற 4 மாத குஞ்சுகள்!

வளர்ப்புக்காக இருந்தாலும் சரி... பந்தயங்களுக்குப் பழக்குவதாக இருந்தாலும் சரி, நான்கு மாத வயது கொண்ட புறாக்களைத்தான் வாங்க வேண்டும். புதிதாக வாங்கிவந்த புறாக்களின் இறக்கையில் ரபர்பாண்ட் போட்டு 20 நாட்கள் வைத்திருந்தால், இடம் பழகிவிடும். பந்தயப் புறாக்களுக்கு மூன்று மாதங்கள் முடிய கடுமையான பயிற்சி கொடுக்க வேண்டும்.


### ஆண்டுக்கு 6 முட்டை!

ஒரு புறா மூன்று மாதத்துக்கு ஒரு முறை இரண்டு முட்டைகள் வீதம் இடும். ஆண்டுக்கு நான்கு முறை முட்டை விடுவதற்கு வாய்ப்பிருந்தாலும், மூன்று முறை மட்டும்தான் இனப்பெருக்கத்துக்கு அனுமதிக்க வேண்டும். இதன் மூலம் ஆண்டுக்கு 6 முட்டைகள் கிடைக்கும். இந்த ஆறு முட்டைகளும் தரமானதாக இருந்தால், 6 குஞ்சுகள் கிடைக்கும். 18 முதல் 20 நாட்களில் புறாக்கள், குஞ்சுகளைப் பொரிக்கும். தாய்ப் பறவையும், தந்தைப் பறவையும் வாயில் கொண்டு வரும் உணவைக் குறிப்பிட்ட காலத்துக்கு ஊட்டி வளர்க்கும். பறக்க ஆரம்பித்த குஞ்சுக்கு அந்த இடத்தைக் கொடுத்துவிட்டு, பெற்றோர்கள் வேறு இடத்துக்கு மாறிவிடுவார்கள்.

புறாக்களை வளர்க்க மொட்டை மாடி போதுமானது. ஒரு ஜோடி புறாவை அடைப்பதற்கு, ஒன்றரை அடிக்கு ஒன்றரை அடி அளவில் கூண்டுகள் தேவை. அதிகமான அளவில் புறாக்களை வளர்க்கும் போது... ஒரு புறாவுக்கு முக்கால் அடி நீள, அகல, உயரத்தில் சிறிய அறைகளாக அமைத்துக் கொள்ள வேண்டும். பந்தயப் புறாக்களில் ஆண், பெண் புறாக்களைத் தனித்தனியாக கூண்டுகளில் அடைக்க வேண்டும். பருவகாலத்தில் மட்டும்தான் ஒன்றாகச் சேர்க்க வேண்டும்.

### வாத்து

காலையில 6 மணியில இருந்து 7 மணிக்குள் மேய்ச்சலுக்குத்திறந்து விடலாம். திறந்து விட்டதும் 10 கிலோ பதரைத் தூவி விடலாம். இது 100 வாத்துக்களுக்கும் போதுமானது. வாத்துக்கான தண்ணீர் தொட்டியிலகூட இதைத் தூவலாம். 3 கிலோ நெல் தவிடு அல்லது கோதுமைத் தவிடை 6 லிட்டர் தண்ணீர் விட்டு பிசைந்து, 30 நிமிடம் ஊற வைத்து, 9 மணியில் இருந்து 10 மணிக்குள் தீனியா கொடுக்கலாம். மதியம் 12 மணிக்கு 2 கிலோ நவதானியக்கலவையைத் தரையில் தூவலாம். காலையில கொடுத்த மாதிரியே ஊறவைத்த தவிடை மாலையிலும் கொடுத்திடுவோம். பின்னர் தீனி போடத் தேவையில்லை. குடிக்க தண்ணீர் மட்டும் வைத்தால் போதும்.



### சுத்தம்... கவனம்!

தினமும் காலையில வாத்துகளை மேய்ச்சலுக்காகத் திறந்து விட்டதும் முட்டைகளைச் சேகரிக்க வேண்டும். அடுத்து, கொட்டகைக்குள் உதிர்ந்து கிடக்கும் இறக்கைகளை அப்புறப்படுத்த வேண்டும். ஒவ்வொரு முறை தண்ணீர் வைக்கும்போதும் பாத்திரத்தை சுத்தம் செய்தபிறகே தண்ணீர் கொடுக்க வேண்டும். அதேபோல, வாத்து நீந்துவதற்கு தண்ணீர்த் தொட்டி அவசியம். 10 வாத்துகளுக்கு இரண்டு அல்லது மூன்று வட்டவடிவ பிளாஸ்டிக் டப் போதுமானது. அசோலா வளர்க்கப் பயன்படுத்தப்படும் நீளமான 'குழி'யிலும் தண்ணீர் நிரப்பி வைக்கலாம்.

பத்து பெட்டைக்கு ஓர் ஆண்!

முட்டைக்காக வளர்க்கும்போது, பத்து பெட்டை வாத்துகளுக்கு ஓர் ஆண் வாத்து என்ற விகிதத்தில் வளர்க்க வேண்டும். மூன்று மாத வயது நிரம்பிய பிறகுதான் வாத்துகளில், ஆண், பெண் அடையாளம் தெரியும். அதனால், மூன்று மாத வயது ஆனவுடனே தேவையான அளவு ஆண் வாத்துக்களை மட்டும் வைத்துக்கொண்டு, மற்றதைக் கழித்து விட வேண்டும். மூன்று மாதத்தின் பின் வாத்துக்கள் பருவத்துக்கு வர ஆரம்பிக்கும். இனச்சேர்க்கை நடந்த பத்து நாளில் பெட்டை வாத்துக்கள் முட்டையிடும். பொதுவாக வாத்துக்கள் அதிகாலையில்தான் முட்டையிடும். அதை இரவு கூண்டுக்குள் அடைத்து வைத்தால் முட்டையை சுலபமாக சேகரிக்க முடியும். வாத்துகளுக்குத் தொடர்ச்சியா முட்டையிடும் பழக்கம் உண்டு. ஒரு வாத்து வருஷத்துக்கு 200 முட்டைகள் வரை கூட இடும்.


### ஒரு மாத குஞ்சுகளே ஏற்றவை!

பொதுவாக எந்தப் பறவையை வாங்கி வளர்ப்பதாக இருந்தாலும், ஒரு மாத வயதில் வாங்குவது நல்லது. சிலர் ஒரு நாள் குஞ்சுகளை விற்பனை செய்வார்கள். அப்படி வாங்கி வரும்போது... அவற்றை நாய், பூனைகள் போன்ற விலங்குகளிடம் இருந்தும் நோய்களில் இருந்தும் காப்பாற்றுவது கடினம். அதனால், ஒரு மாத வயதுடைய வாத்துக் குஞ்சுகளை வாங்குவது நல்லது. வாத்துகளுக்கு இரவில் அடைக்க கொட்டகை அல்லது, கூண்டு அவசியம். 100 சதுர அடி கொட்டகை அல்லது கூண்டில் 50 வாத்துகளை அடைக்கலாம். கொட்டகையின் தரைப்பகுதியில, கடலைத்தோல், தென்னை நார்க்கழிவு பரப்பி வைக்கலாம். மூன்று நாட்களுக்கு ஒரு முறை கழிவுகளைச் சேகரித்து செடிகளுக்கு உரமாகப் பயன்படுத்தலாம்.

---

பெற்றிருப்பது லிண்டோஸ் நகரிலிருக்கும் புனித பவுல் ஆலயமாகும். கி.பி 43 இல் அப்போஸ்தலர் பவுல் தனது கிறீஸ்தவ பிரச்சாரத்துக்காக இவ்விடத்தில் வந்து இறங்கியதாக ஐதிகம். அதை ஞாபகப் படுத்த கட்டப்பட்டிருக்கும் அழகிய வெள்ளையான சிறுகோவிலில் கல்யாணம் செய்துகொள்ள சுமார் ஒரு வருடத்துக்கு முன்னரே திகதி குறித்துக்கொள்ளும் நிலைமை உண்டாகியிருப்பதாகத் தெரிய வருகிறது. காரணம் அந்த தேவாலயம் இருக்கும் இடத்தின் குடாவின் அழகுதான். அதைப் பற்றி நான் அங்கே போயிருந்ததைப் பற்றி எழுதும்போது சொல்வேன்.

பிரபலமாகியிருப்பதன் விளைவுகள் எப்போதுமே நல்லதாக மட்டும் அமைவதில்லை. குறிப்பிட்ட தேவாலயத்தில் திருமணம் செய்துகொண்ட ஒரு பிரிட்டிஷ் தம்பதிகள் அத்திருமண வைபவத்தின் பின்பு எடுத்துக்கொண்ட படங்களை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து கொண்டார்கள்.



அப்படங்களில் ஒன்று "அருமையான கல்யாணப்படம்" என்ற பெயரில் உலகம் முழுவதும் வெகுவேகமாக பகிரப்பட்டது. காரணம் குறிப்பிட்ட படத்தில் அந்த பிரிட்டிஷ் மணமகள் தனது திருமண உடையுடன் முழங்காலில் இருந்தபடி, மோனிக்கா லெவின்ஸ்கி பில் கிளிண்டனுகு செய்த சேவையை நின்று கொண்டிருந்த தனது கணவனுக்கு செய்து கொண்டிருந்தாள்.

ஓர்த்தடொக்ஸ் கிறீஸ்துவ மார்க்கம் அதன் பெயரில் குறிப்பிடப்பட்டிருப்பதை போலவே பாரம்பரியத்தை பேணுவதில் கண்ணும்கருத்துமாக இருக்கும். கழுத்து முதல் மார்பின் மேல் பக்கத்தை மறைக்காமலோ, அரைக்காற்சட்டை அணிந்தோ அம்மார்க்கத்தின் தேவாலயங்களுக்குள் நுழைய முடியாது.

அப்படிப்பட்ட மார்க்கத்தில் அப்படம் எந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை சொல்லத்தேவையில்லை. விளைவாக உடனடியாக வெளிநாட்டவர்கள் குறிப்பிட்ட தேவாலயத்தில் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று தடைபோட்டுவிட்டார் அப்பிராந்திய மேற்றிராணியார்.

தொடரும்...

மருதன்




உயிர்கொல்லும் கண்ணீர்ப் புகைக் குண்டு, ஆபத்தற்ற கண்ணீர்ப் புகைக்குண்டு என்று இரண்டாக வகைப்படுத்தி அழைத்தாலும் இவற்றுக் கிடையில் எந்தப் பெரிய வேறுபாடும் இருப்பதுபோல் தெரியவில்லை. இரண்டுமே ஒன்றுபோல் பாய்கின்றன, ஒன்றுபோல் உயிர்களைக் கொல்கின்றன. ஜவஹெர் அபு ரஹ்மா என்னும் 35 வயது பாலஸ்தீனப் பெண்மீது இஸ்ரேல் வீசியது எந்த வகைப் புகைக்குண்டு என்று தெரியவில்லை. அப்படியே சுருண்டு கீழே விழுந்துவிட்டார். போராட்டத்தை நிறுத்திவிட்டு, சிலர் அவரை அள்ளியெடுத்துக்கொண்டு ஓடியிருக்கிறார்கள். ஓடிக்கொண்டி ருக்கும்போதே அடுத்தடுத்து குண்டுகள் புகை கக்கியபடி பெயர்ந்துவந்து அவர்கள் காலடியில் விழுந்து கொண்டிருந்தன. மயங்கியவர்களைப் போலவே ஓடியவர் களுக்கும் சம அளவில் மூச்சுத் திணறல் இருந்திருக்கவேண்டும். அவற்றையெல்லாம் மீறித்தான் மருத்துவமனைக்குள் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

இது நடந்தது ஜனவரி 2011ல். மேற்குக் கரையின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் பிலின் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர் அபு ரஹ்மா. நான், என் வீடு, என் மதம், என் குடும்பம்' என்று வெளியுலகம் உட்புகாதவாறு கதவுகளை இறுக்கப் பூட்டிக்கொண்டு தன்னுடைய பிரத்தியேக உலகில் வாழ்ந்துவந்தவர்தான் அவர். ஆனால், அவர் வசித்த அதே கூரையின்கீழ் வளர்ந்த அவரின் சகோதரர் பசீம் அபு ரஹ்மா வீட்டைப் பற்றிச் சிந்தித்ததே கிடையாது. மாபெரும் அரசியல் கனவொன்றில்தான் அவர்



எந்நேரமும் திளைத்துக்கொண்டிருந்தார். இஸ்ரேலின் பிடியிலிருந்து பாலஸ்தீனம் விடுவிக்கப்படவேண்டும் என்பதுதான் அந்தக் கனவு.

இதையே லட்சியமாகவரித்துக்கொண்டு இயங்கிவந்த பாலஸ்தீன இளைஞர்களுடன் இணைந்து செயல்பட்டுவந்தார் பசீம். எந்நேரமும் தன் தோழர்களுடன் அமர்ந்து அரசியல் விவாதங்களை நடத்திக் கொண்டு, எந்நேரமும் ஏதோவொரு போராட்டத்துக்குத் திட்டமிட்டுக் கொண்டிருந்ததன் தம்பியைக்கவலையுடன் பார்த்துக்கொண்டு நிற்பதைத் தவிர வேறு



# ரத்தமும் அவமானமும்!

என்ன செய்வதென்று தெரியவில்லை ஜவஹெருக்கு. நமக்கே ஆயிரத்தெட்டுப் பிரச்னைகள், இந்த அரசியல் விபரீத மெல்லாம் உனக்கு எதற்கு பசீம்' என்று சொல்லத்தான் ஆசை. ஆனால், சொல்பேச்சு கேட்டு நடக்கக்கூடிய வயதா பசீமுக்கு?

ஒரு நாள், தன்னுடைய பகுதிக்கு மிக அருகில் வளர்ந்துகொண்டிருந்த ஆக்கிர மிப்புச்சுவரை எதிர்த்துஒருபோராட்டத்தை முன்னெடுக்க பசீமும் அவர் நண்பர்களும் முடிவு செய்தனர். பெரிதாக ஒன்றுமில்லை, பாலஸ்தீனக் கொடியைக் கையில் ஏந்தி, சில பதாகைகளைப் பிடித்துக்கொண்டு சுவரையொட்டியுள்ள பகுதிகளில் உலா வருவதுதான் திட்டம். மிக எளிய, மிகவும் அடிப்படையான ஓர் எதிர்ப்புப் பேரணியாக இந்நிகழ்வை அவர்கள் கட்டமைத்திருந்தார்கள். பிரிவி னைச் சுவர் என்பது கல்லும் மண்ணும் மட்டுமல்ல. அது நம் இனத்தை அடிமைப் படுத்துவதற்காகப் பின்னப்படும் ஓர் அடிமைச்சங்கிலி என்பதை மக்களுக்கு உணர்த்த அவர்கள் விரும்பினார்கள். அவர்களிடம் ஆயுதம் இல்லை. ஆயுதத்தைக் கொண்டு இஸ்ரேலை வீழ்த்தி விடுதலை பெற்றுவிட முடியும் என்று பகல் கனவு காணத் தயாராக இல்லை அவர்கள். சின்னச் சின்ன அடிகளாக எடுத்து வைத்து மக்களின் மனதை மாற்றி, அவர்களை ஒருங்கிணைத்து அமைதி வழியில் போராடி சுதந்திரத்தை வென்றெடுக்க வேண்டும் என்பதே அவர்கள் விருப்பம்.

31 ஏப்ரல் 2009 அன்று நடக்க ஆரம்பித்தார்கள். ஆரம்பிக்கும்போதே, ஆயுதம் தாங்கிய இஸ்ரேலிய ராணுவப் படையை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தன்னுடைய நாட்டின் மண்ணை மிதித்துக்கொண்டு நிற்கும் இஸ்ரேலிய பூட்ஸ் கால்களைப் பார்த்தபடி பசீம் அபு ரஹ்மா தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருந்தார். 'என் காலத்தில் இல்லாவிட்டாலும் அடுத்த தலை முறையிலாவது இந்தக் கால்களை இங்கிருந்து அகற்றியாகவேண்டும். இல்லா விட்டால் உலக வரைபடத்திலிருந்து பாலஸ்தீனம் அகற்றப் பட்டுவிடும்.'

இதற்கிடையில் ஜவஹெர் வீட்டில் காத்திருந்தார். எல்லாம் நல்லபடியாக முடிந்து பசீம் வீடு வந்து சேர்ந்துவிட வேண்டும் என்பதே அவருடைய ஒரே பிரார்த்தனையாக இருந்தது. ஆனால், வீட்டுக்கு வந்து சேர்ந்தது பசீமின் உடல்தான். என்ன நடந்தது என்பதை மற்றவர்கள் அழுகையுடன் விவரித்தார்கள். ஆனால், ஒரு சொல்கூட ஜவஹெரைச் சென்றடையவில்லை.

விசாரணை என்றொன்று அதற்குப் பிறகு நடந்தது. அமைதியாக நடந்த ஒரு போராட்டத்தைஎதற்காகராணுவம்குண்டு வீசித் தடுக்கவேண்டும்? நிராயுதபாணியைக் கொல்வது கொலைக்குற்றம் அல்லவா? பசீமைக் கொன்ற இஸ்ரேலிய வீரரை ஏன் குற்றவாளியாகக் கருதி தண்டனை கொடுக்கக்கூடாது? வழக்கு நீதிமன்றத் துக்குச் சென்றுள்ளது என்று ஜவஹெரிடம் சொன்னார்கள். நீதி கிடைக்கும், கவலைப்படாதே என்று அவரை ஆற்றுப் படுத்தவும் முயன்றார்கள். இஸ்ரேலிய நீதிமன்றங்களை அவர்கள் ஒருபோதும் நம்பியதில்லை என்றாலும், பசீம் விவகாரம் தனித்துவமானது அல்லவா?

முதல்முறையாக அவர்களிடம் வலுவான வீடியோ ஆதாரம் இருந்தது. பசீம் தன் தோழர்களுடன் அமைதியாக நடந்துகொண்டிருந்த காட்சிகள் அதில் பதிவாகியிருந்தன. பாலஸ்தீனர்கள் தாக்கினார்கள், தற்காப்புக்குத் திருப்பித் தாக்கினோம் என்று ஆயிரத்தெட்டு முறை சொன்ன காரணத்தை இந்த முறை பயன்படுத்த முடியாது. முன்னெச் சரிக்கையுடன் முடிவு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட இந்த வீடியோ ஓர் அப்பாவியின் கொலைக்குச் சாட்சியமாக இருக்கும். யார் கண்டது, நீதியைப் பெற்றுத்தரும் வலிமை இதற்கு இருக்கவும் செய்யலாம்.

வீடியோவைப் போட்டுப் பார்த்துப் பரிசீலித்த பிறகு நீதிமன்றம் தீர்ப்பளித் தது. ஓர் இஸ்ரேலிய வீரர் பசீமின் மார்பைக் குறிவைத்துக் குண்டு வீசுவது போன்ற காட்சி இதில் வருவது உண்மை. ஆனால், சம்பந்தப்பட்ட நபரைக் கொல்ல வேண்டும் என்னும் நோக்கத்தில்தான் வீரர் குண்டு வீசினார் என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. எனவே, ராணுவ வீரர் மீது நடவடிக்கை எதையும் மேற்கொள்ள முடியாது என்றது தீர்ப்பு. இது குறித்த செய்தி ஜவஹெரின் காதுகளை அடைந்தபோது அவர் தனது நீண்ட துயிலிலிருந்து திடுக்கிட்டு விழித்துக்கொண்டார்.

பசீமின் வீடியோ அவரை உலுக்கி எடுத்து நிஜ உலகில் கொண்டுவந்து போட்டது. அந்த வீடியோவை அவர் எத்தனை முறை பார்த்திருப்பார் என்று சொல்ல முடியாது. வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்து, பிறகு அந்தப் போராட்டம் ஆரம்பமாகியிருக்கிறது. உள்ளூர்வாசிகள் மட்டுமின்றி அயல் நாடுகளிலிருந்தும் செயற்பாட்டாளர்கள்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

திரண்டு வந்திருந்தனர். இஸ்ரேலியப் பாதுகாப்புப் படையினர் (ஐ.டி.எஃப்) சுவருக்கு அருகில் காத்திருந்தனர். பாலஸ்தீனர்கள் நடந்து வருவதைப் பார்த்ததும், இது ராணுவப் பகுதி, நெருங்கி வராதே' என்று ஒலிபெருக்கியில் அறிவிக்கிறார்கள். 29 வயது பசீம் வீடியோவில் தனித்துத் தெரிகிறார். சுத்தமாக மழிக்கப்பட்ட கன்னம். நன்றாக வாரப்பட்ட குட்டையான தலைமுடி. கண்ணைப் பறிக்கும் மஞ்சள் நிற டீ ஷர்ட்டும் ஜீன்ஸும் அணிந்திருக்கிறார். கூட்டத்தோடு நடந்துகொண்டிருந்த பசீம் ஒரு கட்டத்தில் நடப்பதை நிறுத்திவிட்டு இஸ்ரேலியர்களை நோக்கிச் சத்தமிடுவது தெரிகிறது. 'இது ராணுவப் பகுதி என்று சொல்லாதே, இது எங்கள் கிராமம். இதை நீ ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறாய். அத்துமீறுவது நாங்களல்ல, நீதான்!'


'கலைந்து போ', 'கலையமாட்டோம்' என்னும் இரு குரல்களும் ஒரே சமயத்தில் கலந்து ஒலிக்கின்றன. பாலஸ்தீனக் கொடியை ஏந்திய சில இளைஞர்கள் பசீமைக் கடந்து முன்னால் நகர்ந்து செல்கின்றனர். கீ...' என்று பஸ்ஸர் ஒலி கேட்கிறது. பூட்ஸ்கால்கள் தடதடக்கின்றன. வீரர்கள் பரபரப்புடன் ஒன்றுகூடுகிறார்கள். கண்ணீர்ப் புகைக்குண்டுகள் பறந்து வருகின்றன. கூச்சலும் ஓலமும் காற்றில் பரவுகின்றன. காட்சிகள் பேய்த்தனமாக மேலும் கீழுமாக ஆடுகின்றன. கால்கள் மேல்புறத்தில் தோன்றுகின்றன. துப்பாக்கிச் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் சிலர் விரைந்து பின்னால் திரும்பி ஓடுகிறார்கள்.

கமரா இப்போது இஸ்ரேலியர்களின் பக்கம் திரும்புகிறது. பாலஸ்தீனக் கொடியுடன் சிலர் அதற்குள் சுவரை நெருங்கியிருந்தனர். சிலருடைய கைகளில் தற்காப்புக் கேடயம் இருக்கிறது. கண்ணீர்ப் புகைக்குண்டுகள் முன்பைவிட அதிகமாகப் பொழியத் தொடங்குகின்றன. அதிக சத்தம். அதிக ஓட்டம். அதிக குழப்பம். கமராவை வைத்திருப்பவர் இந்தக் களேபரங்களுக்கு அருகில் இப்போது இருக்கிறார். பசீம் இருப்பது அவருக்குப் பின்னால். இருவரிடமும் கேடயம் இல்லை. சில காட்சிகளுக்குப் பிறகு பசீம் அலறும் சத்தம் கேட்கிறது. கமரா திடுக்கிட்டுத் திரும்புகிறது. இப்போது பசீம் தரையில் விழுந்துகிடக்கிறார். தன் மார்பை அவர் கையில் ஏந்தியிருக்கிறார். அவருடைய விரல்களுக்கு இடையிலிருந்து ரத்தம் கசிந்துவருவதை நாம் பார்க்கிறோம்.

கீழே குனிந்து தேடி, பசீமைத் துளைத்த குண்டை எடுத்துவந்து அவருடைய வீட்டில் தரவேண்டும் என்று யாருக்கோ தோன்றியிருக்கிறது. அந்தக் குண்டையும் பலமுறை கையில் எடுத்துப் பார்த்துவிட்டார் ஜவஹெர். சிறியதாக அதே சமயம் சற்று கனமாக இருந்தது. அதைக் காட்டி உருளைக்கிழங்கு என்று சொல்லியிருந்தால் அந்நியர்கள் உடனே நம்பிவிடுவார்கள். தன் வீட்டைத் தேடிவந்த பத்திரிகையாளர்களுக்கு ஜவஹெர் அந்தக் குண்டை எடுத்து வந்து காட்டுவதை வழக்கமாக்கிக் கொண்டார். அந்த வீடியோவையும் அவர்களுக்குப் போட்டுக் காட்டுவார். 'அது பசீம். இது அவனைக் கொன்ற குண்டு.'

இஸ்ரேல் முழுக்க முழுக்க சுவர்களைக் கொண்டு ஜீவித்திருக்கிற ஒரு நாடு என்பதை உணர ஜவஹெருக்கு அதிக காலம் பிடிக்கவில்லை. ஒரு நாடுகூட அல்ல அது. பலமாகப் பாதுகாக்கப்பட்ட ஒரு கோட்டை மட்டுமே. உளவாளிகளும் ராணுவமும் சுவர்களை எழுப்பும் கட்டடக் கூலிகளும் இல்லாதுபோனால் இஸ்ரேல் இருக்காது. ஒரே சமயத்தில் மிகப் பெரிய ஆக்கிரமிக்கும் சக்தியாகவும் இருபத்து நான்கு மணி நேரமும் அச்சத்துடன் தன்னைத் தற்காத்துக்கொள்ளும் ஒரு பலவீனமான நாடாகவும் இஸ்ரேல் இருக்கிறது. ஆயுதங்களையும் அமெரிக்காவையும் கொண்டு அது தன் பலவீனத்தை மறைத்துக்கொள்கிறது. ராணுவத்தை அரசியல் பாதுகாக்கிறது. அரசியல் ராணுவத்தைச் சார்ந்திருக்கிறது.





அரசியலும் ராணுவமும் இணைந்து சுவரை எழுப்புகின்றன. இந்த இரண்டும் சேர்ந்தே அதைப் பாதுகாக்கின்றன.

சுவருக்குப் பல பொறுப்புகள் இருக்கின்றன. அது இஸ்ரேலைப் பாலஸ்தீனத்திடமிருந்து பிரிக்கிறது. பாலஸ்தீன மக்களை சுதந்திரத்திடமிருந்தும் சுதந்திர வேட்கையிலிருந்தும் பிரிக்கிறது. இளைஞர்களை அவர்களுடைய குடும்பங்களிடமிருந்தும், தந்தைகளை அவர்களின் குழந்தைகளிடமிருந்தும், பெண்களை அவர்களின் கணவன்களிடமிருந்தும் பிரித்து வைக்கிறது. சுதந்திரமான ஒரு பகுதியை, சுவர் ராணுவ கேந்திரமாக மாற்றுகிறது. பள்ளிக்கூடங்களை, குடியிருப்புகளை, விளைநிலங்களை வகுத்துச் சுடுகாடாக மாற்றுகிறது. சுடுகாட்டையும்கூட அது விட்டுவைக்கவில்லை. 'என் வீட்டுக்கு அருகிலிருந்த தந்தையாரின் கல்லறை இப்போது சுவருக்கு அந்தப் பக்கம் சென்றுவிட்டது. சட்டவிரோதமாக மட்டுமே இனி நான் என் தந்தையை தரிசிக்கமுடியும்' என்கிறார் பாலஸ்தீனர் ஒருவர்.

பசீமும் அவரின் தோழர்களும் சுவரை எப்படி அர்த்தப்படுத்திக்கொண்டார்கள் என்பதும், ஏன் அதை உயிரைக் கொடுத்து எதிர்த்தார்கள் என்பதும் ஜவஹெருக்கு இப்போது தெளிவாகப் புரிந்தது. அது ஒரு பிரிவினைச் சுவர் மட்டுமல்ல, பாலஸ்தீனர்கள் பலரின் ரத்தம் அதில் பீய்ச்சியடிக்கப்பட்டிருக்கிறது. 'நீங்கள் ஆக்கிரமிக்கப்பட்டவர்கள், இஸ்ரேலின் தயவில் வாழ்பவர்கள்' என்பதை இரவு பகலாக உணர்த்திக்கொண்டு நிற்பதால் அது ஓர் அவமானச் சுவரும்கூட. அதை ஏற்றுக்கொண்டால் நாம் அடிமைகள் என்பதையும் ஏற்றுக் கொண்டதாக ஆகிவிடும்.

ஒரு நாட்டிலிருந்து அகதிகள் உருவாவதை உலகம் கண்டிருக்கிறது. ஒரு நாடே அகதிகளாலும் அகதிகளாக மாறவிருப்பவர்களாலும் நிரம்பியிருப்பது பாலஸ்தீனத்தில் மட்டும்தான். சுவரின் நீளம் பெருகப் பெருக அது கிழிக்கும் மனிதர்களின் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டே போகிறது. இரு வாய்ப்புகள் மட்டுமே இப்போதைக்கு பாலஸ்தீனர்களுக்கு இருக்கின்றன. உள்ளிருந்து இஸ்ரேலியர்களின் கையில் வதைபட்டுச் சாவது அல்லது தப்பியோடி முகாம்களில் வசிப்பது. ஜோர்டான், லெபனான், காசா முனை, மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளில் உள்ள முகாம்களில் பாலஸ்தீன அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர். ஐ.நாவின் பார்வையில் மொத்தம் 1.5 மில்லியனுக்கும் அதிகமான பாலஸ்தீன அகதிகள் 58 அதிகாரபூர்வமான அகதி முகாம்களில் வாழ்ந்துவருகிறார்கள். அரசு ஆதரவுடன் இஸ்ரேலியக் குடிமக்கள் அவர்களுடைய இருப்பிடத்தை ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டனர். எனவே, திரும்பிப் போவதென்னும் பேச்சுக்கே இடமில்லை. வீட்டை மட்டுமா அல்லது நாட்டையும் சேர்த்தே இழந்துவிட்டோமா என்னும் அச்சமும் இருக்கிறது அவர்களிடம்.

அகதிகள் மேலும் பெருகக்கூடாது என்பதால்தான் பசீம் போராட வந்தார். அதே காரணத்துக்காக ஜவஹெரும் இப்போது வீதியில் இறங்கினார். அபு ரஹ்மா குடும்பத்திலிருந்து இன்னொரு போராளியா, அதுவும் பெண்ணா என்று வியந்து அந்தக் கிராமம் அவரை உற்சாகத்துடன் வரவேற்றது. பசீம் சென்ற பாதையிலேயே ஜவஹெரும் சென்றார். பசீமைப் போலவே அவரும் முழக்கமிட ஆரம்பித்திருந்தார். போராட்டக்காரர்களுடன் சேர்ந்து பதாகையைப் பிடித்துக்கொண்டு நடைபோடவும் அவர் கற்றிருந்தார். 'திரும்பிப்போ' என்று கத்தும் இஸ்ரேலிய வீரனைப் பார்த்து 'நீ போ முதலில்!' என்று திருப்பிக் கத்தும் திராணியும் துணிவும் அவருக்கு வந்திருந்தன. அதனால்தானோ என்னவோ பசீமைத் தாக்கிய அதே குண்டு அவரையும் வீழ்த்திப்போட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது என்றாலும் பிழைக்க முடியவில்லை.

இப்போது அஷ்ரஃப் அபு ரஹ்மாவின் முறை. தன் சகோதரியும் சகோதரனும் கொல்லப்பட்டுவிட்ட பிறகும் அஷ்ரஃபால் சுவர் குறித்தும் அது உருவாக்கும் அகதிகள் குறித்தும் தெளிவான பார்வையுடன் உரையாட முடிகிறது. கணக்கற்ற போராளிகளை உற்பத்தி செய்தபடியிருக்கும் அபு ரஹ்மா குடும்பத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு அவரை நேரில் கண்டு உரையாடிய பத்திரிகையாளர், அஷ்ரஃபின் வீட்டுச் சுவரில் சே குவேராவின் படங்கள் ஒட்டப்பட்டிருந்ததைக் கண்டார். அஷ்ரஃப் இப்போது அந்தப் பகுதியின் புகழ்மிக்க இளம் போராளியாக மாறிப் போயிருந்தார். அவரிடமும் வீடியோப் பதிவுகள் இருக்கின்றன. 'இஸ்ரேலிய வீரர்களிடமிருந்து நான் தப்பியோடி வரும் காட்சிகள் இதில் இருக்கின்றன. எங்கள் வீடுகளை இடிக்கும் இஸ்ரேலிய புல்டோசரின் மேலே ஏறி அதில் தேசியக்கொடியை ஏற்றிய காட்சியும் இருக்கிறது, பார்க்கிறீர்களா' என்று புன்னகையுடன் கேட்கிறார் அவர். அந்த உருளைக்கிழங்குக் குண்டு இப்போது அவரிடம்தான் இருக்கிறது.

**சொந்தங்கள் வருவார்கள்...**



"செயின் பறிப்பு அதிகம் நடக்கிற இடமா பார்த்து, வீடு வாடகைக்குக் கேட்கிறீங்களே ஏன்?"

"அப்பதானே, என் பொண்டாட்டி நகை வாங்கித்தரச் சொல்லி தொல்லை பண்ண மாட்டா!"




"போர் எப்படி முடிவுக்கு வந்தது?"

"ஒரே நேரத்துல ரெண்டு மன்னர்களுமே பயந்து ஓடிட்டாங்களாம்!"



"டியர்... டைனிங் டேபிள்ல உட்கார்ந்து சாப்பிடாம ஏன் நின்னுட்டே சாப்பிடுறீங்க?"

"மாமியார் வீட்ல உட்கார்ந்து சாப்பிடுறான்'னு அவப்பெயர் வந்துடக் கூடாதுல!"




அவுஸ்திரேலியாவில் பணிபுரிகிறார் சத்யா (சிபிராஜ்). நீண்ட நாட்களுக்குப் பிறகு அவரது முன்னாள் காதலியான ரம்யா நம்பீசனிடம் இருந்து உதவி கேட்டு போன் வருகிறது. சென்னை திரும்புகிறார் சிபிராஜ். ரம்யாவின் குழந்தை காணாமல் போய் 2 மாதமாகியிருக்கிறது. சிபி ஊருக்கு வந்து விசாரித்ததில் காவல் துறை, ப்ளே ஸ்கூல் தொடங்கி, ரம்யாவின் கணவர் வரை அப்படி ஒரு குழந்தையே இல்லை எனவும், ரம்யா கற்பனையில் பேசுவதாகவும் சொல்கிறார்கள். ஒருகட்டத்தில் ரம்யாவும் தற்கொலை செய்துகொள்கிறார். அந்தப் புதிர்களுக்குள் ஒளிந்துள்ள சிக்கலான முடிச்சுகளை சிபிராஜ் எப்படி அவிழ்க்கிறார் என்பதுதான் 'சத்யா' படத்தின் கதை.

தெலுங்கில் வந்து வெற்றிபெற்ற 'ஷணம்' படத்தின் ரீமேக் இது. அந்தப் படத்தைப் பிசிறு தட்டாமல் அழகாகப் படமாக்கியுள்ளனர். படம் தொடங்கியது முதலே விறுவிறுப்பும் த்ரில்லிங்கும் படம் பார்ப்பவர்களை ஆக்கிரமிக்கின்றன. அதை கடைசிவரை அப்படியே கொண்டு சென்றிருக்கிறார் இயக்குநர் பிரதீப் கிருஷ்ணமூர்த்தி.

காணாமல்போனதாக சொல்லப்படும் குழந்தை உண்மையில் இருந்ததா, இல்லையா? என்பதுதான் படத்தின் பிரதான புதிர். அப்படி ஒரு குழந்தை இருந்ததைக் கண்டுபிடித்தால்தான் அதை யார், எதற்காக கடத்தியிருப்பார்கள் என்ற விடையை கண்டுபிடிக்க முடியும். குழப்பம் ஏற்படுத்தக்கூடிய இதுபோன்ற படங்களில், திரைக்கதையில் கொஞ்சம் சொதப்பினாலும் குழப்பங்கள் தொற்றிநிற்கும். ஆனால், அதற்கு இடம் தராமல் திரைக்கதையும், காட்சிப்படுத்துதலும் கச்சிதம்.

'வளையோசை கலகல' என பழைய 'சத்யா' படப் பாடல் வானொலியில் கேட்பதுபோல எதேச்சையாகக் காட்டுவதில் தொடங்கி குட்டிக் குட்டி காட்சிகளில்கூட இயக்குநர் கவனம் காட்டியிருக்கிறார். படத்தில் அடுத்தடுத்து வரும் சில திருப்பங்களும் திரைக்கதைக்கு நியாயம் சேர்க்கும் வகையில் புகுத்தப்பட்டதாகவே தெரிகிறது. ஆனால், குழந்தை யாரிடம் இருந்தது, எதற்காக இருந்தது, அது எப்படி பிறந்தது என பல இடங்களில் எந்த லாஜிக்குமே இல்லை. ஆனாலும், வேகமான திரைக்கதை காட்சிகள் இவற்றை நேர் செய்கின்றன. சிபிராஜுக்கு இந்தப் படம் நிச்சயம் பெயர் பெற்றுத் தரும். தோற்றத்திலும் ரொம்ப மாறியிருக்கிறார். கதைக்கேற்ப நடை, உடை, பாவனையிலும் நிறைவான நடிப்பை வழங்குகிறார். நாயகியாக வரும் ரம்யா நம்பீசன் காதல் காட்சிகளில் கலகலப்பான பேர்வழியாகவும், குழந்தையைக் கண்டுபிடிக்க முடியாமல் ஆற்றாமையால் திரியும் அபலைப் பெண்ணாகவும் பாத்திரம் உணர்ந்து நடிக்கிறார்.

பொலிஸ் அதிகாரியாக சற்று நேரமே வந்தாலும், கடைசியில் வில்லியாக அவதாரம் எடுக்கிறார் வரலட்சுமி சரத்குமார். நல்ல பொலிஸாக வரும் ஆனந்தராஜ் அவ்வப்போது சிரிக்கவும் வைக்கிறார். விசாரணைக்குச் செல்லும் இடமெல்லாம் செல்ஃபி எடுத்துக் கொள்வது நச்!

கார்த்திக் கிருஷ்ணாவின் பஞ்ச், குசும்பு வசனங்கள் சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கின்றன. "மனசு சொல்றத கேட்கவா? மூளை சொல்றத கேட்கவா?" என சிபிராஜ் கேட்க, "மனசு சொல்றத கேளு சார். மனசு என்னிக்கும் துரோகம் செய்யாது" என சதீஷ் சொல்வது, "தப்புன்னு தெரிஞ்சா என்னை நானே மன்னிக்க மாட்டேன்" என ஆனந்தராஜ் கூறுவது, சிபிராஜை பிரியும்போது, "உன்னை வேணும்னு சொல்லுற தைரியம் இல்ல, வேண்டாம்னு சொல்லுற சக்தியும் இல்ல" என்று ரம்யா கூறுவது ஆகிய இடங்களில் வசனங்கள் வசீகரிக்கின்றன. த்ரில்லிங் படத்துக்கு ஏற்ப பின்னணி இசையை வழங்கியிருக்கிறார் சைமன் கே.சிங். 'யவ்வனா', 'சாங்கு' பாடல்கள் கேட்கும்படி உள்ளன. அரண்மனை பழனியின் ஒளிப்பதிவு பளிச்சென இருக்கிறது. கவுதம் ரவிச்சந்திரனின் படத்தொகுப்பு படத்துக்கு பலம் சேர்க்கிறது.

இயக்குநரிடம் ஒரே ஒரு கேள்வி.. 'தமிழ் கலாச்சாரத்தையே உடைத்துதான் த்ரில்லிங் கொடுக்க வேண்டுமா?" மற்றபடி, வேகத்தடை இல்லாத விறுவிறுப்பான, துள்ளியோடுகிற திரைக்கதையால், பல இடங்களில் ரசிகர்களை சீட் நுனிக்கு கொண்டு வரும் 'சத்யா' சீறிப்பாயும் த்ரில்லர் குதிரை!



மன்னர் வகையறா


சக்க போடு போடு ராஜா



ஷூட்டிங் ஸ்பொட்

### ஆட்டத்தால் ஆரம்பித்த காதல்

சன் மியூசிக் தொகுப்பாளினிகளில் ஒருவர் மணிமேகலை. இவருக்கென்றே தனி ரசிகர் பட்டாளம் உண்டு. பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி காதலரான ஹூசைனை கடந்த வாரம் பதிவு திருமணம் செய்தார். லாரன்சின் "மொட்ட சிவா கெட்ட சிவா" படத்தில் அவருடன் ஆடிய ஒருவர் நன்றாக ஆடுகிறார் என அவரது போன் நம்பரை தேடிப்பிடித்து மணிமேகலை வாழ்த்தியுள்ளார். ஹூசைன் பின்னர் காதலில் விழுந்துள்ளனர். மணமேகலையின் வீட்டில் காதலுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அவருக்கு வீட்டில் பெண் பார்க்க ஆரம்பிக்க, வீட்டைவிட்டு வெளியேறி காதலரை கரம்பிடித்திருக்கிறார்.

### காமெடி கில்லாடிகள்

ஜீ சனல் அண்மைக்காலமாக பிரமாண்ட ரியாலிட்டி ஷோக்களை நடத்தி வருகிறது. மிஸ்டர் அன்ட் மிஸஸ் கில்லாடிகள், ஜூனியர் சூப்பர் ஸ்டார், டான்ஸ் ஜோடி டான்ஸ், சரிகமபா நிகழ்ச்சிகளை தொடர்ந்து, காமெடி கில்லாடிகள் என்ற நிகழ்ச்சியை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான போட்டியாளர் தேர்வு நடந்து வருகிறது. முப்பது போட்டியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். தமக்கான ஸ்கிரிப்டை இவர்களே தயார் செய்து கொள்ள வேண்டுமாம்.

### தெய்மகள் சினிமாவிற்கு வராதாம்!

தெய்வமகள் சீரியல் நாயகி வாணி போஜனிற்கு நிறைய ரசிகைகள் உள்ளனர். அவரது ஆடைக்கே தனி ரசிகை பட்டாளம் உள்ளது. சீரியல்நடிகைகள் பலரும் சினிமாவிற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். வாணிக்கு அப்படியொரு எண்ணம் உடனடியாக இல்லையாம். 'சீரியல் வாய்ப்புக்கள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதால், சினிமாவை பற்றி யோசிக்கவில்லை. நேரம் வரும்போது பார்க்கலாம்' என கூறியிருக்கிறார்.

### காதலரை கண்டு கதறியழுத பிக்பாஸ் நடிகை

பிக்பாஸ் நிகழ்ச்சி தமிழுக்குதான் புதிது. இந்தியில் 11வது சீசன் நடக்கிறது. கென்செப்ட் ஒன்றுதான். பிக்பாஸ் வீட்டிலுள்ள போட்டியாளர்களை வெளியிலுள்ள உறவினர்கள் பார்ப்பதற்கு ஒருமுறை அனுமதிக்கப்படுகிறது. சல்மான்கான் தொகுத்து வழங்கும் இந்த சீசனில் ஹினா கான் என்ற நடிகையும் போட்டியில் இருக்கிறார். கடந்த வாரம் இவரது காதலர், பிக்பாஸ் வீட்டிற்கு வந்தார். சிறிதுநேரம் இருந்துவிட்ட காதலர் வெளியேற, "என்னையும் கூட்டிச்செல்" என ஹினா கான் கதறியழுதுள்ளார். இந்தியில் அந்த வீடியோதான் இப்போது வைரலாக சுற்றி வருகிறது.



சின்னத்திரை

# வண்ணத் திரை



## ஐயிற்றம் நடிகையிடம் முத்தம் கேட்ட வாலிபர்

சிம்பு, நயன்தரா நடித்த 'இது நம்ம ஆளு' படத்தில் 'மாமன் வெயிட்டிங்' என்ற ஐயிற்றம் பாடலுக்கு ஆட்டம் போட்டவர் அதா ஷர்மா. அண்மையில் மும்பையிலுள்ள ஷொப்பிங் மால் ஒன்றிற்கு சென்றார். அவரை ரசிகர்கள் சூழ்ந்து கொண்டு செல்பி எடுத்தனர். அப்போது 30 வயது மதிக்கத்தக்க ஒருவர் "உன்னை என் மகளாக கருதுகிறேன். ஒரு முத்தம் தா" என கன்னத்தை நீட்டியிருக்கிறார். ஒரு மாதிரி அவரிடமிருந்து அதா ஷர்மா தப்பித்து வந்துவிட்டார். இதுபற்றி ருவிற்றரில் குமுறியிருக்கிறார். 'என் எச்சிலை யாருடைய கன்னத்தில் பதிப்பதென்பதை நான்தான் தீர்மானிக்க வேண்டும். படங்களில் நான் அங்கங்களை காட்டலாம். அதற்காக பலருடன் நான் படுக்கையை பகிர்பவள் அல்ல' என குறிப்பிட்டுள்ளார்.

## விசுவாசத்தின் முதல் அடி

அஜித்தின் 58வது படம் விசுவாசம். கடந்த சில படங்களில் சோல்ட் அண்ட் பெப் ஸ்டைலில் நடித்து வந்த அஜித், இதில் இளமையான தோற்றத்தில் நடிக்கிறாராம். விசுவாசத்திற்கான முதல் அடியை வைத்துள்ளார் இயக்குனர் சிவா. படத்திற்கான அலுவலக பூஜை அண்மையில் நடந்தது. வீரம் படத்தில் அஜித்தின் நான்கு தம்பிகளில் ஒருவராக நடித்த பாலா, இந்தப்படத்திலும் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறாராம்.

## லைக்கா வழக்கு

ரஜினிஅக்சய்குமார் நடித்து தமிழ், இந்தி, தெலுங்கில் தயாராகிவருகிறது 2.0. லைக்கா நிறுவனத்தின் தயாரிப்பில் ஷங்கர் இயக்குகிறார். படத்தின் இறுதிக்கட்ட பணிகள் பல மாதங்களாக நடந்துவரும் நிலையில், 2018 ஜனவரியில் படம் திரைக்கு வருமென கூறப்பட்டது. ஆனால் கிராபிக்ஸ் பணிகள் முடியாததால் அடுத்த வருடம் ஏப்ரலிற்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. படத்தின் கிராபிக்ஸ் வேலைகளிற்காக மட்டும் 100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாம். படம் தாமதமாவதற்கு, கிராபிக்ஸ் வேலைகளை செய்யும் விஎப்எக்ஸ் நிறுவனம்தானாம். இதனால் கடுப்பான லைக்கா நிறுவனம், விஎப்எக்ஸ் நிறுவனம் மீது வழக்கு தொடர உத்தேசித்துள்ளதாம்.

## 'சத்யா' வில்லனின் கதை

சமீபத்தில் வெளியானது சத்யா படம். இதில் வில்லனாக நடித்த சித்தார்த்த சங்கரின் நடிப்பிற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மலேசியாவில் பிறந்து வளர்ந்த இவர், டாக்டருக்கு படித்துக் கொண்டிருந்தவர். நடிப்பின் மீது கொண்ட ஆசையால் படிப்பை பாதியிலேயே விட்டுவிட்டு வந்திருக்கிறார். இவர் போகும் ஜிம்முக்கு விஜய் ஆன்டனியும் வருவாராம். அவரிடம் வாய்ப்பு கேட்க, சைத்தான் படத்தில் நடிக்க வைத்தார். இதையடுத்து ஜங்கரன் படத்தின் வில்லன் வேடம் கிடைத்தது. அதில் நடித்துக்கொண்டே, சத்யா வாய்ப்பையும் பெற்றுள்ளார். இப்போது மேலும் இரண்டு படங்களிற்கு வில்லனாக ஒப்பந்தமாகியுள்ளார். சத்யா படத்தில் ரம்யா நபீசனின் கணவனாக நடித்துள்ளார். ஆரம்பத்தில் ரம்யாவுடன் நெருக்கமாக நடிக்க தயங்கியிருக்கிறார். ஆனால், ரம்யாதான் தயக்கத்தை போக்கி, கட்டிப்பிடிக்கும் காட்சிகளையும் சிக்கலில்லாமல் ஷூட் செய்ய வைத்தாராம்.

## விஜய் படத்தை மறுத்த ஓவியா

பிக்பாஸ் மூலம் பிரபலமானவர் ஓவியா. இதையடுத்து படவாய்ப்புக்களும், விளம்பர வாய்ப்புக்களும் அவரைத் தேடி வந்தன. இவற்றில் நடிக்க அதிக சம்பளம் கேட்டதாக கூறப்படுகிறது. காஞ்சனா 3 தவிர வேறு எந்தப்படத்திலும் அவர் நடிப்பதாக தெரியவில்லை. ஏ.ஆர்.முருகதாஸின் இயக்கத்தில் விஜயின் 62வது படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்க ஓவியாவை அணுகியுள்ளனர். இதில் நாயகி ரகுல் பிரீத் சிங். நாயகி வேடம் இல்லையென்றதும் ஓவியா மறுத்துவிட்டார்.

## சிம்புக்கு இப்படியான பெண்தான் வேண்டுமாம்!

வல்லவன் படத்தில் நடித்தபோது நயன்தாராவை காதலித்தார் சிம்பு. சில மாதங்களில் அது முறிந்தது. பின்னர் ஹன்சிகா. அதுவும் முறிந்தது. சிம்புவிற்கு பெண் பார்க்கும் படலத்தில் பெற்றோர் ஈடுபட்டுள்ளதாக நீண்டகாலமாக செய்தி வந்துகொண்டிருக்கிறது. அண்மையில் சக்கை போடு போடு ராஜா படத்தின் பாடல் வெளியீடு நடந்தது. இதில் சிம்புதனுஷ் கலந்து கொண்டனர். இதில் சிம்பு பேசும்போது, தனக்கு எந்த மாதிரியான பெண் தேவையென்பதை குறிப்பிட்டார். 'அவ்வளவு எளிதில் எனக்கு யாரும் செட் ஆக மாட்டார்கள். ஆனால் யுவன் சங்கர் ராஜா செட்டாவார். அவரது கேரக்டர் எனக்கு ரொம்ப பிடிக்கும். நான் செய்யும்தொந்தரவுகளை பொறுத்துக்கொள்வார். அவர் மாதிரி குணம் கொண்ட பெண்தான் எனக்கு செட்டாகும். உங்கள் ராசியில் யாராவது பெண்ணிருந்தால் சொல்லுங்க, கல்யாணம் பண்ணலாம் என சொல்லியுள்ளேன்' என்றார்.

## பாம்பு படத்தில் மூன்று நாயகிகள்

நீண்டகாலத்தின் பின்னர் தமிழில் பாம்பு கதை படம் உருவாகிறது. இதில் நாயகன் ஜெய். நீயா பாணியில் உருவாகும் இந்த படத்தை சுரேஷ் இயக்குகிறார். விமல் நடித்த எத்தன் படத்தை இயக்கியவர் இவர். ஐடி கம்பனியில் வேலை செய்பவராக ஜெய் நடிக்கிறார். இவருக்கு மூன்று ஜோடிகள். வரலட்சுமி, கேத்தரின் தெரசா, ராய் லட்சுமி நாயகிகளாக ஒப்பந்மாகியுள்ளனர். ஜனவரியில் ஷூட்டிங் ஆரம்பிக்கிறது.

## ஆபாச நடிகை தற்கொலை செய்ததற்கு அதிர்ச்சி காரணம்!

நம்மூரை போல அல்ல மேற்குநாடுகள். அங்கு ஆபாச நடிகைகளிற்கும் நல்ல மவுசு. இந்தியாவில் சன்னி லியோன் போகும் இடங்களில் கூடும் கூட்டங்களே இதற்கு சாட்சி. கனடாவில் சன்னி லியோனிற்கு பின்னர் பிரபலமான ஆபாச நடிகை ஒகஸ்ட் ஏம்ஸ். 23 வயதான இவரது நிஜப்பெயர் மெர்சிடெஸ் கிரபோவ்ஸ்கி. கணவர் பெயர் மூர். அண்மையில் தனது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்பதற்கு முதல்நாள் வரை ரசிகர்களுடன் சமூக வலைத்தளத்தின் மூலம் பேசிக்கொண்டிருந்திருக்கிறார். ஹோமோசெக்ஸ் பழக்கமுள்ள ஆண்களுடன் உறவுவைத்துகொள்ள பயந்தே அவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது.

## நானும் அழகிதானே?

'நானும் அழகாக தானே இருக்கிறேன், எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது' என புலம்புகிறார் பிரணிதா. சகுனி, 'ஜெமினிகணேசனும் சுருளி ராஜனும் உள்ளிட்ட படங்களில் நடித்த அழகான ராட்சசி. இப்போது தெலுங்கிலும் இடையிடையேதான் தலைகாட்டுகிறார். ஆனால் கன்னட திரையுலகில் இருந்துதான் தொடர்ந்து வாய்ப்புக்கள் வருகின்றன. தமிழ், தெலுங்கு திரையுலகம் தன்மீது ஓரவஞ்சனை காட்டுவதாக நினைக்கிறார். மாஸ் லீடர் என்ற கன்னட படத்திலும், ஒரு மலையாள படத்திலும் மட்டுமே நடிக்கிறார். தமிழில் சுத்தமாக வாய்ப்பில்லை. 'எனக்காக காலம் வராமலா போய்விடும்' என நம்பிக்கையுடன் காத்திருக்கிறாராம்.

ஸ்ரீதர் சுவாமிநாதன்



எம்.ஜி.ஆர் 100 நெடுந்தொடர் 86

# அப்படியேதான் இருந்தார் எம்.ஜி.ஆர்.!

**எம்.ஜி.ஆர்.** ரசிகர்களில் நடிகர்களும் பலர் உண்டு. அப்படிப்பட்ட ரசிகரான ஒரு நடிகர் காமெடி வேடங்களில் கலக்கியவர். பொதுவாக நகைச்சுவை நடிகர் என்றாலே அவர்கள் தோற்றமே சிரிப்பை வரவழைக்கும். ஆனால், நகைச்சுவை நடிகர்களிலேயே அழகான தோற்றம் கொண்டவர் அவர். சில படங்களில் கதாநாயகனாகவும் நடித்த அந்த நடிகர் தேங்காய் சீனிவாசன்!

எம்.ஜி.ஆர் மீது தீவிரமான அன்பு கொண்டவர் தேங்காய் சீனிவாசன். வெறிபிடித்த ரசிகர் என்றுகூட சொல்லலாம். 'கல் மனம்' என்ற நாடகத்தில் தேங்காய் வியாபாரியாக நடித்ததால் சீனிவாசன் என்ற இவரது பெயருக்கு முன்னால் 'தேங்காய்' சேர்ந்து கொண்டது. அதிமுகவை எம்.ஜி.ஆர் தொடங்கிய பின், கட்சியிலும் சேர்ந்தார். எம்.ஜி.ஆருக்கும் தேங்காய் சீனிவாசன் மீது மிகுந்த அன்பு.

மனதில் எந்த களங்கமும் இல்லாமல் எல்லோரிடமும் வேடிக்கையும் விளையாட்டுமாக பழகு பவர் தேங்காய் சீனிவாசன். அவரது விளையாட்டு குணம் எம்.ஜி.ஆருக்கும் தெரியும். அதனால், தவறாக நினைக்க மாட்டார். அதேநேரம், அவரது உடல்நலம் குறித்தும் பொருளாதார நிலை குறித்தும் உரிமையுடன் கோபித்துக் கொள்வார்.

எம்.ஜி.ஆருடன் 'கண்ணன் என் காதலன்', 'நம்நாடு', 'என் அண்ணன்', 'உலகம் சுற்றும் வாலிபன்', 'உரிமைக் குரல்' உட்பட அவரது கடைசிப் படமான 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' வரை பல படங்களில் தேங்காய் சீனிவாசன் நடித்துள்ளார். 'நான் ஏன் பிறந்தேன்' படத்தின் படப்பிடிப்பு சத்யா ஸ்டுடியோவில் நடந்து கொண்டிருந்தது. 'ரிக் ஷாக்காரன்' படத்தை இயக்கிய எம்.கிருஷ்ணன், இந்தப் படத்தையும் இயக்கினார்.


ஒருநாள் படப்பிடிப்பின்போது எம்.ஜி.ஆர் வருகைக்காக குழுவினர் காத்திருந்தனர். அப்போது, இயக்குநர் கிருஷ்ணனிடம் தேங்காய் சீனிவாசன் வேடிக்கையாக, "டைரக்டர் சார், 'ரிக் ஷாக்காரன்' படத்தில் வாத்தியாருக்கு (எம்.ஜி.ஆருக்கு) 'அழகிய தமிழ் மகள் இவள்..' பாடல் வெச்சது மாதிரி இந்த படத்தில் எனக்கும் ஒரு பாட்டு வெச்சுடுங்களேன்' என்றார். சுற்றி இருந்தவர்களுக்கு அதிர்ச்சி. 'என்ன இவர் இப்படி பேசுகிறாரே?' என்று நினைத்தனர்.

படப்பிடிப்புக்கு எம்.ஜி.ஆர் வந்தார். அவர் காதுக்கு தேங்காய் சீனிவாசன் சொன்ன விஷயம் சென்றது. அவரை எம்.ஜி.ஆர் அழைத்தார். வேகமாக ஓடிவந்தார் தேங்காய் சீனிவாசன். அவரிடம், "உன் ஆசைப்படியே இந்தப் படத்தில் உனக்கு ஒரு பாட்டு வைச்சுடலாம்!" என்று எம்.ஜி.ஆர் கூறினார். தேங்காய் சீனிவாசனுக்கு பயம் வந்துவிட்டது. "தலைவரே, நான் சும்மா விளையாட்டுக்கு சொன்னேன்" என்றார். அவரது தோளைத் தட்டி சிரித்தபடியே எம்.ஜி.ஆரும், "அட! நானும் விளையாட்டுக்குத்தாம்பா சொன்னேன்" என்றதும் படப்பிடிப்பு தளமே சிரிப்பொலியால் அதிர்ந்தது.





'பல்லாண்டு வாழ்க' படத்தின் படப்பிடிப்பு கர்நாடக மாநிலம் கலசுபுரா என்ற இடத்தில் நடந்து கொண்டிருந்தபோது தமிழ்ப் புத்தாண்டு தினம் வந்தது. படப்பிடிப்பு குழுவினருக்கு எம்.ஜி.ஆர் பரிசுகள் அளித்ததோடு, தேங்காய் சீனிவாசன் நடித்த 'கலியுகக் கண்ணன்' படத்தை திரையிட ஏற்பாடு செய்து குழுவினரோடு ரசித்துப் பார்த்தார்.



தனக்கு நெருக்கமானவர்கள் தவறான பழக்கங்களுக்கு அடிமையாகி உடலைக் கெடுத்துக் கொள்வதையோ, அநாவசியமாக செலவு செய்வதையோ எம்.ஜி.ஆர் அனுமதிக்க மாட்டார். 'ரிக் ஷாக்காரன்' படத்தில் எம்.ஜி.ஆரால் அறிமுகப்படுத்தப்பட்டவர் நகைச்சுவை நடிகர் ஐசரி வேலன். ஒரு படத்தின் படப்பிடிப்பின்போது அவர் எம்.ஜி.ஆரிடம், "அண்ணே, எனக்கு சம்பளம் இன்னும் கொஞ்சம் கூடுதலாக கொடுக்கச் சொல்லுங்க. குடும்ப செலவை சமாளிக்க முடியலை" என்றார்.

அதற்கு எம்.ஜி.ஆர், "வரும் சம்பளத்தில் குடும்ப செலவை சமாளிக்க முடியலை என்று சொல்லாதே. இந்த வருடத்தில் நீ எத்தனை படங்களில் நடித்தாய்? அதற்கு மொத்தமாக எவ்வளவு சம்பளம் வாங்கினாய்? உன் குடும்பத்துக்கான செலவினங்கள் என்ன?" என்று கேட்டு அறிவுரை கூறினார். எம்.ஜி.ஆர் சொல்வதில் உள்ள நியாயத்தை ஐசரி வேலன் உணர்ந்து கொண்டார். இவரும் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர். பின்னர், அதிமுக எம்.எல்.ஏ.வாகவும் இருந்தார். இணை அமைச்சர் அந்தஸ்துக்கு இணையான 'பார்லிமென்டரி செக்ரட்டரி' பதவியிலும் ஐசரி வேலனை எம்.ஜி.ஆர் நியமித்தார்!

தேங்காய் சீனிவாசன் சொந்தமாக படம் எடுக்க ஆசைப்பட்டு எம்.ஜி.ஆரிடம் ஆலோசித்தார். "சொந்தப் படம் எடுப்பது சாதாரண விஷயம் அல்ல. உனக்கு அதெல்லாம் சரிப்பட்டு வராது. வேண்டாம்" என்று எம்.ஜி.ஆர் தடுத்தார். ஆனால், அதையும் மீறி படத் தயாரிப்பில் தேங்காய் சீனிவாசன் ஈடுபட்டார். அவர் கையில் இருந்த பணம் படப்பிடிப்பு செலவுகளுக்காக கரைந்துவிட்டது. பணமும் புரட்ட முடியவில்லை. மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல், ராமாவரம் தோட்டம் சென்று எம்.ஜி.ஆரை சந்தித்து நிலைமையைச் சொன்னார்.

"நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேனே, கேட்டியா? பட்டால்தான் புத்தி வரும். போஞ் போஞ்" என்று எம்.ஜி.ஆர் கோபமாகப் பேசி அவரை அனுப்பிவிட்டார். இருந்த கடைசி நம்பிக்கையும் தகர்ந்துபோன நிலையில், ஏமாற்றமும் சோகமுமாய் நெடுநேரம் கழித்து இரவில் வீடு திரும்பினார். அங்கே தேங்காய் சீனிவாசனுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. தனது உதவியாளர்கள் மூலம் பெரும் தொகையை அவர் வீட்டுக்கு எம்.ஜி.ஆர் கொடுத்து அனுப்பியிருந்தார். விஷயம் அறிந்து, எம்.ஜி.ஆரிடம் மன்னிப்பு கோரியதுடன், உதவிக்காக கண்களில் நீர்மல்க நன்றியும் தெரிவித்தார் தேங்காய் சீனிவாசன்!

'நினைத்ததை முடிப்பவன்' படத்தில், கிராமத்தில் இருந்து வரும் எம்.ஜி.ஆர், தன்னைப் போலவே உருவ ஒற்றுமை உள்ள மற்றவரைப் போல நடிக்க வேண்டிய நிலை. அடுக்கு மாடி ஒன்றில் இருந்து கீழே பார்க்கும் எம்.ஜி.ஆர், அங்கு சுக்கு காப்பி விற்றுக் கொண்டிருக்கும் தேங்காய் சீனிவாசனை மேலே அழைப்பார். படத்தில் இருவருக்கும் ஏற்கெனவே அறிமுகம். தனக்கு ஆரம் பத்தில் காசே வாங்காமல் சுக்கு காப்பி கொடுத்த தேங்காய் சீனிவாசனுக்கு 500 ரூபாய்க்கு காசோலை கொடுக்குமாறு நடிகை லதாவிடம் சொல்வார் எம்.ஜி.ஆர்! அப்போது அது பெரிய தொகை.

பணம் கிடைத்த மகிழ்ச்சியில் வியாபாரம் செய்யும் சுக்கு காபி வைத்திருக்கும் தூக்கை மறந்துவிட்டு செல்லும் தேங்காய் சீனிவாசனிடம், "பணம் வந்ததும் பழசை மறந்துட்ட பாத்தியா?" என்று எம்.ஜி.ஆர் கேட்பார். தனது தவறை ஒப்புக்கொள்ளும் தேங்காய் சீனிவாசன், எம்.ஜி.ஆரிடம், "நீ கில்லாடி துரை. அடுக்குமாடிக்கு வந்தாலும் பழசை மறக் காம இருக்கியே. இப்படியே இரு துரை" என்று வாழ்த்துவார்.

அப்படியேதான் இருந்தார் எம்.ஜி.ஆர்!

தொடரும்...

மட்டக்களப்பில் அரச அதிகாரிகளின் திட்டமிடலின்மை, மற்றும் நிதி வீண் விரயம் செய்யப்படுதல் போன்ற பல விடயங்களை தீபம் ஏற்கனவே பல முறை வெளிப்படுத்தியிருந்தது. இதன் தொடர்ச்சியாகஇந்தவாரமும்முக்கியமான ஒரு விடயத்தை சுட்டிக்காட்டுகிறோம்.


கடந்த வருடங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதை, மதகு, வடிகால மைப்பு புனரமைப்பில் செல்வாக்கான மறைகரங்கள் செயற்பட்டு, சில தனி நபர்களின் விருப்பு வெறுப்பிற்கமைவாக இந்த பணிகள் நடந்ததாக குற்றச் சாட்டு சுமத்தப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டிலிருந்து தயட்டகிருள வேலைத் திட்டத்திற்காக கீழ் பல மில்லியன் ரூபா மட்டக்களப்பிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

வீதி அபிவிருத்தி பணிகள் திட்டமிடப் படாமல்,விருப்பு வெறுப்பினடிப்படையில் நடந்ததென நாம் மேலோட்டமாக கூறவில்லை. அதற்கான தெளிவான சான்று களையும் முன்வைத்தே குறிப்பட விருக்கிறோம்.

மட்டக்களப்பு மாவட்ட செயலக உயரதிகாரியாக உள்ள ஒருவரின் வீட்டுக்கு செல்லும் வீதி கொங்கிறீட் இடப்பட்டு, மூடிய வாடிகான் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அந்த வீதி, நாம் குறிப்பிட்ட அதிகாரியின் வீட்டுடன் முடிந்து விடுகிறது. அடுத்து நாம் சொல்வதுதான் உங்களிற்கு இன்னும் தலையை சுற்றவைக்கும். 100 மீற்றர் நீளமான வீதி அமைப்பதற்கான மதிப்பீட்டு பணத்தையே 50 மீற்றர் நீளமான அந்த வீதியை அமைக்க பயன்படுத்தியுள் ளனர்!

எல்லா வீதியையும் அபிவிருத்தி செய்கிறார்கள் என்றால், இதெல்லாம் பெரிய விசயமாக இருக்காது. ஏனைய வீதி புனரமைப்பில் புகார்கள் எழும்போதுதான் மிகப்பெரிய விசயமாக மாற்றிவிடுகிறது.

நாம் மேலே குறிப்பிட்ட, அதிகாரியின் வீட்டுக்கு செல்லும் வீதி விசயத்தை மிகப்பெரிய விசயமாக மாற்றுவது, மட்டக்களப்பு மாநகரசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட லகூன் பார்க்கை அண்மித்த கண்ணகி அம்மன் கோவில் வீதியின் 14ம் குறுக்கு வீதி. இந்த வீதியில் தான் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான பிள்ளையானின் வீடும் அமைந்துள்ளது. சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் குடியிருக்கும் இந்த வீதியில், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் இல்லாததா அபிவிருத்தி செய்யப்படாததற்கு காரணம் என கொதிக்கிறார்கள் அந்த பகுதி மக்கள். இந்த வீதி கொங்கிறீட் இடப்பட்டுள்ளபோதும், வடிகாலமைப்பு எதுவும் கிடையாது. மழைகாலத்தில் வீதியில் வெள்ளம் நிரம்பி விடும்.



# மட்டக்களப்பில் நடப்பது திட்டமிடாத அபிவிருத்தியா?

இந்த குடியிருப்புக்கள் அமைந்துள்ள பகுதி சதுப்பு நில தன்மையுடைய பிரதேசம். சதுப்பு நிலத்தின் வளரும் புல் வகைகள் அதிகமாக வளர்ந்திருக்கும். பதினைந்து வருடங்களின் முன்னர் இந்தக்காணிகளை வசதிபடைத்தவர்கள் கொள்வனவு செய்தனர். மண் நிரப்பி, காணிகளை உயரமாக்கி சதுப்பு நிலத்தோற்றத்தை மாற்றினார்கள். பின்னர் படிப்படியாக அங்கு கட்டிடங்கள் உருவாகின. அங்கு கட்டிடங்கள் அமைக்க அனுமதியளித்த மாநகரசபையினர், அந்த பகுதியின் உட்கட்டமைப்பு வசதிகளில் ஏன் கவனம் செலுத்தவில்லை?

சதுப்புநிலப்பகுதியை நிரப்பி மேட்டு நிலமாக்கும்போது, அல்லது அதை அனுமதிக்கும்போது, வடிகாலமைப்பு ஏற்பாடுகளை திட்டமிடுவது அதிகாரி களின் கடமையல்லா?

உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கு வதில் முறையான திட்டமிடலின்றி செயற்படுத்துவது, இந்த திட்டங்களின் ஆயுட்காலம் குறித்த சந்தேகங்களையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. சமூக வலைத்தள பயன்பாடு அதிகரித்ததையடுத்து, உட்கட்டமைப்பு திட்டங்களின் சில குறைபாடுகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. ஐந்து வருடங்களிற்குள்ளேயே சேதமான பல திட்டங்களும் நடைமுறைப்படுத்தப் பட்டதே மக்களின் சந்தேகம் அதிகரிக்க காரணம்.

அண்மையில் 2000 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் உள்ள வீதிகளை காபெற் வீதிகளாக மாற்றப்பட்டன. அதாவது முன்னர் தயட்டகிருள திட்டத்தில் கொங்கிறீட் இடப்பட்ட பலவீதிகளும்,இந்த திட்டத்தில் காபெற்றாக மாற்றப்பட்டன. தயட்ட கிருள திட்டத்தில் இடம்பெற்ற சில முறையற்ற நடவடிக்கைகளை இது மூடி மறைத்துள்ளதென்ற விமர்சனமும் மக்களிடம் உள்ளது.

புதிய கல்முனை வீதி, குளாவடி வீதி, சின்ன உப்போடை வீதி, மாமாங்கப்பிள் ளையார் குறுக்கு வீதிகள், புகையிரத நிலைய வீதி உள்ளிட்ட பல வீதிகள் முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு, பின்னர் காபெற் வீதிகளாக்கப்பட்டுள்ளன.

பிள்ளையாரடி பிரதேசத்தில் உள்ள வெள்ளாங்குள வீதி, நல்லையா வீதி, மாமாங்கம், குமாரபுரம், புன்னச்சோலை கிராமங்கள் உள்ளடங்கிய வீதிகள் பல அபிவிருத்தி செய்யப்படாமலேயே உள்ளன.

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக் குள் உள்ள பல கிராம வீதிகள், கிறவல் வீதிகளாக கூட இன்னும் மாற்றமடையாத நிலையில், ஒரே வீதியை கொங்கிறீட் டாக்கி, பின்னர் காபெற்றாக்குவது எப்படியான திட்டமிடல்? மாவட்டத்தின் பல வீதிகள் கிறவல்வீதியாக கூட மாறாமலிருக்கும் நிலையில், ஒரு வீதியை கொங்கிறீட்டாக்கி, பின்னர் காப்பெற் ஆக்குகிறார்கள் என்றால், திட்டமிடலிலுள்ள குறைபாடல்லாமல் வேறென்ன காரணம்?

மட்டக்களப்பு அபிவிருத்தியென்பது நகரை மையப்படுத்தியதாக இருக்கிறதே தவிர, அபிவிருத்தி கிராமங்களை நோக்கி பகிரப்படாமலிருப்பது ஏன்?



"அரசியல்வாதியைக் காதலித்தது தப்பாப்போச்சு!"

"ஏண்டி?"

"உன்னோட காதலிக்கும் அணுகுமுறை சரியில்லை'னு சொல்லி வெளிநடப்பு பண்ணிட்டான்!"



"என்னய்யா உங்க வீட்டுல கரப்பான் பூச்சி ராட்சச சைஸ்ல இருக்கு?"

"நான்தான் சொன்னேனே... எங்க வீட்டுல எல்லாத்துக்கும் கொழுப்பு ஜாஸ்தின்னு!"



"எங்களுக்கு பெண்ணைப் புடிச்சுப்போச்சு..."

"அப்ப வாங்க, எல்லாரும் சேர்ந்து ஒரு வாட்ஸ்அப் குரூப் ஆரம்பிப்போம்!"

# சிந்தனையால் சிதறும் எண்ணம்!




சிலருக்கு பேச்சு குளறுபடி இருக்கும். சொல்ல வந்ததை மறந்துவிட்டு, வேறு விசயங்களை பேசுவார்கள். வார்த்தையில் கோர்வை இருக்காது.

பேசிக்கொண்டிருக்கும்போதே, சொல்ல வந்ததை மறந்து வேறு விஷயத்துக்குள் மனம் சென்றுவிடும். அதனால், சம்பந்தமே இல்லாமல் வேறு ஒரு விஷயம் பற்றி பேசிக்கொண்டிருப்போம். அதேபோல், அவசியம் இந்த நான்கைந்து விஷயங்கள் பற்றி பேசிவிட வேண்டும் என்று மனதில் அடுக்கிக்கொண்டு வருவார்கள். அதில் ஒன்றை மட்டும் மறந்துவிடுவார்கள். பேச்சு சுவாரஸ்யத்தில், புதிய விஷயங்கள் மனதுக்குள் செல்லும்போது, மனதுக்குள் ஏற்கனவே இருந்த விஷயம் மறந்துவிடுகிறது. இது எல்லோருக்கும் நடக்கும் இயல்பான விஷயம்தான். ஆனால், சின்னச்சின்ன உரையாடல்களிலும் கூட இது தொடர்ந்தால், மறதி நோயின் அறிகுறியாகக்கூட இருக்கலாம். நினைவாற்றலை அதிகரிப்பது என்பது ஒரு கலை. நினைவாற்றலை அதிகரிக்க, மூளை எப்படி நினைவுகளைப் பதிவு செய்கிறது, ஒழுங்குபடுத்துகிறது என்பதைத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம்.

சூப்பர் கம்ப்யூட்டரைவிட அதிகத் திறன்கொண்டது மனித மூளை. கம்ப்யூட்டரின் சி.பி.யு போலதான் நம் மூளையும். நாம் பதிவேற்றம் செய்யும் தகவல் கணினியின் சி.பி.யு வில் சேமித்து வைக்கப்படுகிறது. நமக்குத் தேவைப்படும்போது, அந்தத் தகவலை கம்ப்யூட்டர் எடுத்துத்தருகிறது. இது போலத்தான், தினமும் மூளைக்குள் ஏராளமான தகவல்கள் செல்கின்றன. அன்றாடம் நாம் பார்க்கும், கேட்கும் அனைத்து விஷயங்களும் மூளைக்குச் செல்கின்றன. அதில், முக்கியமானதை மட்டும் மூளை சேமித்து வைத்துக்கொள்ளும். லட்சக்கணக்கான தகவல்கள் வந்தாலும் அதில் தேவையானதை மட்டுமே மூளை சேமித்து வைத்துக்கொள்ளும்.

### மூளையில் தகவல் பதித்தல் (Grammar)

மூளையின் நினைவாற்றலை, செயல்பாட்டு நினைவுத்திறன் (Working memory), தற்காலிக நினைவுத்திறன் (Short term memory), நீண்ட கால நினைவுத்திறன் (Long term memory) என வகைப்படுத்துகிறோம். எந்த ஒரு விஷயமும் முதலில் மூளையின் செயல்பாட்டு நினைவுத்திறன் பகுதிக்குத்தான் செல்லும். ஒரு போன் நம்பரை படித்ததும், அது செயல்பாட்டு நினைவுத்திறன் பகுதிக்குச் செல்லும். சில நிமிடங்கள் வரை மட்டுமே அது நினைவில் இருக்கும். பிறகு, அது நினைவில் இருந்து அகன்றுவிடும்.

கார், பைக், வீட்டு சாவி, ரிமோட் என அன்றாடம் நாம் பயன்படுத்தும் பொருளை எங்கு வைத்தோம் என நினைவில் வைக்க உதவுவது தற்காலிக நினைவுத்திறன். இந்த நினைவுத்திறன் ஒரு சில நாட்கள் வரைகூட நினைவில் இருக்கும். நேற்று காலை என்ன டிபன் என்று கேட்டால், உடனே நினைவுக்கு வரும். அதற்கு, இதுதான் உதவுகிறது. இதுவே, கடந்த வாரம் என்று கேட்டால் நினைவுக்கு வராது.

மூன்றாவது, நீண்ட கால நினைவுத்திறன். நாம் பிறந்த ஊர், படித்த பள்ளியின் பெயர், ஆசிரியர் பெயர் மற்றும் அவரது முகம், சின்ன வயதில் பழக்கமானவர்கள், எனப் பலவற்றை நினைவுக்குக் கொண்டுவர உதவுகிறது. இந்த தகவல்கள் எல்லாம் அன்றாட வாழ்வுக்குத் தேவை இல்லை என்றாலும், மூளையில் எங்கோ ஒரு இடத்தில் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கும். தொடர்ந்து, அந்தத் தகவல் பற்றிய நினைவே இல்லாமல் இருக்கும்போது, காலப்போக்கில் அதுவும் கொஞ்சம் கொஞ்சமாக மறந்துவிடும். நாம் செய்யும் செயல்கள் அனைத்தும், மூளையில் சென்று பதிவாக வேண்டும். பல சிந்தனைகளுக்கு நடுவில் அந்தத் தகவலைப் பதிவுசெய்தோம் என்றால், தற்காலிக மற்றும் நீண்ட கால நினைவுகளில் பதியாது. அந்த விஷயத்தைத் திரும்பவும் நினைவுகூற நினைக்கையில், அது முடியாமல் போய் பாதிப்பை ஏற்படுத்தும்.

எந்த ஒருவிஷயத்தை நினைத்து கவலைப்படும்போதும், அதைப் பற்றியே சிந்தனைகள் ஓடிக்கொண்டு இருக்கும். இதை அசைபோடுதல் (Rumination) என்போம். அதனால் 'இப்ப என்ன நடக்கிறது' என்பதும் மூளையில் ஆழமாகப் பதியாது. யாராவது ஏதாவது கேட்டால் பதில் அளிக்கத் தாமதமாகும்.

### நினைவாற்றலை பாதிப்பவை

*பயம்:* மனநோய் நிலைக்குப் போவதற்கு முன்பு, ஒருசிலர் ஆழ் மன எண்ணங்களுடனே (Pre-ocupied) இருப்பார்கள். அவர்களுக்குத் தன்னை சுற்றி ஏதோ நடப்பது போன்ற உணர்வு மேலோங்கும். எந்த நேரமும் பயந்த நிலையிலேயே இருப்பார்கள். இந்தப் பயத்தினாலும் வார்த்தையில் குளறுபடி, மறதி வரும். நன்றாகப் படித்திருந்தும், சரியாகத் தேர்வு எழுத முடியாமல் போகலாம். மேடையில் பேசத் தயார்நிலையில் சென்றாலும், கூட்டத்தைப் பார்த்தவுடன் பதற்றத்தில் சொல்ல வேண்டியதை மறந்துபோகலாம். இதுவே, தொடர்ந்து அன்றாடம் செய்யும் செயல்களில் பாதிப்பை ஏற்படுத்தினால், மனப்பதற்ற நோயாக இருக்க அதிக வாய்ப்பு உண்டு.

***மறதி:*** சமையலில் திடீர் என்று சுவை மாறுவது, தினமும் செய்யும் செயல்களைக்கூட யோசித்துச் செய்ய வேண்டியது உள்ளது என்றால், இதை எம்.சி.ஐ (Mild cognitive imparement) என்று சொல்வோம். 30 40 வயதிலிருந்தே நிறையப் பேருக்கு இந்தப் பிரச்னை வருகிறது. சின்ன சின்ன விஷயங்கள் மறந்து போயிருக்கும். ஒரு பொருளை எங்கே வைத்தோம் என்று ஒருமுறைக்கு இருமுறை யோசிக்க வேண்டியிருக்கும். சுத்தமாக மறந்தும்போய்விடலாம். செயல் திறன் குறைந்து இருக்கும். யோசித்துச் செய்கிற விஷயங்கள், இத்தனை நாள் செய்ததைவிட, அதிகப்படியாக மூளையைக் கசக்க வேண்டியிருக்கும். இவர்கள் டிமென்ஷியா என்கிற நரம்பு நோய் அளவுக்குப் போயிருக்க மாட்டார்கள். அதே சமயம் பிரச்னையின்றியும் இருக்க மாட்டார்கள். புலன் உணர்வு குறைந்து (Cognitive decline) இருக்கும். .

**தூக்கமின்மை:** நூலகத்தில் படித்த பிறகு, புத்தகங்களை அடுக்குவதுபோல, நம் மூளையும் இரவில்தான் விஷயங்களை பிரித்துப் பார்த்து, ஞாபகங்களை ஒழுங்குபடுத்தும். நிம்மதியான தூக்கம் இல்லாமல் போனால், அறிவாற்றல் (Cognition) மந்தமடையும். மறுநாள், வேலையில் கவனம் செலுத்த முடியாது. ஏதோ ஒரு தடை இருந்து கொண்டே இருக்கும். இருமல், தும்மல், காய்ச்சலினால் தூக்கம் கெட்டாலும் இந்தப் பாதிப்பு இருக்கும். இதெல்லாம் தற்காலிகம்தான். ஓரிரு வாரங்கள் தொடர்ந்து இருந்து, ஏதோ சிந்தனை வசப்பட்டவர்கள் மாதிரியே இருந்தால், உடனடியாகக் கவனித்து அவர்களை நார்மல் நிலைக்குக் கொண்டுவருவதற்கான வழிகளைத் தேட வேண்டும்.

### நினைவுத்திறனுக்கான விளையாட்டு

மூளையின் நினைவுத்திறனை மேம்படுத்த பல்வேறு விளையாட்டுக்கள் உள்ளன. சுடோகு, குறுக்கெழுத்துப் போட்டி போன்றவை இவற்றில் முக்கியமானவை. நினைவுத்திறனை மேம்படுத்தும் சில விளையாட்டுக்கள் இங்கே...

### விளையாட்டு 1

கீழேயுள்ள வண்ணங்களின் பெயர்களை ஒரு தாளில் ஒவ்வொரு வண்ணத்தில் எழுதுங்கள். உதாரணமாக, நீலம் என்பதை பச்சை வண்ணத்தில் எழுதலாம். மூன்றாவது வரியில் ஊதா என்பதையும் பச்சை வர்ணத்தில் எழுதலாம். எழுத பயன்படும் வர்ணம் எத்தனை தடவையென்றாலும் வரலாம். ஆனால் கண்டிப்பாக வர்ணத்தின் பெயரை, அதே

| | | |
|---|---|---|
| நீலம் | சிவப்பு | பச்சை |
| ஆரஞ்சு | பச்சை | கருப்பு |
| மஞ்சள் | ஊதா | நீலம் |
| நீலம் | நீலம் | சிவப்பு |
| ஆரஞ்சு | பச்சை | ஊதா |
| | கருப்பு | பச்சை |

விளையாட்டு 1

தொடர்ச்சி அடுத்தபக்கம்...




8-ம் பக்க தொடர்ச்சி...

பின்னடைவை கொடுக்கும்.

### கிழக்கில் எப்படியிருக்கும் களநிலைமை?

வடக்கு நிலவரத்தை விட இம்முறை கிழக்கு நிலைமையில் கொஞ்சம் மாறுபாடாக அமையலாம். தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஒரு எச்சரிக்கை மணியாகவும் அது இருக்கலாம்.

தமிழர் விடுதலை கூட்டமைப்பிற்கு வடக்கை விட கிழக்கில் சற்று சாதகமான பெறுபேறு கிடைக்கலாம். தனியாக எந்த சபையையும் கைப்பற்றுமென நிச்சயமாக சொல்ல முடியாது. ஆனால் சில பிரதேசங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு நிச்சயம் சவால் அளிக்கும்.

கிழக்கில் அபிவிருத்தி பணிகளில் பாரபட்சம், வேலையின்மை, முஸ்லிம் மற்றும் சிங்களவர்கள் நிலங்களை கையகப்படுத்துவதை தடுக்க முடியாமை என்பன எரிபற்று நிலையை தோற்றுவித்து கொண்டிருக்கின்றன. ஆங்காங்கே இனங்களிற்கிடையில் ஏற்படும் முறுகல்கள் அதற்கு எண்ணெய் ஊற்றிக்கொண்டிருக்கின்றன. இவற்றில் தலையிட முடியாதவர்களாக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இருப்பது கணிசமான விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் தேர்வில் தமிழரசுக்கட்சி செயலாளர் கி.துரைராசசிங்கத்தின் பெயர் கணிசமாக விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. கட்சி செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் அதிருப்தி எழுந்துள்ளது.

இந்த அதிருப்தி கிழக்கில் இரண்டு தேசிய கட்சிகளிற்கும்தான் வாய்ப்பாக அமையும். முன்னாள் கிழக்கு முதலமைச்சர் பிள்ளையான், முஸ்லிம்களின் நில கையகப்படுத்தலை தடுத்து நிறுத்திவைத்திருந்தார் என்ற அபிப்பிராயம் சாதாரண மக்களிடம் அதிகமாக காணப்படுகிறது. நிலம் கையகப்படுத்தும் விவகாரம் தேர்தலில் முக்கிய பேசுபொருளாக மாற்றப்பட்டால், அவர்களுக்கும் சில சாதகமான பலனை கொடுக்கும்.

தமிழ் உள்ளூராட்சி மன்றங்களை தேசிய கட்சிகள் தனித்து கைப்பற்றும் நிலைமை உருவாகாது. ஆனால் வழக்கத்தைவிட அதிகமான பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

### முஸ்லிம் காங்கிரஸ் மூக்குடைபடலாம்!

கிழக்கில் முஸ்லிம் பகுதி உள்ளூராட்சி சபைகளின் நிலைமைகள் எப்படியிருக்கும்?

இம்முறை முஸ்லிம் காங்கிரசிற்கு சத்தியசோதனை இருக்கலாமென நம்பலாம். முஸ்லிம் காங்கிரசிலிருந்து குறிப்பிடத்தக்களவு அதிருப்தியணி வெளியேறி விட்டது. ரிசாட் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அண்மைக் காலமாக கிழக்கில் வலுவாக கால்பதிக்க தொடங்கிவிட்டது. முஸ்லிம் காங்கிரசிற்கு தலையிடியாக இருந்த ஹசனலி தலைமையில் இயங்கிய ஐக்கிய சமாதான கூட்டமைப்பும், மக்கள் காங்கிரசும் இணைந்து ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு என்ற கூட்டமைப்பை ஆரம்பித்துள்ளனர்.

இந்த கூட்டமைப்பு நிச்சயம் முஸ்லிம் காங்கிரசிற்கு சவாலாக அமையும். நிந்தவூர் பிரதேசசபையை இந்த கூட்டமைப்பு கைப்பற்றலாம். சம்மாந்துறையில் முஸ்லீம் காங்கிரசுடன் சமமான போட்டியாளராக இருக்கலாம்.

அட்டாளைசேனைக்கு தேசியப் பட்டியல் வழங்காமலிருந்தது காங்கிரஸ் மீது பெரும் குற்றச்சாட்டாக இருந்தது. இதற்கு விரைவில் தீர்வு வழங்குவார்கள் போல தெரிகிறது. ஆனால், முஸ்லிம் காங்கிரசும் ஐக்கிய தேசியக்கட்சியும் தேர்தல் கூட்டு வைத்ததற்கும் கொஞ்சம் அதிருப்தி நிலவுகிறது. தயா கமகே மீது அண்மைக் காலமாக எழுந்த அதிருப்தியும் இதற்கு ஒரு காரணம்.

சாய்ந்தமருதில் சுயேட்சை அணியொன்றுதான் களத்தில் இறங்குகிறது. அக்கரைப்பற்று வேட்பாளர் தெரிவில் அதிருப்தியடைந்த பிரதேச முக்கியஸ்தர் ஒருவர் ரிசாட் பதியுதீனுடன் கைகோர்ப்பார் என தெரிகிறது.

கிழக்கில் முஸ்லிம் காங்கிரசின் மீது அண்மைக்காலமாக எழுந்த அதிருப்தியலையை ஐக்கிய சமாதான கூட்டமைப்பு அறுவடை செய்யலாம். ஆனால், முஸ்லிம் காங்கிரசிடமே பெரும்பாலான அதிகாரம் இருக்க வாய்ப்புண்டு.

தேசிய காங்கிரஸ் இம்முறை சுதந்திரக் கட்சி கூட்டணியில் போட்டியிடுவது ஓரளவு சாதகத்தை கொடுக்கலாம்.

இந்த பகுதியில் கட்டாயம் குறிப்பிட வேண்டிய ஒரு விடயத்தை இறுதியாக குறிப்பிடுகிறோம். வடக்கில் சில சமயங்களில் வாக்களிப்பு வீதம் மிக குறைவாக பதியப்பட வாய்ப்புள்ளது. கட்சிகள் மீதான விமர்சனம், மக்களை தேர்தலில் இருந்து ஒதுங்கியிருக்க செய்யவும் வாய்ப்புள்ளது.

தீபத்தின் பயிற்சி பத்திரிகையாளர் திட்டம்

பத்திரிகை துறையில் ஆர்வமுடையவரா?

புதுமையான சிந்தனையுடையவரா?

பத்திரிகை துறையில் உங்களை கைபிடித்து அழைத்து செல்லும் தீபத்தின் பயிற்சி பத்திரிகையாளர் திட்டத்தில் ஆண், பெண் இருபாலரும் இணைந்து கொள்ளலாம்.

விநியோக பிரிவில் வேலைவாய்ப்பு

வளமான எதிர்காலத்திற்கான அத்திவாரத்தை இட தீபத்தின் விநியோகபிரிவில் அரிய சந்தர்ப்பம். இந்த அனுபவம் உங்களை வாழ்வில் வெற்றியாளராக்கும்!

2024 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் இணைந்து கொள்ளலாம்.


மேலதிக விபரத்திற்கு
0768255562
deepamdesk@gmail.com

வர்ணத்தால் எழுத கூடாது.

பின்னர், வார்த்தைகளைப் படிக்காமல், அது என்ன நிறம் என்று மட்டும் சொல்ல வேண்டும். முதலில், வரிசைப்படி, வண்ணங்களை தொடர்ந்து சொல்கிறோமா என்று முயற்சித்துப் பார்க்க வேண்டும். அதில் பழகிய பிறகு, கீழிருந்து மேல், வலமிருந்து இடம் என்று மாற்றி மாற்றி படித்துப் பார்க்க வேண்டும்.

### நினைவாற்றல் ஆரோக்கியமாக இருக்க சில வழிகள்!


- தொடர்ந்து உடற்பயிற்சி மற்றும் சமச்சீரான உணவை உட்கொள்ள வேண்டும்.
- சுடோகு (Sudogu), குறுக்கெழுத்து (Cross word) போன்ற மூளைக்கான பயிற்சிகளில் ஈடுபடுவது, இவையெல்லாம், அறிவாற்றலால் செய்திறனை (Cognitive function) சரி பண்ணும். இன்னும் சொல்லப் போனால், புள்ளிகளை இணைத்து போடுகிற கோலம்கூட ஒரு விதத்தில் மூளைத் திற்னை மேம்படுத்தக்கூடியதுதான்.
- மனரீதியான அனைத்து பிரச்னைகளுடனும் தொடர்புடையது என்பதால், மனப் பதற்றமா? நினைவுத்திறனில் ஏதாவது பிரச்னையா? அதீத தொடர் சிந்தனையா? தூக்கமின்மையா? கவனச் சிதறலா? எதனால் இந்த பாதிப்பு வந்தது




என்பதை கண்டறிந்து, அதற்கான சிகிச்சைமற்றும்பயிற்சிகளை சொல்லித் தர வேண்டும்.
- தூக்கத்தினால் பிரச்னை எனில் ஆரோக்கியமான உறக்க முறை (Sleep Hygiene) சொல்லித் தரப்படும். மனதை இதமாக்கும் செயல்களில் ஈடுபட வேண்டும். தூங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்பு மூளையை தூண்டக்கூடிய செயல்பாடுகள் எதுவுமே இருக்கக்கூடாது.
- டிமென்ஷியாவினால் (Dimentia) வருகிறது எனில், அதற்கு மருந்து மாத்திரைகள் மற்றும் நினைவாற்றலைத் தூண்டும் பயிற்சிகள் கொடுத்து உதவலாம்.
- வெறும், மன உளைச்சல் (Stress) தொடர்பானதுதான் என்றால், மன அழுத்தத்தை சமாளிக்கும் யுக்திகளை (Stress coping strategies) ஸ்ட்ரெஸ் கோப்பிங் சொல்லிக் கொடுப்போம். வேலை தொடர்பானது என்றால், அந்த சூழலை எப்படி எதிர்கொள்வது என்ற உளவியல் ரீதியான (Psychological) மருத்துவ முறைகள் நல்ல பலனைக் கொடுக்கும்.
- ஆரம்ப நிலையிலேயே கவனித்து விட்டால், பிரச்னையில்லை, அதிகமானால், நினைவுத் தேய்மானத்தை கொஞ்சம் கட்டுப்படுத்தலாம்.
- தீவிரமான பிரச்னை எதுவும் இல்லை என்றால், இவர்களுக்கு வெறும் கவனம் மட்டும்தான் பிரச்னை என்றால், அதை எப்படி சரி பண்ணுவது என்பதற்கான சில வழிமுறைகள் இருக்கிறது. நியூரோ சைக்கோலஜிகல் மருத்துவ முறையில் (Neuro Psychological) மூலமும் சரி செய்யமுடியும். தொடர் பயிற்சிகள் மூலம் சரியான நிலைக்கு கொண்டுவந்துவிடலாம்.
- மருத்துவரைபார்த்து, ஆலோசனை பெறவேண்டியது அவசியம். ஏனெனில், இதுநிறைய பாதிப்புகளின் ஆரம்ப நிலை என்பதை மனதில் கொள்ளுங்கள்.

# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்



சாமந்தி (வயது 23)
கொடிகாமம்

**கேள்வி: எனது அக்காவின் வயது 27. அவருக்கு மூன்று பிள்ளைகள். அத்தானுக்கு நிரந்தர தொழில் இல்லை. கூலி வேலைதான். என்ன பிரச்சினையெனில், அவரது உழைப்பில் கொஞ்சம் தான் வீட்டுக்கு வரும். மீதியை குடித்துவிடுவார். எந்த நேரமும் வீட்டில் சண்டை. எனக்கு அக்காவை விட்டால் யாருமே இல்லை. அப்பா சின்ன வயசிலையே எங்களை விட்டு போய்விட்டார். வீட்டில் இருக்கவே பிடிக்காமல் உள்ளது. அத்தானை திருத்த ஏதாவது வழியுள்ளதா?**

பதில் :அன்புச் சகோதரி, மனித நாகரீகம் தோன்றிய காலம் முதல் மனித வாழ்க்கை முறையுடன் இணைந்து வளர்ந்து வரும் ஓட்டுண்ணி என்றால் அது மது தான். இன்று நேற்று அல்ல, தொன்று தொட்டு மனித நாகரிக வளர்ச்சியில் தவிர்க்க முடியாத ஒரு முக்கிய பகுதியாக இந்த மதுப் பிரச்சினை இருந்து வந்துள்ளது. எமது திராவிட வரலாற்றில், சங்கமருவிய காலத்து மதுப் பிரச்சினை மிக அதிகமாக இருந்துள்ளது. அதனால் தான் திருவள்ளுவர் தனது குறள் ஓவியத்தில் ஒரு அதிகாரத்தை "கள் உண்ணாமை" என்பதற்காக ஒதுக்கியுள்ளதுடன் குடியின் முன் பின் விளைவுகளை தெளிவாகக் கூறியுள்ளார்.

துரதிஸ்ரவசமாக "குடிக்கக் கூடாது, குடி கூடாது" என்று சொல்லிச் சொல்லியே குடிப் பிரச்சினை பூதாகரமாக வளர்ந்துவிட்டது. சகோதரி, உண்மையில் குடிப் பிரச்சினையென்பது உங்கள் வீட்டிற்குரிய பிரச்சினை இல்லை. இது ஒரு தேசியப் பிரச்சினை. அல்லது சர்வதேசப் பிரச்சினை என்று கூடச் சொல்லலாம். ஏனெனில் போதைப் பொருட்களில்

முக்கியமான, மிகப் பொதுவான போதைப் பொருள்கள்தான் குடி வகைகள். இந்தக் குடிவகைகளின் வியாபாரத்தால்தான் எத்தனையோ கோடீஸ்வரர்கள் உருவாகியுள்ளனர். எத்தனையோ அரசாங்கங்கள் தமது அரசின் கடன்களை அடைப்பது முதல் கொண்ட அரசுக்கான முக்கிய வருமான மாக குடி வகைகளின் வியாபாரத்தையே நம்பியுள்ளன.

அப்படிக் குடி வகைகளில் முதலீடு செய்துள்ள மலை விழுங்கு வியாபாரிகள் உங்கள் அத்தான் போன்ற அப்பாவி ஏமாளி அறிவலிகளைத் தமது வியாபாரத்திற்கு வீழ்த்தி வெற்றி கண்டு வருகிறார்கள். உங்களுக்குத் தெரியுமா? சுப்பர் ஸ்ரார் ரஜனி, இளைய தளபதி விஜய் போன்ற இளைஞர்களின் தலைவர்களிடம் அவர்கள் நடிக்கும் படங்களில் சாராயம் குடிப்பது, புகைப் பிடிப்பது போன்ற காட்சிகளை நடிப்பதற்காக, இந்தக் குடிவகை, புகைப் பொருள் கொம்பனிகள் எத்தனையோ கோடிகளில் உடன்படிக்கை செய்வார்கள்.

அந்தக் கோடிகளை வாங்கிக்கொண்டு இவர்கள் படங்களில் குடித்து, புகைத்து நடிப்பதன் மூலம் உலகம் முழுவதும் எத்தனையோ இலட்சக்கணக்கான இளைஞர்களை பழிதாக இந்தப் பழக்கங்களினுள் உள்ளீர்க்கிறார்கள். அதுதான் நான் கூறினேன், குடிப் பிரச்சினை ஒரு வீட்டுப் பிரச்சினை இல்லை. இந்தப் பிரச்சினையை இல்லாமல் செய்வதற்கு பாரியளவிலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். உதாரணமாக சாராயக் கடை முதலாளிக்கு இந்த தொழிலை விட்டு வேற தொழிலை செய் என்று கூறுவதனால் அவனுக்கு எத்தனை கோடிகளைக் கொடுத்தாலும் அவர்கள் இந்த தொழிலை விடமாட்டார்கள். அவ்வளவுக்கு இலாபம் தரும் தொழில்.

சரி உம்முடைய பிரச்சினையை பொறுத்த வரையில், குடிகார அத்தானால் வாழ்வைத் தொலைத்த முதலாவது பெண்மணி உங்கள் அக்காவல்ல. தினம் தினம் எத்தனையோ பெண்கள் வாழ்வைத் தொலைத்துக் கொண்டுதான் உள்ளனர். உங்கள் அத்தான் குடிக்கு அடிமை நிலையானவரா? அல்லது நிலையறிந்து குடிப்பவரா? எப்படியானாலும் உங்கள் அத்தான் இந்தக் குடிப் பழக்கத்தில், இருந்த விடுபட ஆர்வம் உள்ளவரெனின், மனநோய் சிகிச்சை நிலையத்துக்குக் கூட்டிச் சென்று கதையுங்கள் நல்ல பலன் கிடைக்கும். சாவகச்சேரி வைத்தியசாலையுடன் இணைந்து "குருந்தம்" எனும் குடிப்பழக்கத்தில் இருந்து வெளிவர ஆர்வம் உள்ளவருக்கான வேலைத்திட்டம் ஒன்று உள்ளது. கூட்டிச் சென்று கதைத்துப் பாருங்கள். எந்த வழிக்கும் சரிவரா முழுநேரக் குடிகாரன் எனின் சட்டவழிகள் மூலம் அவரில் இருந்து உங்கள் அக்காவுக்கு விடுதலை வாங்கிக்கொடுங்கள். தாய் தந்தை இல்லாத உங்களுக்கு உங்கள் அக்கா மட்டும்தான் உதவி என்றால் அவரைப் பாதுகாப்பது உங்கள் கடமையும் கூட. ஒருமுறையே வாழும் இவ் உலக வாழ்வில், தினம் தினம் அழுவதிலும் பார்க்க சிறிதளவாவது மகிழ்வுடன் வாழ முயல்வதில் தவறேதும் இல்லை. ஒரு கணவனானவன் தனக்குரிய பொறுப்பின் சின்ன விலகல்களை வெளிக்காட்டுவது ஒருபிரச்சினை அல்ல. ஆனால் பாரியளவில் பொறுப்புக்களில் இருந்து விலகி நிற்பது ஏற்புடையது அல்ல. எனவே நித்தம் சாவானுக்கு நித்தம் அழுவது யார்? என்பது போல் குடியில் மூழ்கிக் கிடந்து உங்கள் அக்காவின் வாழ்வில் மகிழ்ச்சியை விட துன்பத்தையே அதிகமாக வரம் கொடுக்கும் கணவரிடம் இருந்து விடை பெறுவதில் தவறேதும் இல்லை.



எனது அக்காவின் வயது 27. அவருக்கு மூன்று பிள்ளைகள். அத்தானுக்கு கூலி வேலைதான். அவரது உழைப்பில் கொஞ்சம் தான் வீட்டுக்கு வரும். மீதியை குடித்துவிடுவார். எந்த நேரமும் வீட்டில் சண்டை. எனக்கு அக்காவை விட்டால் யாருமே இல்லை. அத்தானை திருத்த ஏதாவது வழியுள்ளதா?

பெண் (வயது 24)
பண்டத்தரிப்பு

**கேள்வி: நான் யாழ் நகரத்தில் வர்த்தக நிலையமொன்றில் பணியாற்றுகிறேன். முகாமையாளராக உள்ளவருக்கும் எனக்கும் காதல் இல்லை. ஆனால் ஒருவரை ஒருவர் பிடித்திருக்கின்றது. அவருக்கு திருமணமாகி ஒரு குழந்தையும் இருக்கின்றது. அவர் என்னைத் திருமணம் செய்யமாட்டார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவருடன் நெருக்கமாகப் பழகுவது எனக்கும் பிடித்துள்ளது. பதினைந்து நாளின் முன் அவருடன் நெருக்கமாக இருக்கும் சூழல் ஏற்பட்டது. ஒரு பிரச்சினையும் இல்லையென்றார். ஒருமுறைதான் உறவு கொண்டோம். ஒருமுறை ஒரு குளிசைப் வைக்கத் தந்தார். அதில் நான்கு குளிகை உள்ளது. அதை பாவித்தால் பிரச்சனை பிரச்சனையில்லையென்றார். எனக்கு பயமாக உள்ளது. எனக்கு குழந்தை பிறக்க வாய்ப்பு ஏதும் உள்ளதா? அந்த நாலு குளிசையும் போட்டால் சரியா?**

பதில்: அன்புச் சகோதரி! உமது மடல் கண்டு நான் கண்டு கொண்டது என்னவெனில், எமது பிரதேசங்களில் குறிப்பாக அண்மைக் காலங்களில் உருவெடுத்துள்ள பிரச்சினைகள் இரண்டு. ஒன்று அண்மைக்கால தென்னிந்திய திரைப்படங்களின் ஆதிக்கம் காரணமான வாள்வெட்டு, வன்முறை, கொலை, கலாச்சாரம், இரண்டாவது தொலைக்காட்சி தொடர் நாடகங்களின் ஆதிக்கம் காரணமான குடும்ப அமைப்பில் ஏற்பட்டுள்ள உறவுப் பரிமாணங்களின் வித்தியாசமான வெளிப்பாடுகள்.

உண்மையில் உங்கள் மடல் மூலம் வெளிப்படும் விடயம் தொடர் நாடகங்களின் தொடர்ச்சியான பாதிப்புக்கள் காரணமான மனமாற்றம் தொடர்பானது. அந்தக் காலத்தில் திருமணம் ஆனவர்கள் பற்றிய மனப்பாங்கு மிகவும் இறுக்கமானது. திருமணமான கணவன் மனைவியானாலும் சரி அவர்கள் மீதான மூன்றாம் நபர் ஆனாலும் சரி அவர்கள் மீதான பார்வை மிகவும் இறுக்கமானதாக இருந்தது. ஆனால் இன்றைய உலகில் உளவியல் ரீதியான அடிப்படை மனித உரிமைகள் எண்ணக்கருக்கள் தொடர்பான போக்குகள் மிகவும் நெகிழ்வுத் தன்மை கொண்டவை. இதைவிட இன்றைய பெண்களின் மனப்பாங்குகள், எல்லாம் மிகவும் வேறுபாடானதாக உள்ளது. (குறிப்பாக திருமணமான குழந்தைகளின் அப்பா என்ற ஸ்தானத்தில் இருந்தாலும்; அம்மா என்ற ஸ்தானத்தில் இருந்தாலும்)

அந்தக் காலத்தில் மனைவி பிள்ளைகளுக்கான தியாகம்தான் வாழ்வு என்ற மனப்பாங்கு இருந்தது. ஆணுக்கும் சரி, பெண்ணுக்கும் சரி குடும்பம் பிள்ளைகளுக்கு ஆக தியாகிக்கும் வாழ்வு ஒருபுறம் இருக்க தமக்கான தனிப்பட்ட வாழ்வு என்றும் சில விடயங்கள் இருக்கவே செய்கின்றன. இது மேலைத்தேய வாழ்வு முறையின் இயல்புகளில் ஒன்று.

ஓகே! உங்களின் விடயம் தொடர்பில் நான் கூறக் கூடியதுயாதெனில், உங்கள் இருவருக்கு ஒருவரை ஒருவர் பிடித்துள்ளது. அவர் உங்களைத் திருமணம் செய்ய மாட்டார் என்பது தெரிந்தும் அவருடன் நெருக்கமாக இருப்பதில் மகிழ்வு இருப்பதாகக் கூறியுள்ளீர்கள். அதனால்தான் தங்களையே அவருக்கு கொடுத்து விட்டீர்கள். இப்போது உங்கள் பிரச்சினை அவருடன் இருப்பது பற்றியாதா? அல்லது

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள்
மனமே நலமா?
தீபம்
989/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, நல்லூர்
deepamdesk@gmail.com

# 'இடது' ஏன் இவ்வளவு ஸ்பெஷல்?



நீங்கள் என்றாவது உங்கள் வீட்டுக் கதவின் கைப்பிடியை வலது கையால் திறக்கும்போது, இதே கதவை இடது கைப்பழக்கமுள்ள ஒருவர் எப்படிச் சிரமமில்லாமல் திறக்கிறார் என்று சிந்தித்திருக்கிறீர்களா?

என்றாவது கருத்தரங்குகளில் இருக் கையுடன் இணைக்கப்பட்டிருக்கும் மேசையைப் பார்த்து இது இடது கைப்பழக்கமுள்ள ஒருவருக்கு மிகவும் சிரமமான ஒன்றாயிற்றே என்று கவலை அடைந்திருக்கிறீர்களா?

அவர்கள் மொத்த மக்கள் தொகையில் வெறும் 10% மட்டுமே என்றாலும், வாகனம் ஓட்டுதல் தொடங்கி, கணினியின் விசைப்பலகை வரை நாம் உருவாக்கிய பெரும்பாலான விஷயங்கள் வலது கைக்காரர்களுக்கு மட்டுமே வசதியான விதத்தில் அமைந்துள்ளன. வலது கைப்பழக்கமுடையோர் உருவாக்கிய உலகில் சிரமத்துடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இந்த கைப்பழக்கமுள்ளவர்கள்!

**இடது கைப்பழக்கத்துக்கு என்ன காரணம்?**

இதற்கு முக்கியக் காரணம், முன்பே அவர்கள் பரம்பரையில் யாரேனும் ஒருவருக்கு இடது கைப்பழக்கம் இருந்திருக்கலாம். வெகு சிலருக்கு இயல்பாகவே வந்தாலும், பெரும்பாலும் இது பெற்றோர் அல்லது மூதாதையர்களிடமிருந்து குழந்தைகளுக்கு வருகின்ற ஒரு பழக்கமாகவே இருக்கிறது. மேலும், பெண்களைவிட ஆண்களில் இடது கைப்பழக்கமுள்ளோர் 23% அதிகமாகக் காணப்படுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.



**யாரெல்லாம் இடது கைப்பழக்கமுள்ளவர்கள்?**

மிகச் சாதாரண கேள்வியாகத் தோன்றினாலும், இது நாம் அறிந்திராத பல்வேறு விஷயங்களை உள்ளடக்கியிருக்கிறது. நம்மைப் பொறுத்தவரை ஒருவர் இடது கையால் எழுதினாலே அவர் இடது கைப்பழக்கமுள்ளவர் என்று எடுத்துக் கொள்வோம். ஆனால், தர்க்கரீதியாக இதை அணுகினால், எழுதப் பயன்படுத்தும் கை மட்டும் இதைத் தீர்மானிப்பதில்லை!

எழுதுவது தொடங்கி, சாதாரண செய்கைகள், விளையாட்டுகள் மற்றும் கைகளால் செய்யப்படும் சின்னச் சின்ன வேலைகள் வரை, பெரும்பாலும் ஒருவர் எந்தக் கையைப் பயன்படுத்துகிறார் என்பதற்கு விடை 'இடது' என்றால், நிச்சயம் அவர் இடது கைப்பழக்கமுள்ளவர்தான்! தன்னை அறியமாலே இடக்கையை நீட்டுவது, இயல்பாகவே இடக்கை தான் தன் பலம் என நினைத்துக் கொள்பவர் வரை அனைவருமே இடது கைப்பழக்க முள்ளவர்கள் தான் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

**இடது என்றாலே ஜீனியஸ்தானா?**

"ஏய்! லெஃப்ட் ஹாண்டா நீ?" என ஆச்சர்யம் தொடங்கி "டேய்! அவன் லெஃப்டுடா!" என்ற கேலி, கிண்டல் வரை அனைத்தையும் பார்த்திருப்பார்கள் இடது கைப்பழக்கமுள்ளவர்கள். 'லெஃப்ட்' என்றால் 'ஜீனியஸ்' என்ற பரவலான ஒரு கருத்தும் நிலவிவருகிறது. அதனை ஏற்றுக்கொள்ள வைக்கும் விதமாகப் பல்வேறு செய்திகளும் ஆராய்ச்சி முடிவுகளும் அவ்வப்போது வந்தவண்ணம் உள்ளன. ஆனால், இயல்பில் அவர்களும் வலது கைக்காரர்களைப் போலத்தான்! கைப்பழக்கம் மட்டுமே இங்கே மாறுகிறது, மற்றபடி வலது கைக்காரர்களின் குணாதிசயங்கள் தான் இடது கைக்காரர்களுக்கும் இருக்கும் என்று சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்கள் நரம்பியல் நிபுணர்கள்.,

**இடது கையில் எழுதப் பழகும் குழந்தைகளை வலது கைப் பழக்கத்துக்கு மாற்றலாமா?**

இடது கைப்பழக்கத்தை மாற்ற முயற்சி செய்தால் மனரீதியாக நிறைய பாதிப்புகள் வரும் என்றொரு பொதுவான கருத்து இருக்கிறது. ஆனால், நிஜத்தில் அதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என்கிறார்கள் மருத்துவர்கள். பெரும்பாலான பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் இடது கைப்பழக்கத்தை மாற்ற முயற்சி செய்வதற்கு ஒரே காரணம், இது வலது கைக்காரர்களுக்கு என்றே உருவாக்கப்பட்ட உலகம் என்பதுதான்! பின்னாளில், இயல்பான வாழ்க்கை வாழ்வது அவர்களுக்குச் சிரமமாகிவிடக்கூடாது என்பதே அவர்களின் கவலை.

**நாங்கள் லெஃப்ட்தான்; ஆனா, எப்பவுமே ரைட்!**

எண்ணிக்கையில் மிகவும் குறைவு என்பதால் இடது கைக்காரர்களை நாம் இன்றும் ஆச்சர்யமாகப் பார்க்கிறோம். அதனாலேயே அவர்கள் ஸ்பெஷலாகி விடுகிறார்கள்! உலகெங்கிலும் உள்ள இடது கைப்பழக்கம் கொண்டவர்களைக் கொண்டாடும் விதமாக வருடந்தோறும் ஓகஸ்ட் 13 'சர்வதேச இடது கைப்பழக்க முடையோர் தின'மாக அனுசரிக்கப்படுகிறது. இடது கைப்பழக்கம் ஒன்றும் நோயோ பெரிய சிக்கலோ இல்லை என்பதை அறிவுறுத்தும் விதமாகவும் இது குறித்து ஒரு விழிப்பு உணர்வு ஏற்படுத்தவும் இந்த நாள் கொண்டாடப் படுகிறது.

## இடது கைப் பிரபலங்கள்

நடிகர் சார்லி சாப்ளின், விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், மாவீரர் அலெக்ஸாண்டர், தத்துவ மேதை அரிஸ்டோட்டில், மகாத்மா காந்தி, மேரி கியூரி, அமெரிக்க அதிபர்கள் ஜோர்ஜ் புஷ், ஒபாமா, மைக்ரோசொஃப்ட் நிறுவனர் பில்கேட்ஸ், நடிகர்கள் அமிதாப் பச்சன் மற்றும் அவரின் மகன் அபிஷேக் பச்சன், கிரிக்கெட் வீரர்களில் சனத் ஜயசூர்யா, சங்கக்காரா, லாரா, சச்சின் டெண்டுல்கர், எழுத்தாளர்கள் பி.நி.வெல்ஸ், லீவிஸ் கரோல் என எல்லாத் துறைகளிலும் இடதுகைப்பழக்கம் உள்ளவர்கள் உண்டு.

---

இத்தொடர்பால் ஏற்படவுள்ள கர்ப்பம் பற்றியதா என்பது எனக்குப் புரியவில்லை.

உண்மையில் இவ் வகையான தொடர்புகள் அநேகமாக பாரிய குடும்பப் பிரச்சினைகள், சட்டரீதியான பிரச்சினைகள், கொலைகள், தற்கொலைகள் என பல நீண்ட பிரச்சினைகளை உருவாக்கலாம். எனவே உண்மையில் உங்கள் இருவருக்கும் இடையில் உளரீதியான புரிந்துணர்வு, ஒத்தஉணர்வுத் தேவைகள் அல்லது காதல் உணர்வு என்பது ஏதும் இல்லைபோல் தெரிகின்றது. இது ஒரு கீழ்த்தரமான பௌதீகத் தேவை தொடர்பானதாகவே தெரிகின்றது. எனவே இது ஆரோக்கியமான தொன்றல்ல. உண்மையில் உளவியல் ரீதியான நெருக்கமும் தேடலும் தேவையும் இருக்குமெனின் இதைக் கையாள வேண்டிய விதம் வேறு. ஆனால் உங்கள் இருவரிடமும் அப்படி இருப்பதாக உங்கள் மடல் பறைசாற்றவில்லை.

உடலியல் தேவையை மட்டும் எதிர்பார்த்துள்ள ஒரு உறவாகவே இதைப் பார்க்க வேண்டி உள்ளது. அடுத்து அவர் தந்த மாத்திரைகள் என்ன? அதற்கு என்ன பெயர்? எங்கு பெற்றார்? என்பவை ஏதும் தெரியாமல் ஒன்றும் கூறமுடியாது. அது பனடோல் வில்லைகள் ஆகக்கூட இருக்கலாம். உங்களுக்கு கர்ப்பம் தங்குமா? இல்லையா என்பது பற்றி என்னால் எதுவும் கூறமுடியாது. ஆனால் அவசரக் கருத்தடை மாத்திரை என்ற உள்ளது. "postinor" 1, or 2 என்ற பெயரில் மருந்துக் கடைகளில் உள்ளது. அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட. இந்த மருந்து நான்கு மாத்திரைகள் கொண்டதல்ல. உடலுறவு கொண்டு இரண்டு மணித்தியாலத்தில் இந்த மாத்திரையைப் போட்டால் கர்ப்பம் தங்குவது தடைப்படும்.

எனவே உங்களின் இந்த விடயத்தை இனிமேல் தொடராமல் உமக்குரிய ஒருவரைத் தெரிவு செய்து சிக்கல்கள் இல்லாத விதமாக வாழ்க்கையைக் கொண்டு செல்லும். உமது முகாமையாளருடனான உறவினால் கர்ப்பம் ஏற்பட்டுள்ளதா? என்பதை கடைசி மாதவிடாய் திகதியில் இருந்து 45 நாட்களின் பின் சலப் பரிசோதனை செய்வதால் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.



பிரணவன் [illegible]ரிநொ[illegible] சேர்ந்த 29 வயது இ[illegible]ஞர். பிர[illegible]ன்ஷூரன்ஸ் நிறுவனம் ஒ[illegible]றில் பணியாற்றுகிறார். அண்மைக்காலமாக எப்போதும் ஏதாவது பரபரப்பு, டென்ஷனுடனே இருக்கவே, மன அழுத்த[illegible]க்கு ஆளானார். அவரிடம் பெரிய வேறுபாட்டை உணர்ந்த அவருடைய மனைவி, மனநல மருத்துவர் ஒருவரிடம் அழைத்துப் போனார்.

பிரணவனை பரிசோதித்த மருத்துவர், "வேலையில் உள்ள டார்கெட் நெருக்கடி தான் இதற்குக் காரணம்" என்றார். பிரணவன் மட்டுமல்ல இன்று ஏறக் குறைய 80% பேர் டார்கெட் பிரஷரில் பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். இந்த நெருக்கடி ஏன் உருவாகிறது..?

மாறிவரும் பொருளாதாரச் சூழலுக்குத் தகுந்தாற்போல் நிறுவனங்களின் எதிர் பார்ப்புகளும் மாறிவருகின்றன. முன்பு மாதிரி அல்ல, நிறுவனங்கள் தங்களது பணியாளர்களிடமிருந்து நிறையவே எதிர்பார்க்கின்றன. இதுவரை மார்க் கெட்டிங் பிரிவில் மட்டும் இருந்த 'டார்கெட் செட்டிங்', இப்போது மற்ற பிரிவுத் தொழில்களிலும் வந்துவிட்டது. நிறுவனங்கள் நிர்ணயிக்கும் இலக்கை எப்படி எளிதில் அடைவது, டார்கெட் பிரஷரை எப்படிச் சமாளிப்பது என்பது

**உங்கள் இலக்குகளை சரியாக அடைந்தால் மட்டுமே நிறுவனம் வளர்ச்சி பெறும். நிறுவனம் வளர்ச்சி அடைந்தால் மட்டுமே நீங்கள் வளர்ச்சியடைய முடியும் என்பதை நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டால், டார்கெட் என்பது கவலை தரக்கூடிய விஷயமாக உங்களுக்கு ஒருபோதும் இருக்காது.**

பலருக்கு தெரிவதில்லை. கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தின் மனிதவளத் துறை (Department of Human Resources) இந்த டார்க்கெட் பிரச்சனைக்கு எளிய தீர்வை முன்வைத்துள்ளது. அதை உங்களிற்கு தருகிறோம்.

நிறுவனங்கள், இதுவரை லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டன. தற்போது விற்பனையை அதிகரிப்பதுடன், வேலைசெய்யும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது, உள்கட்டமைப்பை அதிகரிப்பது, சேவையை மேம்படுத்துவது எனப் பல்வேறு பிரிவுகளிலும் விரிவாக்கம் செய்து, வளர்ச்சியில் மிகுந்த கவனத்தைச் செலுத்தி வருகின்றன. இந்த வளர்ச்சியில் ஒவ்வொரு பணியாளரின் பங்களிப்பு என்ன என்பது குறித்து நிறுவனங்கள் ஆர்வத்தோடு கவனிக்கின்றன.

நிறுவனங்களின் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நீங்கள் செய்யும் வேலையானது, தோளில் சூட்டிய மாலையா அல்லது கையில் பூட்டப்பட்ட விலங்கா என்று பாருங்கள். உங்கள் வேலையை நீங்கள் மாலையாக எடுத்துக்கொண்டால், வேலை செய்வது பெருமையாகவும், மகிழ்ச்சி தரக்கூடிய அளவுக்கு எளிதாகவும் இருக்கும். விலங்காக எடுத்துக்கொண்டால், வேலைக்குச் செல்வதே வேண்டா வெறுப்பாக இருக்கும். உங்கள் வேலையை எப்படிப் பார்ப்பது என்பது உங்கள் கையில்தான் இருக்கிறது. உங்கள் வேலையை மாலையாக எடுத்துக்கொண்டு, ஆர்வத்துடனும், முழு ஈடுபாட்டுடனும் செய்யுங்கள். மன அளவில் சிற்சில விஷயங்களில் கவனம் செலுத்தினாலே டார்கெட் இலக்கை எளிதில் எட்டிப் பிடித்து விட முடியும்.

டார்கெட் எவ்வளவு பெரிதாக இருந்தாலும், முதலில் அதைப் பார்த்து மலைத்துப்போய் நிற்காதீர்கள். அதை முதலில் சின்னச் சின்னதாகப் பிரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு வாரமும் என்னென்ன வேலைகளைச் செய்வது என்று திட்டமிடுங்கள் (Plan). திட்டமிடலுக்குப்பின், எந்த வேலைக்கு முன்னுரிமை தருவது என்று பட்டியலிடுங்கள் (Do list). இவற்றில் அதிக முன்னுரிமை உள்ளவை எவை, குறைந்த முன்னுரிமைஉள்ளவைஎவைஎனப்பிரித்து, அதைத் தினந்தோறும் செய்துவந்தாலே போதும், குறித்த காலத்தில் உங்கள் டார்கெட் நிறைவேறியிருக்கும்.

ஒவ்வொரு நிலையிலும் நீங்கள் செய்யும் வேலையைச் சரியாகச் செய்கிறீர்களா, இலக்கை நோக்கி சரியான வேகத்திலும் திசையிலும் செல்கிறீர்களா என்று சரிபார்த்துக் கொள்ளுங்கள். சிலவேளைகளில் கூடுதலான நேரத்தை எடுத்துக்கொள்ளும்போது, அதற்குத் தகுந்தாற்போல் உங்களுடைய பட்டியலில் மாற்றங்களைச் செய்து அடுத்தடுத்த வேலைகளை முடிக்கத் திட்டமிடுங்கள்.

மருந்து விற்பனை செய்யும் ஒருவர், 'ஒரு நாளில் 10 மருத்துவர்களைப் பார்க்கவேண்டியிருக்கிறதே' என நினைத்துச் செயல்பட்டால், அந்த வேலை கடும் சுமையாகவே தெரியும். இதுவே, 'நாம் அளிக்கும் மருந்தின் மூலம் நிறைய நோயாளிகள் குணமடைகிறார்கள். நம்மால் அவர்களுக்கு உதவ முடிகிறது' என்கிற பெருமையுடன் செயல்பட்டால், ஒரு நாளைக்கு 10 மருத்துவர்கள் என்ன, 15 மருத்துவர்களைக்கூட சந்திக்கத் தயங்க மாட்டார்.

நிர்வாகம் உங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறது என்பதைப் புரிந்து கொண்டு செயல்படுங்கள். வேலையில் கலந்தும் கரைந்தும் மூழ்கிவிட்டால், இலக்குகள் ஒருபொருட்டாகவே தெரியாது. பலவிதமான தடைகளைத் தாண்டித்தான் உங்கள் இலக்கை நீங்கள் அடைய வேண்டும் என்பதை மறக்காதீர்கள். 'நாளை செய்துகொள்ளலாம்' என எந்த வேலையையும் தள்ளிப் போடாதீர்கள். அப்படிச் செய்வதால், ஒரே நேரத்தில் பல வேலைகளை அவசரமாக முடிக்க வேண்டிய நிலைக்கு ஆளாவீர்கள். இது, மற்ற வேலைகளைப் பாதிப்பதோடு, உங்களின் திறனையும் வளர்ச்சியையும் பெரிதும் பாதிக்கும். ஆகையால், வேலைகளை உடனுக்குடன் முடிக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

உங்கள் இலக்குகளை நீங்கள் சரியாக அடைந்தால் மட்டுமே நிறுவனம் வளர்ச்சி பெறும். நிறுவனம் வளர்ச்சி அடைந்தால் மட்டுமே நீங்கள் வளர்ச்சியடைய முடியும் என்பதை நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டால், டார்கெட் என்பது கவலை தரக்கூடிய விஷயமாக உங்களுக்கு ஒருபோதும் இருக்காது.

நம்முடைய வேலைகளில் டார்கெட் என்று வந்தபிறகே அவற்றின் வேகம் அதிகரிக்கிறது. இதற்கு SDR என்றொரு சமன்பாடு உள்ளது. S என்பது வேலைக்கான அழுத்தம் (Stress); D என்பது தேவை (Demand); R என்பது வளங்கள் (Resources). இவற்றில் வேலைக்கான அழுத்தம் குறைவாக இருக்க வேண்டுமெனில், ஒன்று தேவையானது குறைவாக இருக்க வேண்டும் அல்லது வேலையைச் செய்து முடிப்பதற்கான வளங்கள் அதிகமாக இருக்க வேண்டும்.


வேலைக்கான அழுத்தம் அதிகமாக இருக்கும்போதுதான் செயல்திறன் (performance) சிறப்பாக இருக்கும். வேலைக்கான அழுத்தத்துக்கும் செயல் திறனுக்கும் இடையே அனுகூலமான நிலை (optimum level) ஒன்று இருக்கிறது. இந்த அனுகூலமான நிலையைவிட, வேலைக்கான அழுத்தம் அதிகரிக்கும்போது செயல் திறன் குறையும்; அனுகூலமான நிலையை விட வேலைக்கான அழுத்தம் குறைவாக இருந்தால், வேலை போரடிக்கத் தொடங்கி விடும். ஆகவே, ஒவ்வொருவரின் அனுகூல நிலை என்ன என்பதை அறிந்து, அதற்குத் தகுந்தாற்போல் இலக்கை நிர்ணயிக்க வேண்டும்.


வேலைக்கான அழுத்தத்தைச் சமாளிக்க, உங்களுடைய வளங்களின்மீது கவனம் செலுத்த வேண்டும். டார்கெட்டை எட்டுவதற்குத் திறமையான ஊழியராக மாற மிக முக்கியமான தேவை, நேர மேலாண்மை. இதை 80:20 என்ற ஃபோர்முலாவைப் பயன்படுத்திச் சிறப்பாக மேம்படுத்தலாம். அதாவது, 20 சதவிகித வேலைகளே 80 சதவிகித விளைவுகளைத் தீர்மானிக்கின்றன. இதனால் எந்த வேலை அதிக விளைவை ஏற்படுத்தும் என்பதைக் கண்டறிந்து, அந்த வேலையைச் சரியாகச் செய்து முடிக்க வேண்டும்.

80 சதவிகித வேலைகள் எளிதில் செய்து முடிக்கக்கூடியதாக இருந்தாலும், அவற்றினால் ஏற்படும் விளைவுகள் 20% அளவுக்கே இருக்கும். அதிக விளைவைத் தராத வேலைகளை இரண்டாம் நிலையில் வைத்துக்கொள்வதே புத்திசாலித் தனம். சுலபமான வேலையை முதலில் முடித்துவிட்டு, கடினமான வேலையைத் தள்ளி வைத்துக்கொண்டே இருக்கக் கூடாது. இதற்கு பிஸ்னஸ் சிண்ட்ரோம் (Business syndrome) எனப் பெயர். என்ன செய்தால் பிடிக்கும் என்பதையும், என்ன செய்தால் டார்கெட் இலக்கை அடைய முடியும் என்பதையும் தனியே பிரித்துக்கொண்டு செயல்பட்டால்,

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# டார்கெட் பிரஷர்... தப்பிக்கும் வழிகள்!







துப்பறியும் ராம்சேகர் 05

# காய்கறிகளில் புதைந்த ரகசியம் எது?

அத்தனை தொலைக்காட்சி சனல்களின் பிரதிநிதிகளும் தொழிலதிபர் சண்முகராஜனின் வீட்டுக்கு வெளியே கூடியிருந்தார்கள்.

அவர்களில் எவரும் உள்ளே போக முயலவில்லை. அப்படிப்போனால், அது சட்டமீறலும்கூட. உள்ளே பொலிசார் சோதனை நடத்திக்கொண்டிருந்தனர்.

தொலைக்காட்சி சனலின் ஒளிப்பதிவாளர்கள் அந்த வீட்டின் வெளிப்புறத்தையும் வெளியே கூடியிருந்த மக்களையும் மாறி மாறித் தங்கள் கமராவால் சுட்டுத் தள்ளிக்கொண்டிருந்தனர்.

முக்கியமாக அவர்கள் அதிகக் கவனம் செலுத்தியது அந்த வீட்டின் வெளிப்புறம் நின்றிருந்த ரங்கநாதன், வடிவேலு, கந்தசாமி, ருக்மணி ஆகியோர் மீதுதான். இவர்கள் நால்வரும் கோடீஸ்வரர்கள்தான். சண்முகராஜனின் நண்பர்கள். இந்த நால்வரையும் சண்முகராஜனையும் ஊடகங்கள் 'ஐவர் குழு' என்றே அழைத்தன. காரணம், இவர்கள் ஐவரும் கூட்டுச் சேர்ந்துதான் பலவித ஊழல்களிலும் கறுப்புப் பணப் பரிமாற்றத்திலும் ஈடுபட்டவர்கள் என்றன புலனாய்வு இதழ்கள்.

உள்ளே சிக்கும் ஆதாரங்களில் தங்களையும் சிக்கவைக்கும் ஏதாவது இருந்துவிடுமோ என்ற பதற்றமும் நால்வரின் முகத்திலும் தெளிவாகத் தெரிந்தது.

ஒரு தொலைக்காட்சி சனலுக்கான செய்திச் சேகரிப்பில் "தொழிலதிபர் சண்முகராஜன் நேர்மையானவர். இந்த சோதனை அரசியல் பின்னணியில் நடத்தப்படும் சதிச் செயல்" என்று நிருபர்களுக்கு பேட்டியளித்துக் கொண்டிருந்தார் ரங்கநாதன். வடிவேலு அதை வலுவாக ஆமோதிக்கும் வகையில் தலையசைத்தார். கந்தசாமி தன் காருக்குள் அமர்ந்தபடி மவுனம் சாதித்தார். ருக்மணி தன் கைப்பையை இறுகப் பற்றியபடி இறுக்கமாகக் காட்சி தந்தார்.

வீட்டிலிருந்து யாராவது அதிகாரி வெளிப்படுவாரா, அவர் ஏதாவது புதிய தகவலைக் கூறுவாரா? ஊடகங்கள் காத்திருந்தன.

அந்த நேரத்தில் எதிர்பாராத ஒரு நிகழ்வு நடந்தது. வீட்டின் உள்ளே ஏதோ பரபரப்பை உணர முடிந்தது. அடுத்த சில நொடிகளில் வீட்டுக்குள்ளிருந்து கையில் ஒரு தாளை எடுத்தபடி அந்த வீட்டுப் பணியாள் வெகு வேகமாக க்ரில் கதவை நோக்கி ஓடிவந்தார். சற்றுத் தாமதமாகச் சுதாரித்துக்கொண்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் சற்றுப் பின்னால் அவரைத் துரத்தி வந்தார்.

ரங்கநாதன் முகத்தில் எதையோ புரிந்துகொண்ட பதற்றம் தெரிந்தது. அவர் அந்தப் பணியாள் கொண்டுவந்த அந்தத் தாளை வாங்கிக்கொள்ளத் தயாராகத் தன் கைகளை வைத்துக்கொண்டார்.

ஆனால், அந்தப் பணியாள், ரங்கநாதனின் எண்ணம் ஈடேறவில்லை. பின்னால் வந்துகொண்டிருந்த பொலிஸ் அதிகாரி வேகமாகச் செயல்பட்டு அந்தப் பணியாளின் கையிலிருந்த அந்தத் தாளைப் பிடுங்கிக்கொண்டார்.


சம்பவம் 2

"இதுதான் அந்த வேலைக்காரர் உள்ளேயிருந்து கடத்திவந்த தாளின் நகல்" என்றபடி இன்ஸ்பெக்டர் விக்ரம் ஒரு தாளைத் துப்பறியும் ராம்சேகரிடம் நீட்டினார்.

"மிஸ்டர் ராம்சேகர் இது ஏதோ மார்க்கெட்டுக்குச் சென்று காய்கறி வாங்குவதற்காக அந்தப் பணியாளிடம் கொடுக்கப்பட்ட தாள்போல இருக்கிறது. ஆனால், இது ஏதோ ஒருவிதத்தில் மிக முக்கியமானது என்பதால்தான் அது சோதனையில் சிக்கக் கூடாது என்று அந்த விசுவாசமான வேலைக்காரர் நினைத்திருக்கிறார். உங்களுக்கு ஏதாவது புரிகிறதா பாருங்களேன்" என்றார்.

ராம்சேகர் அந்தத் தாளைக் கவனமாக ஆராய்ந்தார். தாளின் வலது புறத்தில் மேலாக முன்தின திகதி குறிக்கப்பட்டிருந்தது. கீழே சில காய்கறிகளின் உருவங்கள் வரையப்பட்டிருந்தன. பார்க்கும்போதே அவை என்னென்ன காய்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. தொடர்ந்து இரண்டு நிமிடங்கள் அந்தத் தாளைக் கவனித்தார் ராம்சேகர்.

அவர் முகம் மலர்ந்தது. 'கில்லாடிதான்' என்ற வார்த்தையை அவர் உதடுகள் உதிர்த்தன.




"என்ன விஷயம் ராம்சேகர்?" என்று ஆர்வத்துடன் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"பணப்பட்டுவாடாவாகத்தான் இருக்க வேண்டும்" என்று புன்னகைத்தார் ராம்சேகர்.

அந்தத் தாளில் உள்ளதைக் கொண்டு ராம்சேகர் கண்டுபிடித்தது என்ன? நீங்களும் ஊகியுங்களேன். விடை அடுத்த வாரம். **(துப்பறியலாம்)**

## சென்ற வார விடை

ரவி வர்மா தனது எந்த மகளை சொத்துக்கு வாரிசாகத் தேர்ந்தெடுத்தார்? எதைக் கொண்டு ராம்சேகரால் இதைக் கண்டுபிடிக்க முடிந்தது? ரவி வர்மா தீவிர மாரடைப்புக்கு உட்படுகிறார். இறப்பு நெருங்கிவிட்டது என்பது அவருக்குத் தெரிந்துவிட்டது. எந்த மகளுக்குத் தனது சொத்துப் போய்ச் சேர வேண்டும் என்பதை நண்பர் இன்ஸ்பெக்டர் விக்ரமிடம் சொல்லிவிடத் தீர்மானிக்கிறார். "உங்கள் தேர்வை என்னிடம் பகிர்ந்து கொள்வது நல்லது அல்லவா?"என்றுவிக்ரம் கேட்கும் போது, அந்தத் தேர்வு யார் என்பதை வெளியிடுகிறார் ரவி வர்மா. "யாமினி"என்ற பதிலில் 'யா' என்று கூறி முடித்தவுடனேயே மாரடைப்பு அதிகமாகிவிடுகிறது. 'மினி' என்ற பகுதி வெளிவராமலேயே போய்விடுகிறது. ஆனால் 'யா' (Yeah) என்பதை Yes என்பதன் அமெரிக்க வடிவம் என்பதாகத் தவறாகப் புரிந்து கொள்கிறார் விக்ரம். ஆனால், அமெரிக்க ஆங்கில வார்த்தைளை ரவி வர்மா வெறுப்பவர் என்பது தெரிந்தவுடன் அவர் இறுதியாகக் கூறிய 'யா' என்பது ஒப்புதலைக் குறிக்கவில்லை என்பதையும், யாமினி என்றுதான் அவர் கூறத் தொடங்கியிருக்கிறார் என்பதையும் ராம்சேகர் புரிந்துகொள்கிறார். (ரவி வர்மாவுடனான தனது இறுதி உரையாடல் முழுவதும் ஆங்கிலத்தில் அமைந்தது என்று இன்ஸ்பெக்டர் தெளிவாகக் குறிப்பிடுகிறார்).



இலக்கை எளிதில் அடைந்துவிடலாம்.

டார்கெட்டை எட்டும்போது சகபணியாளர்களுடனும் தலைமை இடத்திலும் திறந்த மனதுடன், நேர்மையான அணுகுமுறையைக் கடைப்பிடியுங்கள். இதன் மூலம் நிர்வாகத்தில் நம்பிக்கையானவராகத் தோற்றமளிப்பீர்கள். மேலும், என் இலக்குகள் இவைதான்' என வெளிப்படையாகச் சொல்லவும் உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

ஒரு மரத்தை அறுக்கும்முன் வாளை கூர்தீட்டுவது போல், செயல்களைச் செம்மையாகச் செய்து முடிக்கவும் உடலையும், மனதையும் கூர்தீட்டிக் கொள்ள வேண்டும். உடலும், மனமும் சரியான முறையில் செயல்பட தினமும் ஒரு மணி நேரம் ஒதுக்க வேண்டும். 20 நிமிடம் உடற்பயிற்சி, 20 நிமிடம் மனப்பயிற்சி செய்ய வேண்டும். உடலைச் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ள நடைப்பயிற்சி, நீச்சல் பயிற்சி பல முறைகள் உள்ளன. மனதுக்குத் தியானம், யோகா, மூச்சுப்பயிற்சி செய்வது அவசியம்.

இலக்கு நோக்கிக் கொண்டு செல்லும் நமது செயல்பாடுகளை, தொழில்நுட்பங்களை அவசியம் பயன்படுத்த வேண்டும். `To Do list' என்ற டூலில் தினமும் ஒவ்வொரு வாரத்துக்கும், ஒவ்வொரு மாதத்துக்கும் தகுந்தாற்போல் பணிகளைப் பட்டியலிட்டு வேலை பார்த்தால் டார்கெட்டை எட்டுவதில் எந்தப் பிரச்னையும் இருக்காது. அதனால் எந்த பிரஷரும் வராது.

பொதுவாக, நிறுவனங்கள் நிர்ணயிக்கும் டார்கெட் என்பதே அடையாத முடியாத அளவுக்குத்தான் இருக்கும். இது நிறுவனத்துக்கும் நன்றாகத் தெரியும். ஓர் ஊரில் இவ்வளவு பேர்தான் சோப்புகளை வாங்குவார்கள் என்பது தெரிந்தும், கடையில் அளவுக்கு அதிகமாக சோப்புகளை விற்பனைக் காகக் காட்சிப் படுத்துவதுபோல்தான் டார்கெட் இலக்குகளும்.

நிறுவனம் நிர்ணயிக்கும் டார்கெட்களை எல்லா நேரங்களிலும் நிறைவேற்றிவிட முடியாது. இது நமக்கும் தெரியும்; நிறுவனத்துக்கும் தெரியும். ஒருவேளை நம்மால் டார்கெட்டை அடைய முடியவில்லை எனில், அதற்கான காரணத்தைச் சரியாக விளக்கிச் சொன்னால், அதை நிர்வாகம் நிச்சயம் ஏற்றுக்கொள்ளும்.

ஆனால், ஒவ்வொரு முறையும் ஏதோவொரு காரணத்தைச் சொல்லி, டார்கெட்டில் இருந்து தப்பிக்க நினைக்கக் கூடாது. முடிந்தவரை டார்கெட்டை நிறைவேற்ற நேர்மையாக முயற்சி செய்ய வேண்டும்.


டார்கெட்டை நிறைவேற்ற வேலைப் பளுவை அதிகரித்து, மன அழுத்தத்துக்கு ஆளாகாதீர்கள். செய்யும் வேலையைச் சரியான முறையில் அணுகினால், டார்கெட்டை நிச்சயம் நிறைவேற்றுவீர்கள்.

டார்கெட் பிரஷர் இனி உங்களுக்கு ஒரு பிரச்னையாக இருக்காதுதானே!

பீஷ்மர்

**1999** ஓயாத அலைகள் 03 சமரில் தளபதி பால்ராஜின் கட்டளையை மட்டக்களப்பு ஜெயந்தன் படையணி இளநிலை தளபதியொருவர் ஏற்க மறுத்தார் என்பதை கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனையிறவு இராணுவ முகாமை வீழ்த்துவதற்கு புலிகள் பலமுறை முயன்றும் முடியாமலிருந்தது. எந்த பலத்திலும் ஒரு பலவீனம் உள்ளது. ஆனையிறவின் தரைத்தோற்றம்தான் இராணுவத்திற்கு பலமாக இருந்தது. நீண்ட வெட்டைவெளியை கடந்து புலிகளால் முன்னேறி சென்று, இராணுவத்தின் முன்னரணை உடைக்க முடியாமல் இருந்தது. இந்த தரையமைப்பில் இருந்த ஒரு பலவீனத்தையே தமக்கு சாதகமாக புலிகள் பயன்படுத்தினார்கள்.


SPG 9 புலிகளிடம் இருந்த சோவியத் தயாரிப்பான ராங்கி எதிர்ப்பு நவீன ஆயுதம் பற்றி இந்த தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தோம். இத்தாவில் ஙிஙிஙீஇற்குள் அந்த ஆயுதத்தை தோளில் கொண்டு செல்லும் போராளிகள்

### அது குடிநீர்!

ஆனையிறவு, இயக்கச்சி பகுதி இராணுவ முகாம்களில் நல்ல குடிநீர் கிடையாது. அதிலும் ஆனையிறவில் உப்பளம், வாடிவீட்டு முகாம்களில் மருந்துக்கும் குடிநீர் கிடையாது. குமாரபுரத்தில் இருந்து பவுசர்களில்தான் குடிநீர் கொண்டு செல்லப்படும். உப்பளம், வாடிவீட்டு பகுதிகள்தான் இராணுவத்தின் பலமான முன்தளம். அந்த பகுதியால் பயணம் செய்பவர்களிற்கு, அந்த தரைத்தோற்றத்தை புரிந்து கொள்ள முடியும். அதற்கப்பால் பரந்தன் வரை வெட்டவெளி. இதற்குள்ளால் வரும் புலிகளின் படையணிகளை குருவி சுடுவதை போல இராணுவம் சுட்டு வீழ்த்தும்.

1991இல் புலிகள் ஆகாய கடல் வெளி இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் ஆனையிறவின் மீது முதலாவது


குடாரப்பு தரையிறக்கத்திற்கு தயாராகும் புலிகள்



**இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 61**

# காதலியை கட்டியணைத்தபடி குண்டை வெடிக்கவைத்த புலிகளின் மூத்த தளபதி!

## கருணாவின் பெண் தளபதிக்கு இருந்த வித்தியாசமான சிக்கல்

தாக்குதலை நடத்தினார்கள். அப்பொழுது வெட்டைவெளியை கடப்பதற்கு, மண்ணெண்ணெய் பரலில் மண் நிரப்பி, அதன் பின்னால் மறைந்தபடி மெதுமெதுவாக நகர்த்தி முன்னேறினர்.

குடாரப்பில் தரையிறங்கிய பால்ராஜ் தலைமையிலான 1200 பேர் கொண்ட படையணி, இத்தாவிலில் BOX அடித்தது. இந்தBOXஇற்குள் நிலைகொண்ட போராளிகளை மூன்று டிவிசன் படையினர் சுற்றி வளைத்து தாக்கினர். இப்படியான நெருக்கடியில் இருந்த பால்ராஜிற்கு, BOX,ற்கு வெளியில் நின்ற ஜெயந்தன் படையணியின் ஒரு அணியும் வழங்கப்பட்டது. தாளையடியில் நிலை கொண்டிருந்த ஜெயந்தன் படையணியை எப்படியாவது உபயோகித்து, BOX,ற்குள் நிற்பவர்களின் அழுத்தத்தை குறைப்பதே திட்டம்.

ஆனால் பால்ராஜின் கட்டளையை தாளையடியில் நின்ற ஜெயந்தன் படையணியின் இளநிலை தளபதி ஏற்கவில்லை. 'எங்களுக்கு அம்மான் மட்டும்தான் கொமாண்ட் பண்ணலாம். வேற யார் கொமாண்ட் பண்ணியும் நாங்கள் செய்யமாட்டம்'. இதுதான் அவரது பதிலாக இருந்தது.

யார் அந்த இளநிலை தளபதி தெரியுமா?

அக்கினோ.

கருணாவின் நம்பிக்கைக்குரிய விசுவாசியாக இருந்தவர். தாளையடி அணிக்கு உமாரமணன் பொறுப்பாக இருந்தார். அவரின் கீழ் செயற்பட்டவர் அக்கினோ. அப்பொழுது அவர் மீது புலிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சரி, ஜெயந்தன் படையணி யாழ்ப்பாண சண்டையில் முக்கிய பங்கு வகிக்காமல், உதவி அணியாக செயற்படட்டும் என பிரபாகரன் முடிவெடுத்தார். ஓயாத அலைகள் 03 சண்டை உக்கிரமாக நடந்து கொண்டிருந்ததால், இந்த விவகாரத்தை அப்போதைக்கு பெரிதுபடுத்தாமல், சண்டை முடியட்டும் என்பதே புலிகளின் எண்ணம். ஆனால், அக்கினோவை பொறுப்பிலிருந்து நீக்கி வைக்குமாறு மட்டும் கருணாவிற்கு ஒரு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்கள்.

அக்கினோ விசயத்தில் புலிகள் உடனடியாக கடுமையாக நடந்து கொள்ளாததற்கு இன்னொரு காரணமும் உள்ளது.

கிழக்கு மகளிர் படையணியான அன்பரசி படையணியின் தளபதியாக இருந்த நிலாவினி/ சாளியை நீங்கள் அறிந்திருக்கக்கூடும். கருணா பிரிவின் போது அவருடன் சென்றவர். கொழும்பிற்கு கருணா அணி தப்பிச்சென்ற பின்னர், மிக நெருக்கமானவர்களை மட்டும்தான் கருணா தன்னுடன் வைத்திருக்கலாமென்ற நிலையிருந்தது. கருணாவுடன் இருந்தவர்களை பரா மிலிட்டரியாக தம்முடன் இயங்கவைக்கலாமென்ற எண்ணம் இராணுவத்திற்கு இருந்தாலும், பெண்களை வைத்து எதுவும் செய்ய முடியாதென்பது அவர்களிற்கு தெரியும்.

இதனால் கருணாவுடன் தப்பிச் சென்ற மகளிர் படையணி முக்கியஸ்தர்களை மத்திய கிழக்கு நாடுகளிற்கு பணிப்பெண்களாக செல்லுமாறு கேட்கப்பட்டது. தளபதிகளாக செயற்பட்டவர்கள், திடீர் திருப்பங்களால் கொழும்பில் நின்று என்ன செய்வதென தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தவர்கள்... பணிப் பெண்களாக செல்லுமாறு கூறியதை அவர்கள் விரும்பவில்லை. இந்த சமயத்தில் அவர்களின் உறவினர்களை கைது செய்து, அவர்கள் மூலம் தொடர்புகொண்டு கொழும்பில் நின்ற முன்னாள் மகளிர் படையணி

தளபதிகளை தமது கட்டுப்பாட்டு பகுதிக்கு புலிகள் வரவழைத்தனர். இப்படி வந்த நிலாவினி, இராசாத்தி போன்றவர்கள் பகிரங்கமாக ஊடகங்களின் முன் பேட்டியெல்லாம் கொடுத்தனர். பின்னர், புலிகளின் புலனாய்வுப்பிரினால் விசாரணை செய்யப்பட்டு, சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த நிலாவினி விடயத்தில் 1997 இல் நடந்த ஒரு சம்பவத்தை மனதில் வைத்துதான், அக்கினோ விடயத்தில் புலிகள் உடனடியாக அவ்வளவாக இறுக்கிப்பிடிக்கவில்லை.

இப்பொழுது நாம் சொல்லப்போகும் விசயம் சில சமயங்களில் சிலருக்கு சங்கடத்தை ஏற்படுத்தவும்கூடும். ஆனால் உண்மைகளை யாராலும் மறைக்க முடியாது. சரியும், தவறுமாக பலதும் இணைந்ததுதானே வரலாறு.

ஜெயசிக்குறு களத்திற்கு கிழக்கு படையணிகள் வந்த புதிதில் ஜெயந்தன் படையணியை ரமேசும், அன்பரசி படையணியை நிலாவினியும் வழிநடத்தினார்கள். நிலாவினி குறித்து ஏற்கனவே இந்ததொடரில் சில தகவல்களை குறிப்பிட்டுள்ளோம். நிலாவினி சில தனிமனித பலவீனமுடையவர். அவருக்கு ஜெயந்தன் படையணியின் சில முக்கியஸ்தர்களுடன் நெருங்கிய 'தொடர்பு' இருந்தது. அவர்கள் பின்னாளில் கருணா பிரிவில், புலிகளை விட்டு பிரிந்து சென்றுவிட்டனர். அந்த தொடர்பு எல்லாமே உடல்ரீதியானது என்று கூறலாமா தெரியவில்லை. ஆனால் சில உடல்ரீதியான தொடர்புகளும் இருந்தன. ஆதாரத்துடன் சிக்கிய சில சம்பவங்களும் இருந்தன. ஆதாரத்துடன் சிக்கிய பின்னர், அது புலிகளிற்குள்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

கடுமையான விமர்சனத்தை கிளப்பியது.

இந்த விசயம் பிரபாகரனின் காதிற்கு சென்றது. விடுதலைப்புலிகள் அமைப்பின் கண்டிப்பான விதிகளில் ஒன்று போராளிகளிற்குள் பாலியல் தொடர்புகள் இருக்ககூடாதென்பது. பாலியல் தொடர்பு வைத்திருந்ததற்காகவே மரணதண்டனை விதிக்கப்பட்ட பல சம்பவங்கள் உள்ளன.

புலிகளிற்குள் தனிமனித ஒழுக்கம் எப்படியிருந்ததென்பதற்கு உதாரணமாக இரண்டு சம்பவங்களை குறிப்பிடுகிறேன்.

புலிகளின் குட்டிசிறி மோட்டார் படையணி உருவாக்கப்பட்டபோது அதில் முக்கிய பங்காற்றியவர் சோ. புலிகளின் மோட்டார் படையணி வளர்ச்சியடைந்ததற்கு அவர்தான் மிக முக்கிய காரணம். ஆனால் அவரைப்பற்றி வெளியில் அவ்வளவாக தெரியாது.

தளபதி சோ முதலில் புலிகளின் ராங்கி பிரிவிற்கு பொறுப்பாக இருந்தார். துல்லியமாக ராங்கியால் சுடுவதில் மிகமிக தேர்ந்தவர். அவரது துல்லிய சூட்டிற்கு ஒரு உதாரணம், புலிகள் முல்லைத்தீவு கடலில் ஐரிஸ்மோனா கப்பலை பணயமாக வைத்து இரண்டு டோறா படகுகளை தாக்கியழித்த சம்பவம்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை கொண்டு செல்லும் பணியில் ஐரிஸ்மோனா என்ற கப்பல் ஈடுபட்டிருந்தது. ஒருமுறை ஈ.பி.டி.பி அமைப்பிற்கு உணவும், துணிகளும் எடுத்துக்கொண்டு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சென்றது. முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து கடற்புலிகள் கப்பலை மடக்கி, நாகர்கோவில் கடற்கரைக்கு கொண்டு வந்தார்கள். புலிகள் இந்த நடவடிக்கையை செய்தது இரண்டு நோக்கங்களிற்காக. உணவு, உடுதுணிகள் எடுக்கலாம். அதில் எடுத்த துணி, பற்றிக் வகையை ஒத்தது. நன்றாக மினுங்கும். 1996 தொடக்கத்தில் போராளிகளிற்கு இந்த துணி சேர்ட்டே வழங்கினார்கள். நன்றாக மினுங்க மினுங்க, ஒரேவிதமான சேர்ட்டுடன் அப்பொழுது போராளிகள் திரிந்தது சிலருக்கு நினைவிருக்கலாம். இந்த சேர்ட் புலிகளிற்கு இழப்பையும் ஏற்படுத்தியது. அதை அடுத்த வாரம் கொசுறு தகவலாக குறிப்பிடுகிறேன்.

ஐரிஸ்மோனாவை புலிகள் கடத்தியதற்கு இரண்டாவது காரணம் ஒரு பொறி வைப்பதற்கு. ஐரிஸ்மோனாவை கடற்கரையில் கட்டிவைத்தால், அதை மீட்க கடற்படை முயலும். மீட்க முடியாமல் போனால்தான், அதை தாக்கி அழிக்க முயற்சிப்பார்கள். இப்படியொரு பொறியை அதற்கு முன்னர் புலிகள் வைத்ததில்லை. நிச்சயம் இரை மாட்டும் என புலிகள் எதிர்பார்த்தார்கள்.

**அதுதான் நடந்தது!**

ஐரிஸ்மோனா கப்பல் கடத்தப்பட்ட விசயம் கடற்படை தளபதியால், அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அறிவிக்கப்பட்டது. 'என்னசெய்தாவது ஐரிஸ்மோனாவை உடனடியாக மீட்டெடுங்கள், அது முடியாவிட்டால் தாக்கி அழியுங்கள். இதை செய்யாமல் எனக்கு தகவல் தந்துகொண்டிருக்கிறீர்களா?' என கடற்படைக்கு சந்திரிகா செம டோஸ் கொடுத்தார். உடனே திருகோணமலையிலிருந்து ஒரு டோறா அதிவேக பீரங்கிப்படகு புறப்பட்டது. ஐரிஸ்மோனாவை மீட்க ஒரு டோறாவே போதுமென கடற்படை கணக்குப் போட்டது.

டோறா படகுதான் கரைக்கு வருமென்பதை புலிகளும் எதிர்பார்த்திருந்தனர். புலிகளிடம் அப்பொழுது ஒரேயொரு ராங்கிதான் இருந்தது. 1993 இல் பூநகரியில் கைப்பற்றியிருந்தனர். கடற்கரையில் இருந்த பற்றை மறைவில் ராங்கியை நிறுத்தி, அதை சுற்றி மூன்று திசையிலும் மண் மூட்டைகள் அடுக்கி, அதன் மேல் மணலை குவித்தனர். கடலில் இருந்து பார்த்தால், பற்றை மறைவில் சிறிய மணல்திட்டு இருப்பதை போலத்தான் தெரியும்.

ஐரிஸ்மோனாவை கரையிலிருந்து



புலிகளிடம் சரணடைந்த பின்னர் நிலாவினியும் சகாக்களும்

**புலிகள் மோட்டார் படையணியை ஆரம்பித்தபோது, அதற்கு தளபதி பானு பொறுப்பாக இருந்தார். அவருக்கு அடுத்த பொறுப்பாளர் சோ. புலிகளின் ஆட்லறி படையணி வளர்ச்சியடைந்ததற்கு அவரும் முக்கிய காரணம்.**

ஒன்றேகால் கடல்மைலில் (ஒரு கடல் மைல் என்பது 1852 மீற்றர் ஆகும்) நிறுத்தி வைத்திருந்தார்கள் புலிகள். ஐரிஸ்மோனாவை கட்டியிழுத்துக் கொண்டு செல்வதே கடற்படையின் நோக்கம்.

டோறா படகுதிருகோணமலையிலிருந்து புறப்பட்டதுமே நாகர்கோவிலில் இருந்த புலிகளின் ராடர் திரையில் காண்பித்தது. வெறும் குருவிப்படகுகள் இரண்டை புலிகள் ஐரிஸ்மோனாவை சுற்றிச்சுற்றி வருமாறு அனுப்பிவைத்தனர்.

நாகர்கோவில் கடற்பரப்பிற்குள் நுழைந்த டோரா, அங்கு நின்றவாறு நிலைமையை அவதானித்தது. ஐரிஸ்மோனா தப்பிச்செல்லாமல் புலிகளின் இரண்டு படகுகள் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருக்கிறது!

இரண்டு படகுகளையும் மூழ்கடித்து விட்டு, ஐரிஸ்மோனாவை இழுத்து செல்வோம் என முடிவெடுத்தார்கள்.

டோறா படகு தம்மை நோக்கி வருவதை கவனித்த கடற்புலி படகுகள் இரண்டும் சும்மா சத்தவெடி வைத்தார்கள். டோறா படகிலிருந்து பதில் தாக்குதல் நடத்த தொடங்கினார்கள். டோரா தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் தப்பியோடுவதை போல, கடற்புலிகளின் இரண்டு படகுகளும் கரையை நோக்கி வேகமாக சென்றன. தமது தாக்குதலை சமாளிக்க முடியாமல் கடற்புலிகள் தப்பிச்செல்கிறார்கள் என டோராவிலிருந்த கடற்படையினர் நினைத்தனர். உற்சாகமாக ஐரிஸ்மோனாவை நோக்கி வந்தனர்.

டோரா படகு, ஐரிஸ்மோனாவை நெருங்கும் சமயத்தில் கரையில் மறைவான இடத்தில் நின்ற ராங்கியிலிருந்து முதலாவது செல் அடிக்கப்பட்டது. டோரா படகு தீப்பற்றி எரிந்தது.

ராங்கி செல் டோராவை தாக்கியதும், அதன் கொமியுனிகேசன் சிஸ்டம் செயலிழந்து விட்டது. என்ன நடந்ததென்பதை கட்டுப்பாட்டு அறைக்கு அறிவிக்கவும் முடியவில்லை. அப்படியே மூழ்கிவிட்டது.

அந்த டோராவிற்கு என்ன நடந்ததென்பதை தெரியாமல் இன்னொரு அணி வந்தது. இம்முறை எச்சரிக்கையாக நான்கு டோராக்கள் வந்திருந்தன. இரண்டு டோராக்கள் தொலைவில் நிற்க, இரண்டு ஐரிஸ்மோனாவை கட்டியிழுக்க வந்தன. முதலாவது டோரா ஐரிஸ்டோனா கப்பலை தொட்டுவிடும் தூரத்திற்கு வந்துவிட்டது. கரையிலிருந்த ராங்கி அதை குறிவைத்து சுட்டது. அந்த டோராவும் தீப்பற்றி எரிந்தது. மற்றைய டோரா வந்த வேகத்தில் திரும்பி ஓடத் தொடங்கியது. அதையும் குறிவைத்து அடித்தார்கள். தூரத்தில் வேகமாக தப்பிச்சென்று கொண்டிருந்ததால், சிறிய சேதத்துடன் தப்பிச்சென்றுவிட்டது.

ராங்கிக்குள் இருந்து குறிவைத்து சுட்டவர்தான், தளபதி சோ.

1996 இல் முல்லைத்தீவிலும் இதே மாதிரியான ஒரு தாக்குதலை செய்து, டோரா படகொன்றை மூழ்கடித்திருந்தார். இதன்பின்னர்தான் கரையில் புலிகள் வைக்கும் பொறியைப்பற்றி கடற்படையினர் தெரிந்து கொண்டனர்.

புலிகள் மோட்டார் படையணியை ஆரம்பித்தபோது, அதற்கு தளபதி பானு பொறுப்பாக இருந்தார். அவருக்கு அடுத்த பொறுப்பாளர் சோ. புலிகளின் ஆட்லறி படையணி வளர்ச்சியடைந்ததற்கு அவரும் முக்கிய காரணம்.

ஒருவரது முக்கியத்துவத்தை புரிய வைக்க புலிகளிற்குள் ஒரு வசனம் பாவிக்கப்பட்டது. 'தடுக்கிவிழுந்து செத்தாலும் லெப்.கேணல்தான்' என்பதே அந்த வசனம். களத்தில் ஏற்படும் மரணங்களை மட்டும் வீரச்சாவு என்றும், ஏனையவற்றை சாவு என்றும் புலிகள் வகைப்படுத்திய பின்னர், தர நிலை வழங்குவதிலும் சில மாறுதல்களை ஏற்படுத்தினர். மரணத்தின் பின்னரான தரநிலை வழங்குவதில், அவர் களத்தில் மரணிக்கிறாரா, வேறுவிதமாக மரணிக்கிறாரா என்பதும் தாக்கம் செலுத்தியது. சோ தடுக்கி விழுந்து மரணமானாலும் லெப்.கேணல் என்றுதான் பேசிக் கொண்டனர். ஆனால், இறுதியில் அவரது பெயர் புலிகளின் மாவீரர் பட்டியலில் சேர்க்கப்படவேயில்லை. காரணம் அவரது மரணம் அப்படி.

**அவர் தற்கொலை செய்து கொண்டார்!**

அதுவும் காதலுக்காக. அவரும், காதலியும் கட்டியணைத்தபடி கைக்குண்டை வெடிக்கவைத்து தற்கொலை செய்துகொண்டனர். அவரது காதலியும் போராளிதான். மோட்டார் படையணியிலேயே பொறுப்பாளராக இருந்தவர். சிறிய கோயிலொன்றுக்குள் இருவரும் குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்துகொண்டனர்.

புலிகள் அவர்களை மாவீரர் பட்டியலில் இணைக்கவில்லையே தவிர, அவர்களின் காதலின் மகோன்னதத்துவத்தை புரிந்து கொண்டனர். இருவரது உடல்களையும் அருகருகேதான் புதைத்தனர்.

சோவிற்கு இப்படியொரு காதல் விடயம் இருந்தது பிரபாகரனிற்கு தெரியாது. சோ தனது காதலை இயக்கத்தில் பதிவுசெய்து வைக்கவில்லை. அவர் கடமையுணர்வுமிக்கவர். நேரம் வரும்போது காதலை இயக்கத்திடம் சொல்லலாம் என நினைத்திருந்தார். சோவின் மரணச்செய்தியை கேட்ட பிரபாகரன் மிக வருந்தினார். 'இந்த விடயம் ஆரம்பத்திலேயே தெரிந்திருந்தால், திருமணமே செய்து வைத்திருப்பேன். அவசரப்பட்டுவிட்டார்' என வருந்தினார்.

சோவின் மரணத்திற்கு காரணமாக அமைந்த சம்பவம் என்ன? மாலதி படையணி தளபதி விதுஷாதான் அந்த மரணத்திற்கு காரணமா? அக்கினோவை புலிகள் ஏன் விட்டுப்பிடித்தனர்? நிலாவினி விசயத்தில்நடந்தது என்ன? இதையெல்லாம் அடுத்த வாரம் குறிப்பிடுகிறேன்.

*(தொடரும்)*

---

**9-ம் பக்க தொடர்ச்சி...**

அணையின் உச்சத்தில் பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ள பதுங்குகுழியில் இருக்கும் புலிகள், இராணுவத்தை சுட்டுவிட முடியும். இந்த மண் அணையில் புலிகளின் அணிகள் நிலைகொண்டிருந்தபோது தளபதி பானு அந்த பகுதிக்கு பொறுப்பாக இருந்தார். இந்த மண் அணையை இராணுவம் கைப்பற்றியது புலிகளின் சரியான திட்டமிடலின்மை காரணமாகவே. மண் அணையை புலிகள் முழுமையாக அமைக்கவில்லை. ஜெயபுரத்திற்கும் பல்லவராயன்கட்டிற்கும் இடைப்பட்ட வெட்டவெளி பகுதியில் 400 மீற்றர் நீளமான பகுதியில் மண் அணை அமைக்கப்படவில்லை. அதுபோல கிராஞ்சிக்கு அண்மையிலிருந்த நீர்ப்பரப்பு ஒன்றிற்கு எதிரிலும் மண் அணை அமைக்கப்படவில்லை. இரண்டு பகுதியிக்குள்ளாளும் இராணுவம் முன்னேறாது என பானு கணக்கிட்டிருந்தார். இரண்டரை மாதம் இந்த மண் அணையை தகர்க்க முடியாமல் இராணுவம் திண்டாடி, இறுதியில் இரவோடு இரவாக இராணுவ அணியொன்று வெட்டவெளியை கடந்து, புலிகள் மண் அணை அமைக்காத பகுதிக்குள்ளால் நுழைந்து, புலிகளின் பெரும் மண் அணையை உடைத்துக்கொண்டு உள்நுழைந்தனர்.

சிதம்பரம் மூலம் இந்தியாவுடன் பேச்சு நடத்தும் சமயத்தில் இராணுவத்தால் தொடர்ந்து முன்னேற முடியாதென்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென புலிகள் திட்டமிட்டதும் நடக்கவில்லை.

குறைந்த பட்சம் அமெரிக்க தேர்தல் வரையாவது இராணுவத்தை கிளிநொச்சிக்கு அண்மையாகவும் வராமல் தடுக்க வேண்டுமென புலிகள் நினைத்தார்கள். அதுவும் நடக்கவில்லை.

புலிகளின் சர்வதேச பொறுப்பாளராக குமரன் பத்மநாதன் அப்பொழுது தாய்லாந்து, மலேசியாவில் இருந்து செயற்பட்டார். அமெரிக்க தரப்புடன், கே.பியின் ஆட்கள்தான் பேசினார்கள். பராக் ஒபாமாவின் முதன்மைசெயலாளர் மட்டத்தில் இந்த பேச்சுக்கள் நடந்தன. இந்திய தேர்தலில் பா.ஜ.க வெல்லுமென நிலவிய கணிப்பைத்தான் ஒபாமாவின் வட்டாரங்களும் நம்பினார்கள். பா.ஜ.க ஆட்சிக்கு வந்ததும், 2009 மே, யூன் மாதங்களில் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து, யுத்தத்தை நிறுத்தலாம், அதுவரை எதுவும் சாத்தியமாகும் வாய்ப்பில்லையென்பதை அமெரிக்க தெளிவாக சொல்லிவிட்டது.

இந்த இழுபறிகள் நடந்து கொண்டிருக்க, 2009 ஜனவரியில் இராணுவம் பரந்தன், கிளிநொச்சி நகர்களை கைப்பற்றியது. இந்தியா, அமெரிக்காவை தலையிட வைக்க எந்த இடங்களை இழக்ககூடாதென நினைத்தார்களோ, அந்த இடங்களை இராணுவம் கைப்பற்றிவிட்டது.

நிலைமைகைமீறி போகிறதென நினைத்த நடேசன், பிரபாகரனுடன் ஆலோசிக்காமல் இந்தியாவுடன் ஒரு சமரச முயற்சியில் இறங்கினார். புலிகளின் முக்கியஸ்தர் பாலகுமாரன், சமாதானசெயலக பொறுப்பாளர் புலித்தேவன், கடற்புலிகளின் தளபதி சூசை, நீதித்துறை பொறுப்பாளர் பரா, நிதித்துறை பொறுப்பாளர் தமிழேந்தி உள்ளிட்டவர்களுடன் ஆலோசித்துவிட்டே முயற்சியை ஆரம்பித்தார். மலேசியாவிலிருந்த கே.பிக்கும் விசயத்தை சொன்னார்கள். நடேசன் வன்னியிலிருந்து ஒரு முனையில் சமரச முயற்சியை நகர்த்த, கே.பி இன்னொரு தரப்பினூடாக சமரச முயற்சியில் ஈடுபடுவதாக முடிவானது.

நடேசன் உடனடியாகவே காரியத்தில் இறங்கினார். காங்கிரசை அணுக நடேசன் தேர்வுசெய்தது ஒரு பெண்ணை!

அவர் யார்? நடேசனின் முயற்சிக்கு இந்தியாவின் ரியாக்சன் எப்படியிருந்தது? பிரபாகரன் அதை அறிந்தாரா? இவற்றை பற்றி அடுத்தவாரம் குறிப்பிடுகிறேன்.

*(தொடரும்)*







# மந்திரம்... தந்திரம்!

## கீழே விழாத டம்ளர்கள்!

நான்காக மடிக்கப்பட்ட ஒரு சிறிய துணி, இரண்டு பிளாஸ்டிக் டம்ளர்கள், ஒரு தடிமனான புத்தகம் ஆகியவற்றை எடுத்து, டேபிள் மீது வையுங்கள்.

"இது, மந்திரப் புத்தகம். இந்த பிளாஸ்டிக் டம்ளர்களை எந்தப் பிடிப்பும் இல்லாமல் கவ்விப் பிடித்துக்கொள்வதை பார்க்கிறீங்களா?" என நண்பர்களிடம் சவால்விடுங்கள்.

பிறகு, கைக்குட்டையை விரித்துக் காண்பித்து, மேஜை மீது வைத்து, அதன் மீது புத்தகத்தை வையுங்கள். துணியால் அந்தப் புத்தகத்தை மூடுங்கள். மூடப்பட்ட துணியோடு சேர்த்து, புத்தகத்தைக் கையில் எடுத்து, திருப்பிப் பிடித்துக்கொள்ளுங்கள்.

அதன் மையப் பகுதியில், அருகருகே பிளாஸ்டிக் டம்ளர்களைக் கவிழ்த்து வையுங்கள். அப்படி வைக்கும் முன்பு, டம்ளர்களுக்குள் எதுவும் இல்லை என்பதை நண்பர்களுக்குக் காண்பியுங்கள். இரண்டு டம்ளர்களுக்கும் இடையில் கட்டைவிரலை வைத்துக்கொள்ளுங்கள்.

மந்திரக்குச்சியை டம்ளர்களின் மீது வைத்து, மந்திரத்தை உச்சரியுங்கள். புத்தகத்தை மெதுவாக மேலே உயர்த்தி, நிதானமாகக் கவிழ்த்து, குச்சியை எடுத்துவிடுங்கள்.

வாவ்... இரண்டு டம்ளர்களுக்கும் நடுவில் உங்கள் கட்டைவிரல் மட்டும்தான் இருக்கும். ஆனால், எந்தப் பிடிமானமும் இல்லாமல் டம்ளர்கள் புத்தகத்தோடு



ஒட்டிக்கொண்டு நிற்கும். எப்படி இப்படி?

இதுதான் ரகசியம். துணியின் மையப் பகுதியில் தண்ணீர் போன்று நிறமற்ற அல்லது எளிதில் கண்ணுக்குத் தெரியாத சாம்பல் நிறத்தில் மிகச் சிறிய இரண்டு பந்துகளை (அல்லது பட்டன்களை) கட்டை விரல் தடிமன் இடைவெளியில் ஒட்டிவிடவும். துணியை விரித்துக் காண்பிக்கும்போது, பட்டன்கள் ஒட்டாத பகுதியைக் காண்பிக்கவும். மேஜையில் விரித்து வைக்கும்போது, பட்டன் பகுதியின் மீது புத்தகத்தின் மையப் பகுதி வருமாறு வைத்துவிடவும். கட்டைவிரலை, இரண்டு பட்டன்களுக்கும் இடையில் பிடித்துக்கொள்ளவும்.

இரண்டு டம்ளர்களையும் கவிழ்த்து, தலா ஒரு பட்டன் உள்ள பகுதியில் வைத்து, இரண்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் கட்டைவிரலால் அழுத்தவும். பட்டன்களின் முனைகளும் உங்கள் கட்டைவிரலும் சேர்ந்து டம்ளர்களின் முனைகளை இறுக்கிப் பிடித்துக்கொள்கின்றன. புத்தகத்தைக் கவிழ்த்தாலும் டம்ளர்கள் விழாது. ●

### ம(த)ந்திர டிப்ஸ்!


மஜிக் என்பது நம் கையின் லாகவத்தில்தான் இருக்கிறது. எவ்வளவு லாகவமாகவும் விரைவாகவும் செயல்படுகிறோம் என்பதைப் பொறுத்தே, எதிராளியை அட்ராக்ஷன் செய்ய முடியும்.

கைகளின் லாகவத்துடன் உங்கள் நடிப்பும் முக்கியம். டம்ளர்களுடன் புத்தகத்தைக் கவிழ்க்கும்போது, அவை விழாமல் இருக்க, நீங்கள் அவற்றுடன் பேசுவதுபோல நடிக்கும்போது, பார்ப்பவர்கள் உங்கள் கட்டைவிரல்களுக்கு இடையே உற்றுப்பார்ப்பதைத் தவிர்ப்பார்கள்.

நீங்கள் ஒட்டும் மணிகள் அல்லது பட்டன்கள், பார்ப்பவர்களுக்குத் தெரிந்துவிடாத வகையில் துணியின் நிறமும் டிசைனும் இருக்க வேண்டும்.

---

'பழங்கள் எதுவும் வேணாம்; சாப்பிட மூங்கில் மட்டும் போதும்'னு சொல்லுது பாண்டா குட்டி. சரியான பாதையைக் காண்பிக்க, நீங்கதான் நல்ல வழிகாட்டி!



பக்காவா கண்டுபிடி 10 வித்தியாசங்களை!





வித்தியாசங்களின் விடை





முன்கதை: அபூர்வ சக்தி படைத்த நாகராஜ், ஸ்பெயின் நாட்டில் மர்கோஸ் என்ற பெயரில் இருக்கும் தீவிரவாதக் குழுவைத் தேடி வருகிறார். அவருடன் இணையும் அசிஸ்டெண்ட் போலீஸ் கமிஷ்னர் ஜோ, கால்பந்தாட்டம் நடக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்கிறார்.




தொடர்ச்சி அடுத்த பக்கம்...









இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 17.12.2017 அன்று வெளியிடப்பட்டது.